# பாலகுமாரன்



# திருமணத் தீவு

# திருமணத் தீவு

"இங்கே வா செல்லக்கிளி இங்கே வா."

ச்சடக் என்ற ஓசையுடன் அந்தக் கம்பிக் கதவு மேல் நோக்கித் தள்ளப்பட்டது. தமயந்தி ஆவலுடன் கதவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அச்சம் கொள்ள வேண்டாம் செல்லக்கிளி வந்திருப் பவர் உன் வரவுக்காக காத்திருக்கார். நீ வெளியே வந்து என்ன செய்யப் போகிறாய் என அதிசயத்தோடு பார்த் துக் கொண்டிருக்கிறார் இவர் படித்தவர் என்பதும் பண் பானவர் என்பதும் உனக்கு பார்த்தாலே தெரிய வில்லையா. அச்சம் எதற்கு செல்லக்கிளி வெளியே வா."

தமயந்தி ஆச்சர்யத்துடன் சீட்டுகள் பரப்பி கிளி யோடு பேசிக் கொண்டிருந்த ஆளை பார்த்தாள் அவன் கூண்டு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான்

கிளி எட்டிப் பார்த்தது. உடம்பை அசைத்து பின்னே போயிற்று. சிவந்த அலகு மட்டும் வெளியே தெரிந்தது.

"செல்லக்கிளி நீ சந்தேகப்படுவது புரிகிறது. எதிரே உட்கார்ந்திருக்கும் பெண்மணி இன்னும் காசு தர வில்லையே தருவாரோ மாட்டாரோ என்று எண்ணு கிறாய். ஒரு ரூபாய் நாலணா அவர் நிச்சயம் தருவார். அவர் தராது போனாலும் நாம் அவருக்கு சீட்டு எடுத்து பார்த்துவிட வேண்டும்

உன் மீது நம்பிக்கை வைத்து தன் எதிர்காலம் பற்றி தெரிந்து கொள்ள ஆவலாய் இருப்பவரை நீ ஏமாற்றலா காது செல்லக்கிளி.

தமயந்தி திடுக்கிட்டாள்.

"நான் காசு கொடுத்துடறேங்க" என்று பர்ஸ். பிரித் தாள். இரண்டு ரூபாய் நீட்டினாள். அவன் தரை தட்டி காட்டினான்.

காக அங்கே வைக்கப்பட்டதும் கிளி வெளியே
வந்தது.

'ஐயோடி' இதுக்கு இருக்கிற அறிவப்பார்த்தியா.
மனசு வியந்தது. பாக்கி முக்கா ரூபாய் இந்த ஆள் தந்த
பிறகுதான் கிளி பார்க்குமா. இல்லை பார்த்த பிறகுதான்
பாக்கி தருவானா'' கேள்வி வந்தது.

'செல்லக்கிளி நமது குல தெய்வமான பிள்ளையார்
பட்டி அப்பனை கும்பிட்டுக்கொள். எதிரே உட்கார்ந்
திருக்கிற தமயந்தி என்கிற இளம் பெண்ணுக்கு வாக்கு
சொல்லுவதற்குமுன் அப்பனுக்கு பூ போடு, பாதம்
தொட்டு கும்பிடு. நின்று நெஞ்சார வேண்டிக் கொள்.''

தமயந்தி உலகத்தையே மறந்து அந்த வாலற்ற கிளி
யைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் கிளி சிறிய பொம்மை ஏணியில் உட்கார்ந்து
உட்கார்ந்து ஏறியது. கூண்டு மேல் பக்கம் போய்
நின்றது. அங்கிருந்த ஒற்றை மல்லிகையை எடுத்து
பிள்ளையார் அருகே போட்டது. அருகே அசையாமல்
நின்றது.

''ஐய்யோ கிளி பூஜை பண்ணுமா.''

'ஸ்ஸ்' அவன் அவள் பேச்சுக்கு விரலை தன் வாயில்
வைத்து அதட்டினான்.

''இன்னொரு பூவைப் போட்டு மறுபடியும் பிள்ளை
யார் பட்டி அப்பனை வேண்டிக்கொள்.''

மறுபடி கிளி பூ போட்டது, நின்றது.

''இங்கே வா செல்லக்கிளி இங்கே வா, தமயந்தி என்
கிற பெயருக்குரியவரின் ராசிக்கான சீட்டு எடுத்து அவர்
கடந்த காலம் நிகழ் காலம் வருங்காலம் மூன்றையும்
தெளிவுறக் காட்டு உள்ளதை உள்ளபடி சொல். படித்த
வர்களாயினும், பாமரர்களாயினும் செல்வந்தர்கள்
ஆயினும் ஏழைகள் ஆயினும் பட்சி ஜோஸ்யம் பொய்க்
காது என்று நிருபணம் செய்.



தமயந்தி என்கிற பெருமைக்குரியவரின் தொழில், நிதி
நிலைமை செல்வாக்கு. அதிகாரம் மேன்மை. மேற்
படிப்பு, இன்றைய பிரச்சனை, நாளைய விடிவு எல்லாம்
காட்டும் ராசிச் சக்கரத்தை காலக் கண்ணாடியென
தேர்ந்தெடு.

இவர் நெஞ்சுலே நினைத்திருக்கும் காரியம் கை
கூடுமா கூடாதா. கூடுமெனில் எப்போது. கூடாதெனில்
ஏன். எல்லாம் பிட்டு வை. பட்சி ஜோஸ்யம் பொய்
சொல்லாது என்று சாட்சி சொல்.

கிளி அவர் பேச சடசடத்து தரை இறங்கியது.
சரிவாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அட்டைகளை
புரட்டத்துவங்கியது. ஒரு அட்டையை புரட்டி போட்டு
களைத்ததுபோல் நின்றது.

மறுபடி நடுவே நகர்ந்து மொத்தமாய் ஒரு ஏழு
அட்டைகளை புரட்டியது. இன்னொன்றை தள்ளியது.
அடுத்ததை அலகால் கொத்தி கௌவி இழுத்து வந்து
தனியே போட்டது.

நிமிர்ந்து நான்கு புறமும் பார்த்தது.

தமயந்தி அட்டையைப் பார்க்காமல் அதில் அவ
ளுக்கு என்ன எழுதப்பட்டிருக்கும் என்று யோசிக்காமல்
கிளியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.
'என்ன அறிவு இந்தக் கிளிக்கு மனிதர்கள் பேசுவது
எவ்வளவு தெளிவாய் புரிகிறது இந்தப் பறவைக்கு
இப்படி ஒரு பறவை வீட்டில் இருந்தால் எவ்வளவு
நன்றாய் இருக்கும்.

கிளி அட்டை மட்டும்தான் புரட்டுமா? பூ போட்டு
பூஜை மட்டும்தான் செய்யுமா? ஜோஸ்யத்துக்கு காசு தர
வில்லையென்றால் கூண்டுவிட்டு வராது சந்தேகப்படுமா?

தமயந்தி துவரம்பருப்பு காலி சாயந்திரம் வாங்
கிண்டு வா, பால் கார்ட் மாத்தணும். பஸ்ஸுக்கு
சில்லறை எண்பது பைசா இன்னும் எடுத்து வச்சுக்
கலை.

தமயந்தி பக்கத்து வீட்டு அம்மா நாலு தடவ குறுக்கும் நெடுக்கும் உன் போர்ஷனை பார்த்துண்டே நடந்து போய்ட்டா அநேகமா காப்பி பொடியை கடன் கேட்பா, காப்பி பொடி டப்பாவ இடம் மாத்தி வை.

ஏய் தமயந்தி ப்ரா ஜாக்கெட்டுக்கு வெளிய தெரியுது பார். இழுத்து விட்டுக்க.

இந்த காட்டன் பிரிண்டட் சாரி உனக்கு நல்லா இருக்கு ஜாக்கெட் தான் லூஸாதச்சுட்டான். மணி எட்டு பத்து பள்ளிகூடத்துக்கு கிளம்பு. டாட்டா பைபை சியர்யூ

ஒரு கிளி வீட்டில் இருந்து பேசினால் எவ்வளவு நன்றாய் இருக்கும்.

வாழிய நலம். தமயந்தி ராசிக்கு வந்திருப்பது ஆண்டாள். சூடிக்கொடுத்த சுடர்கொடி. கோவிந்தனை மணமுடித்த கோதை. பெரியாழ்வார் பெற்றெடுத்த திருமகள்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் தமயந்தி அவர்களுக்கு அருள் பாலிக்கும் தெய்வமாய் அதிர்ஷ்டம் கொண்டு வரும் அம்சமாய் வந்திருக்கிறார்கள். ஆண்டாளம்மா மானுடப் பிறவி ஆனால் இறைவன் அம்சம். உங்களைப் போன்ற சாதாரணப் பெண் ஆனால் மிகப்பெரிய வரம் பெற்று கடவுளோடு கலந்தவர்கள்.

இந்தப்படம் உங்களுக்கு துல்லியமாக ஒரு செய்தியை சொல்கிறது. தமயந்தி என்பது யார் என்று சொல்லுகிறது. தன் ராசிக்கு ஜோஸ்யம் பார்க்க வந்திருக்கும் நீங்கள் சாதாரணமான பெண்ணல்ல. தெய்வ அம்சம் உங்களுக்குள்ளே குடிகொண்டிருக்கிறது சர்வ அங்க அவய லட்சணங்களோடு நீங்கள் பெண்ணாய் இங்கு பிறந்திருப்பினும் மிகப்பெரிய கனவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் ஆண்டாள் அம்மாவுக்கு தான் தெய்வாம்சம் என்பது தெரியாது. ஆடிப்பாடி பொம்மை செய்து



பூஜித்து தோழிகளோடு நீராடி தவவாழ்க்கை வாழ்ந்தவள். உங்கள் வாழ்க்கையும் தவவாழ்க்கை என்று இந்தப்படம் சொல்கிறது. திருமகளே ஆண்டாளாய் அவதரித்தது உண்மையென்றாலும் ஆண்டாள் செல்வச் செழிப்பானவர் அல்ல என்பதுபோல் தமயந்தி என்கிற இந்த ராசிக்காரரும் திருமகள் அம்சமாக பிறந்திருந்தாலும் இப்போது செல்வச் செழிப்பு இல்லாதவராய் இருக்கிறார்.

''அம்மா இது உண்மைதானா'' ஏதோ மிகப்பெரிய விஷயம் கண்டுபிடித்து வி டதைப் போல அந்த கிளிக்கூண்டு ஆள் கேட்டான்.

தமயந்தி ''ஆமாம்'' என்று தலையசைத்தாள்.

''இந்த ராசிக்காரரின் இன்றைய நிலையை சொன்னதைப் போலவே எதிர்காலம் குறித்து இந்த சீட்டு என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.''

''தமயந்தி அவர்களின் வருங்காலம்பற்றி இந்தச் சீட்டு என்ன சொல்கிறது என்று பார்ப்போம் இந்த ராசி சக்கரத்தின் அம்சமாக ஆண்டாள் அம்மாள் வந்திருப்பதால், அந்த அம்மாவின் கனவு பலித்தது போலவே நீங்கள் கொண்ட எல்லா எண்ணங்களும் கனவுகளும் கண்டிப்பாக நிறைவேறும் என்று எங்கள் குல தெய்வத்தின் மீது ஆணையாக கூறுகிறேன்.

'நீங்கள் தொட்டது துலங்கும். நீங்கள் எடுத்துக் கொண்ட பணியில் மேன்மை பெறுவீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் உங்களுக்கு அடி பணிவார்கள். உங்களைப் பற்றி பின்புறம் பேசியவர்கள் காணாமல் போவார்கள். நிதி நிலைமை சீராகும். கடன் தொல்லை தீரும். உடன்பிறந்தார்கள் போல உங்களைச் சுற்றியுள்ள ஆண்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். நோய் நொடி எதுவும் தீண்டாமல் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.''

''இந்த ராசிக்காரர்களுக்கு வெய்யில் ஆகாது. இரவு நேரம் குளுமையில் உற்சாகமாக இருப்பார்கள். இடது

பக்கம் சுருண்டு தூங்குவது இவர்கள் இயல்பு. முடிந்த மட்டும் அதிகமாக நீர் அருந்த வேண்டும். காரமான பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும். உஷ்ண உணவுகள் கூடாது. ஆண்டாள் அம்மாவுக்கு பிடித்தமான சனிக்கிழமை அன்று பெருமாள் கோவில் போவதும், திருப்பதி வெங்கடேச பெருமாளுக்கு நேர்ந்து கொள்வதும் நல்லன பயக்கும். நலம் அதிகரிக்கும். நன்மைகள் பெருகிப் பொங்கும். வாழ்வாங்கு வாழ்ந்து வையகம் புகழ வளர் வீர்கள் என்பதே கள்ளமின்றி என் செல்லக்கிளி சொன்னது உண்மை. எங்கள் குலதெய்வமான பிள்ளையார் பட்டி விநாயகர் மீது ஆணை.''

பெட்டியை திறந்து ஐம்பது காசும், இருபத்தைந்து காசுமாய் இரண்டு நாணயங்களை அவள் எதிரே போட்டான் தமயந்தி பொறுக்கிக்கொண்டாள். அவன் சீட்டை மடித்து அட்டையை பொறுக்கி கலைத்துப் போட்டான்,

''பிறகு வேற யாருக்கு பார்க்கணும்'' என்பதைப் போல் அவளை நோக்கினான். தமயந்தி குனிந்து அந்த கிளியை பார்த்தாள். அந்த கிளி ஜோஸ்யம் மிகச் சரியாக இருந்தது என்றே அவளுக்குப்பட்டது.

அந்த சாதாரணக்கிளி தன்னைப்பற்றி எவ்வளவு துல்லியமாய் சொல்லியது என்று அதிசயப்பட்டாள். அந்தக் கிளி கூண்டு முனையில் ஒண்டிக்கொண்டு இருந்தது. அதற்கு அடுத்த கூண்டு காலியாக இருந்தது. அதற்கும் அடுத்த கூண்டில் ஒரு சிட்டுக்குருவி நாலா பக்கமும் நகர்ந்து கொண்டு இருந்தது.

''என்ன பாக்கிறீங்க'' அந்த கிளி ஜோஸ்யக்காரன் சற்று அதட்டினதுபோல் அவளை கேட்டான்.

''இந்த கிளி பேசுமா?''

''எப்பனா பேசும், ஏன்?''

''இல்லை. சும்மாக் கேட்டேன்.''

''ராசிபலன் பாத்தாச்சில்ல கிளம்புங்க நீங்கஉட்கார்ந்திருந்தா அடுத்தஆள் வராது'' தமயந்தி எழுந்துநின்றாள்.



''இந்த கிளி என்ன விலை?''

''ஆயிர ரூபா, வாங்கிக்கறீங்களா?''

''ஐயோ இல்லை.''

தமயந்தி நகர்ந்தாள். தெருவோடு நடக்கத் துவங்கினாள்.

''ரெண்டு இட்லி சாப்பிட்டுவிட்டு ஹோட்டல் என்ன விலைன்னு கேப்பாங்க போலிருக்கு. விலைகேக்கறதப் பாரு ஏங்க, மூர்மார்க்கெட்ல கிளி சலிசா கிடைக்கும். நாலஞ்சு வாங்கிட்டு வாங்க நான் பேசச் சொல்லி தரேன்' அந்த கிளி ஜோஸ்யக்காரன் உரக்கக் கத்தினான்.

தமயந்தி நடையை வேகமாக்கினாள். கிளி என்ன விலை என்று கேட்டது தப்பா என்று யோசித்தாள். அவன் தொழிலுக்கு அவன் கிளி வச்சிருக்கான். அதைப் போய் கேட்டா அவன் கோபப்பட மாட்டானா. கேட்டது முட்டாள்தனம் என எண்ணினாள். கேட்டா என்ன தப்பு, நல்ல புடவை யாராவது கட்டியிருந்தா புடவை என்ன விலைன்னு கேட்க மாட்டாங்களா, கெட்டிக்கார கிளியா இருக்கே கிளி என்ன விலைன்னு கேட்டேன். கேட்டது தப்பா.

கேட்டு என்ன பலன். விலை கேட்டு கிளியோ, புடவையோ வாங்க முடியாது. விலை கேட்டு தெரிந்துகொள்வதிலேயே ஆவல் அடங்கிவிடுகிறது.

பின்னொரு சமயம் நிதி நிலைமை சரியாயிருக்கிற போது வாங்கலாம் வாங்க முடியும். வாங்க வேண்டும் என்கிற ஆவல் அதிகரிக்கும் ஆனால் எப்போது நிதி நிலைமை சரியாகும் என்றுதான் தெரியவில்லை.

சரியாகும் என்று கிளி சொல்லியிருக்கிறது கடன் தொல்லை தீரும், என்று ராசிச்சக்கரம் சத்தியம் செய்து இருக்கிறது. இது கள்ளமின்றி செல்லக்கிளி சொன்ன உண்மை. பிள்ளையார்பட்டி விநாயகர் மீது ஆணை.

எங்கேயாவது பிள்ளையார்பட்டி விநாயகர் படம் பார்த்தால் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு

ரூபாய் இரண்டு ரூபாய்க்கு சின்ன படம் கிடைக்கும். வாங்கி சமையல் அறையில் வைத்து விடவேண்டும், குளித்து புடவை கட்டிக் கொண்டவுடன் ஒருநமஸ்காரம் செய்து உன்மீது சத்தியம் செய்து சொன்ன ஜோஸ்யம் பலிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும்.

பிள்ளையார் படம் வாங்குவதா ஆண்டாள் படம் வாங்குவதா. என் ராசிக்கு ஆண்டாள் அம்சம் இருக்கிறது என்றல்லவா சொல்கிறார்கள். திருமகளே ஆண்டாளாக பிறந்தாலும் அதிகச் செல்வச் செழிப்பு இல்லாதவர் வீட்டில் பிறந்தது போல என் முகத்தில் திருமகள் அம்சம் இருந்தாலும் பர்சில் காசு இருக்காது என்று சொல்கிறார்கள்.

ஆனால் பர்சில் நாற்பத்தேழு ரூபாய் இருக்கிறது. இந்த மாதம் மீதி இருக்கிற இருபத்தைந்து நாட்களும் இதை வைத்துத்தான் ஓட்ட வேண்டும்.

இரண்டாயிரத்து இருநூற்றிநாற்பத்தைந்து ரூபாயில் பிடித்தம் போக ஆயிரத்து எண்ணூறு தந்தார்கள். வெளியே வாங்கின கடனுக்கு வட்டி கொடுத்த பிறகு, மளிகை சாமான் வாங்கின பிறகு நூற்று நாற்பது ரூபாய் வாடகையும் எண்பது ரூபாய் பாலும் அறநூற்றுச் சொச்சம் மளிகை சாமானும், வண்ணான் செலவும் ஒரு நாளைக்கு நாலு குடம் தண்ணீர் கூலிக்கு கொடுத்த பிறகு நாற்பத்தேழு ரூபாய் மீதி இருக்கிறது. இரண்டு ரூபாய்க்கு படம் போக மீதியில் இருபத்தைந்து நாட்களும் ஓட்ட வேண்டும். செலவு என்று எதுவுமில்லை. இருந்தாலும், நாற்பத்தைந்து ரூபாய்தான் இருக்கிறது என்று கவலையாக இருக்கிறது. இந்த கவலை நிரந்தர கவலை. நாலு வருஷமாய் இதேபோன்று கவலை. எப்போது தீரும் என்று தெரியவில்லை.

வெங்கடகிரி புடவைக்காரன் பள்ளிக்கூடத்திற்கு வந்தான். எல்லா டீச்சர்களும் வகுப்பை விட்டு ஓடிப்போய் புடவைகளை பார்த்தார்கள்.



தமிழ் பண்டிட் நாலு புடவை எடுத்துக்கொண்டாள். கணக்கு சௌமியா ஐந்து புடவைகள் எடுத்துக் கொண்டாள். அநேகமாய் எல்லா டீச்சர்களும் புடவை எடுத்துக் கொண்டார்கள். தமயந்தி புடவையை பார்க்கவே போகவில்லை. போனால் ஆசை வரும். ஆசைபட்டால் ஆசைபட்டது நிறைவேற காசு வேண்டும். மூன்றில் ஒரு பங்கு முன் பணமாக கொடுக்க வேண்டும். மீதி தவணையில் அடைக்க வேண்டும் அந்த தமிழ் பண்டிட் நாலு புடவைக்கும் ஒட்டு மொத்தமாய் காசு கொடுத்து விட்டாளாம் நாலு புடவையில் இரண்டு புடவை அவளுக்காம், ஒரு புடவை மருமகளுக்காம். இன்னொரு புடவை மகளுக்காம். எல்லா புடவையும் ஒரே விலையாய் இருக்கும்படி பாத்துக் கொண்டாளாம். ஆனால் எல்லாமுமே நல்ல புடவையாம்.

வெள்ளை வெளேரென்று தலை நரைத்துப்போன அந்த தமிழ் பண்டிட் அசாத்திய புடவை மோகம் கொண்டவள், பார்டர் போட்ட ரவிக்கையோடு அவளை பார்க்கும்போது அந்த நரைத்த தலையையும் மீறி அவள் நன்றாக இருப்பது தெரிந்தது. நல்ல புடவையால் பெண்களுக்கு அழகைவிட அதிகாரம் அதிகம் வந்துவிடுகிறது. நடையில் சுறுசுறுப்பு வந்து விடுகிறது நல்ல உடை என்பது தன்னம்பிக்கை.

ஆனால் கணக்கு டீச்சர் சௌமியா என்ன உடுத்தினாலும் கவர்ச்சியாக இருக்கிறது அவள் உடம்பு அப்படி உடுத்துகிற விதம் அப்படி டோட்டல் எல்லோ. டோட்டல் கிளி பச்சையில் வருகிறாள். அநேகமாய் ஷிபானில்தான் வருகிறாள். இம்போர்ட்டட் நைலக்ஸ் கட்டுகிறாள், அவள் நடக்கிறபோது புடவை மடிப்புகள் விசிறியாய் ஆடுகின்றன. முன்தானை படர்ந்துதான் வருகிறது. மூக்கைச்சுற்றி முத்தமிடும் வாசனையாய் சென்ட் போட்டுக்கொண்டு இருப்பாள். ஒரு குழந்தை வாசனை மாதிரி, ஒரு தாய்ப்பால் வாசனை மாதிரி மிக வினோதமாய் அந்த சென்ட் இருக்கும். லோநெக் போடுவாள்.

ஒற்றையாய் புடவையை போர்த்தி மொபட்டில் இறங்குவாள். தலையிலும் ஒற்றைப் பூவைதான் வைத்துக்கொள்வாள். அவள் உடுப்புக்காகவே ஒரு மாடர்ன் பட்டாளத்தை சேர்த்து வைத்திருக்கிறாள். எல்லா மனைவிகளும் யூனிஃபார்மில் வர ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புடவையில் டீச்சர் வர அந்த டீச்சர் நன்றாக சொல்லிக் கொடுத்தாலும், சொல்லிக் கொடுக்காவிட்டாலும் நல்ல டீச்சர்தான். ஹீரோயின்தான்.

கணக்கு சௌமியா, வெங்கடகிரி சேலை அவளுக்காக வாங்கவில்லையாம். அவள் மாமியாருக்கு வாங்கிக் கொண்டாளாம். அவள் மாமியார் பெரிய சொத்துக்காரி.

''இப்படி புடவை நகை பாத்திரம் எதாவது வாங்கிக் கொடுத்தாத்தானே வீட்டை எங்க பேருக்கு எழுதி வைக்கும். இன்னைய தேதிக்கு மாம்பலம் பங்களா இருபத்தைந்து லட்சம் இருக்கும். இடிச்சு பேங்க்லே கடன் வாங்கி பதினாறு பிளாட் கட்டினா வித்துட்டு வித்த காச பேங்க்லே போட்டுட்டு வட்டி வாங்கியே குடித்தனம் பண்ணலாம். வேலைக்கு கும்புடு போட்டுடலாம். நோ மோர் மேத்தமெட்டிக்ஸ். நோ மோர் மொபெட் சவாரி அன்ட் நோ மோர் பள்ளிக்கூடம் வீட்டையும் பசங்களையும் கவனிச்சுண்டு மதியானம் ஏ. சி. ரூம்ல இழுத்து போர்த்திக்கிட்டு தூங்கலாம் மச்சினர் கனடாவுல இருக்கார் அங்கே போய் ரெண்டு மாசம் இருந்துட்டு வரலாம்.''

ஏதேதோ சௌமியா சொல்லிக்கொண்டு இருப்பாள்.

ஓய்வறையில் உள்ள அத்தனை டீச்சரும் வாய் பிளந்து கேட்டுக்கொண்டு இருப்பார்கள். அந்த செண்ட் கூட கனடாவில் இருந்து வந்ததாம், பெயர் பாய்சனாம்.

பாய்சன் வருதுடி என்று ஏதோ ஒரு டீச்சர் சொல்ல அது அவள் காதில் விழுந்தது.

''நானா பாய்சன், உன் நெஞ்சுக்குள்ள இந்த பொறாமையிருக்கே அதான் பாய்சன். நான் போட்டுண்டு இருக்கற பாய்சன் மணக்கும். உன் நெஞ்சுக்குள்ள இருக்கிற பாய்சன் நாறும். பசங்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் டீச்சர் நாறாமல் இருக்கணும். ஆரோக்கியமாய் இருக்கிறதுக்கு ட்ரை பண்ணு.''



ஆசிரியைக்கூட்டம் வாய் அடைத்துப் போயிற்று. அவள் போன பிறகு யாரோ பணத்திமிர் என்றார்கள் இல்லையென்று தோன்றிற்று. சீமாட்டி, புடவை உடுத்திக் கொள்கிறாள். பொறாமைப்பட்டு பாய்சன் வருகிறது என்று பேசியது தவறு என்கிற எண்ணம் வந்தது. மேற்கொண்டு வாதப் பிரதிவாதங்கள் வந்தபோது தமயந்தி சௌமியா பக்கம் நின்றாள்.

''பணக்காரிங்க எது பேசினாலும் நம்ம ஊர்ல பாதி பண்ணாடைங்க தலையாட்டும் நியாயத்தவிட பணம் தான் பெருசுன்னு நினைக்கிறா. காலம் அப்படி. காசு என்ன காசு மனுஷாளுக்கு குணம் முக்கியம் ஒரு டீச்சர் இப்படி உடுத்திண்டு வரலாமா. அவளோட ஒரு நாள் மொபெட்டில போய்ப்பாரு, பக்கத்துல நின்னு உத்து உத்து பார்க்கறானுங்க. இவளும் சிரிச்சுன்னு சும்மா நிக்கிறா அப்படித்தான் பார்ப்பான். பார்த்துட்டு போகட்டும் ஐ டோண்ட் கேர்ங்கிறா. இவள் டீச்சரா சினிமா ஸ்டாரா. காயமே இது பொய்யடா, இது காற்றடைத்த பையடான்னு எதுக்கு பாடியிருக்கு தின்னு தின்னு தசை பிதுங்கியிருக்கு, அது அழகுன்னு நெனைச்சுண்டு ஆடுறா. நாலு நாள் வயித்தால போனா கண் கொண்டு பார்க்கமுடியுமா கால் ஊன்றி நிற்க முடியுமா.'' வேறு டீச்சர் சிடுசிடுக்க அதற்கும் சௌமியா பதில் தந்தாள்.

''நீயும் காற்றடைச்ச பைதான். உனக்கு எதுக்கு குங்குமம் மல்லிகைப்பூ வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை எதுக்கு பட்டுப்புடவை. காவி உடுத்திக்கிறதுதானே. நான் இப்படியே இருப்பேன்னு 'சொல்லலியே. இருக்கிற வரைக்கும் உடுத்திக்கிறேன். உடம்புலே சக்தியில்லாத

போது எப்படியெல்லாம் உல்லாசமா இருந்தோம்னு நினைச்சுண்டு சந்தோஷமாய் இருப்பேன். சின்ன வயசுல டான்ஸ் ஆடி பிரைஸ்வாங்கினது இப்போ நினைச்சாலும் சந்தோஷமா இல்லையா. பஸ்ட் நைட்ல ஒரு புருஷன் பொண்டாட்டி தோள்ல கை வச்சு உனக்கு நான் செல்லப் பேர் வைக்கிறேன் இத்தனை சிகப்பா உனக்கு கன்னம் இருக்கே உன்னை இனிமே நான் ரோஸின்னு கூப்பிட போறேன்னு சொன்னது எழுபது வயசுல நினைச்சாலும் ஆனந்தமில்லையா கன்னத்துல ரோஸ் காணலேன்னு எழுபது வயசான்னா ஏங்குவாளா. கன்னத்துல ரோஸ் இருந்தாலும், இல்லாது போனாலும் புருஷனுக்கு ரோஸி தான். சாகற மட்டும் அவருக்கு நான் ரோஸிதான். வாழ்க்கைய ஏன் புரிஞ்சுகொள்ள மாட்டேங்கறீங்க. வாழ்க்கையை புரிஞ்சுக்கனும்ன்னா மாறதுக்கு ட்ரை பண்ணுங்க, ஐ மீன் சந்தோஷமா வாழறதுக்கு.''

தனக்கும் தன் புருஷனுக்கும் இடையே உள்ள நிலையை அந்த ரோஸி இல்லை. கணக்கு சௌமியா ஒளிவு மறைவாய் சொல்லிவிட்டாள். ஆசிரியைக் கூட்டம் திடுக்கிட்டது. இன்னும் பொறாமைப்பட்டது.

ஆனால் அந்த வாதத்திற்கு எதிர்வாதம் வைக்க முடியாமல் போயிற்று.

''தமயந்தி டீச்சர்ஸ் ரூம் உள்ளே எனக்கு சப்போர்ட் பண்ணியதா நான் கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம். எப்படி யார் சொன்னாலும் கேட்காத இந்த பள்ளிக்கூடத்துல என்ன நடந்தாலும் எனக்கு தெரியாம போகாது. உனக்கு என்ன ஹெல்ப் வேணும்ன்னாலும் சொல்லு என்னால முடிஞ்சதை செய்யறேன். உனக்கு சென்ட் பிடிக்குமா.''

''ஐயோ வேண்டாம்'' என்று தமயந்தி மறுத்தாள்.

''இம்போர்ட்டட் புடவை ஏதாவது இருக்கா.''

''இல்லை''யென்று தமயந்தி தயங்கிச் சொன்னாள்.



''எங்கிட்ட இருக்கு தர்றேன். ஆனா ஒண்ணு நான் ஒருதடவை உடுத்திண்டேன். ஒரே ஒரு தடவைதான். அது பரவாயில்லையா. ரொம்ப அழகு புடவை.''

தமயந்தி பேசாது இருந்தாள். கொஞ்சம் வெட்கப் பட்டாள்.

மறுநாள் பிளாஸ்டிக் பையில் புடவை கொண்டு வந்து கொடுக்கப்பட்டது.

பிளாஸ்டிக் பைக்குள் காக்கி கவர் போட்டு ஆறேழு ஸ்டேபிள் பின்கள் அடிக்கப்பட்டு இருந்தன.

''இது உன்னுடைய பர்த்டே பிரசன்ட். உன்னுடைய பர்த்டே எப்போன்னு எனக்கு தெரியாது உன் பர்த்டே வரையில் காத்து இருந்து கட்டிக்கனும்ன்னு அவசிய மில்லை. வெறும் புடவை தரக்கூடாது. இதுக்கு மேச்சா ரவிக்கை வாங்க எனக்கு டைம் இல்லே. அதனால புடவைக்குள்ளே ஐம்பது ரூபா வச்சுருக்கேன். வெட்கப் படாம வாங்கிக்கோ. ரவிக்கை தச்சுக்கோ.''

வீட்டிற்கு போய்தான் பார்சலை பிரித்துப் பார்க்க முடிந்தது. இம்போர்ட்டட் சாரியிலும் இத்தனை டல் கலர் சாரி வருமா. புடவை துரு கலராய் இருந்தது. கருப்பும், துருக்கலரும் கலந்து இருந்தது. எத்தனைபெரிய அழகி கட்டிக்கொண்டாலும் அசடு வடியும் என்று தோன் றியது. தனக்கு கொஞ்சங்கூட பொருத்தமாக இல்லை. ஆனால் தானம் கொடுத்த மாட்டை பல் பிடித்து பார்க்க முடியுமா, எனக்கு இந்த சாரி வேண்டாமென்று சொல்ல முடியுமா. வெகு நாளாய் அந்த புடவையை கட்டிக் கொள்ளவே இல்லை. ஏன் கட்டவில்லை என்று சௌமி யாவும் கேட்கவில்லை. வேறு புடனவ சரியில்லாததால் ஒருமுறை இதைக்கட்டிக் கொண்டு எதிர்வீட்டு கல்யா ணத்திற்கு போனாள். நல்லா இருக்கே புடவை என்ன விலை என்று பல பேர் கேட்டார்கள்.

என்ன செக்ஸியா இருக்கே அவள்கூட படித்த தமிழ் செல்வி இடுப்பைக் கிள்ளினாள். இங்கயும் கிள்ளனும் போல இருக்கு பின்பக்கம் கிள்ளினாள்.

வெய்யில்பட அந்த புடவையில் ஒரு பளபளப்பு தெரிந்தது. வீட்டுக்குள் இருந்தால் அழுக்காய் காட்சி யளித்தது.

இப்போது தமயந்தி போடாமல் இருக்கும் புடவை அந்த புடவைதான். ஆனால் பள்ளிக்கூடத்திற்கு அதைக் கட்டிக் கொண்டு போக வெட்கமாக இருந்தது

நிதி நிலைமை சரியானதும் வேறு நல்ல புடவைகள் வாங்க வேண்டும். விலை குறைவான வெங்கடகிரி புடவையாவது வாங்கவேண்டும் நிதி நிலைமை எப்போது சரியாகும் என்று தெரியவில்லை. கடன் இருக்கிறது. அப்பா வைத்துவிட்டு போன கடன். நாலு வருடம் முன்பு அப்பா வாங்கி செலவழித்த கடன். பாண்டு பேப்பர் பாண்டு பேப்பராய் வாங்கி கையெழுத்து போட்டு வாங்கிய கடன். இரண்டாயிரம் நாலாயிரம், ஐந்தாயிரம் என்று எதற்காகவோ வாங்கி, இருபதாயிரம், லட்சமாய் வளர்ந்து இருக்கிறது. வட்டிதான் கட்டமுடி கிறதே தவிர கடனை அடைக்க வேறு வழிதெரியவில்லை. வட்டி கட்டாவிடில் வீட்டு வாசலில் கத்திவிட்டுப் போகி றார்கள். வக்கீல் நோட்டீஸ் அனுப்புகிறார்கள் பள்ளிக் கூடத்து வாசலில் வந்து நின்று வட்டியாவது கொடு என்று வாங்கிப் போகிறார்கள். கிட்டதட்ட எழுநூறு ரூபாய் வட்டியே கட்ட வேண்டியிருக்கிறது.

அப்பா வாங்கின கடன் அது. எனக்குத் தெரியாது என்று சொல்ல எனக்கு மனசு வரவில்லை.

அந்த கடனை எப்படியாவது அடைச்சுடுமா. என்ன பாடுபட்டாவது தீர்த்துடு. அப்பத்தான் என் ஆத்மா சாந்தியாகும் என்று சொல்லிவிட்டு அப்பா இறந்தார்.

செல்வச் செழிப்பு உள்ள அம்சமாக இருந்தாலும் நிதி நிலமை சாதாரணமாகத்தான் இருக்கும் என்று கிளி ஜோஸ்யம் சொல்லியிருக்கிறது. கடன் இல்லையென்றால் வட்டி கட்ட வேண்டும் என்ற அவசியம் இல்லையென் றால் இந்த சம்பளம் சந்தோஷமான விஷயம். எவர்



தயவுமின்றி இம்போர்ட்டட் கார் வாங்க முடியும். அம்மாவும், அவளும் மட்டுமே இருக்கிற அந்த குடித்தனத் திற்கு என்னென்னவோ வசதி செய்து கொள்ள முடியும். போட்டுக் கொண்டிருக்கிற மூக்குத்தியைத் தவிர வேறு தங்கமே உடம்பில் இல்லை. வீட்டில் பிரமாதமாய் பொருட்களும் இல்லை. ஒரு ரேடியோ, ஒரு பழைய வாக்மேன். இருபது புடவைகள், இரண்டு தகரப்பெட்டி, கொஞ்சம் சமையல் பாத்திரங்கள் தவிர வேறு எந்த சொத்தும் இல்லை. 'ஜில் லென்கிற ஒரு நல்ல ஸ்டவ் வாங்க கைவரவில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எண்ணெய்த் திரியோடு போராட வேண்டியிருக்கிறது. வீடெல்லாம் கெரசின் நாற்றமாய், கையெல்லாம் கரியாகி நிற்க வேண்டியிருக்கிறது.

ஆனால் இந்த செகண்டரி கிரேட் டீச்சர் உத்தியோகம் இல்லாமல் இருந்தால் இந்த குடித்தனம் சிரிப்பாய் சிரித் திருக்கும். இந்த உடுப்பும் இந்த உணவும்கூட இல்லாமல் போய் இருக்கும் தெருவில் குடையோடு நடந்துபோகிற கௌரவம்கூட அழிந்துபோய் கடனுக்கு பயந்து ஊர் விட்டு ஊர் ஓடி எங்கேயாவது சமையல் வேலை செய்து சாப்பிட வேண்டி இருக்கும்.

அப்போது இந்தப் புடவைகூட கட்ட முடியாமல் போயிருக்கும்...இந்த ஒற்றை மூக்குத்தியோ, ரேடி யோவோ, டேப் ரெக்கார்டரோ இல்லாமல் யார் வீட்டு பின்கட்டுலையோ தாங்கி எல்லாவற்றிற்கும் யார் கையையோ எதிர்பார்த்து வாடி போடி என்று பேச்சு வாங்கி அம்மா செத்துப்போய் இருப்பாள். நான் மட்டும் தனியாக இருந்திருப்பேன். நினைக்கவே பயமாக இருந் தது.

அம்மாவுக்கு இந்த டீச்சர் வேலை பெருமை. அவளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதில் மிகவும் மும்முரமாய் இருப்பாள்.

ஒருநாள் பள்ளிக்கூட பெற்றோர் தினத்திற்கு வந்து நாட்டிய நாடகம் எல்லாம் பார்த்து எனக்கு இங்கே ஏதாவது வேலை போட்டு கொடுங்களேன் என்று கேட்டாள். ஆனால் நாற்பத்தி ஏழு வயசு அம்மாவுக்கு யார் வேலை தருவார்கள்

இப்படியே ஓடிண்டு இருந்தா போதுமாடி. 'டங்' குன்னு ஏதாவது பெருசா காசு கிடைச்சு இந்த இருபதாயிரம் கடனை அடைச்சுட்டா, உன் கல்யாண காட்சிப் பந்றி யோசனை பண்ணலாம். நீ குப்புற படுத்துண்டு சினிமா பாட்டு கேட்கறத பார்த்தா வைத்தெரிச்சலா இருக்கு. யாராவது நல்ல ஜோஸ்யரிடம் கேட்போமா. உனக்கு எப்போ விடியும்னு கேட்போமா.

ஆனால் எல்லா ஜோஸ்யர்களும் அம்பது ரூபாய் நூறு ரூபாய் என்றுதான் கேட்டார்கள். அப்படி காசு செலவு செய்வதற்கு வேறு ஏதாவது வாங்கலாம். அம்மாவுக்கு நல்ல புடவையாவது வாங்கலாம். அவள் கட்டிக் கொண்ட புடவையைத்தான் பழசாகிப் போன பிறகு அவள் அம்மா கட்டிக் கொள்கிறாள்.

அம்மா நல்லவள் ஆசையே இல்லாதவள். எப்போதேனும் சிறு வயதில் ஆசை அவளுக்கு இருந்திருக்கலாம். ஆனால் தமயந்திக்கு தெரிந்து அவள் ஆசையை எப்போதும் வெளிப்படுத்தியதுமில்லை தமயந்தி ஆசையை எப்போது தடுத்ததுமில்லை.

''இப்போ வந்துட்டு போனானே அவன் பேரென்ன''

''குமார்.''

''உன் சிநேகிதனா?''

''ஆமாம் ''

' நல்ல பழக்கமா?''

''ஆமாம் ''

''நல்ல மாதிரியா? '

''உனக்கு எப்படி படறது.''

''எனக்கு நல்ல மாதிரியாதான் படறது. மத்தவாளெல்லாம் தப்பா நினைக்காம இருக்கணுமே.''

''நினைச்சா நினைச்சுட்டு போகட்டுமே.''



''ஒண்டிக் குடித்தனத்துல இருக்கோம்டி. யார் வந்தா யார் போறான்னு எல்லாரும் கவனிக்கறாளே. யார்னு கேட்டா நான் பதில் சொல்லணமோனோ.''

''சொல்லு. சிநேகிதன்னு சொல்லு ''

''மத்தவாளுக்கு அது புரியுமா ''

''முதல்ல உனக்கு புரியறதா.''

''புரியாத என்ன. மரியாதையா பொம்மனாட்டிய நினைச்சு ஒரு ஆம்பிளை பழகினா சந்தோஷம்தான்.''

'' அடி சக்கை. நல்ல விளக்கமா பேசறியே. உனக்கும் சிநேகிதமெல்லாம் உண்டோ?''

''சீச்சீ. எனக்கு அதெல்லாம் கிடையாது''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மதிப்பு மரியாதைன்னு சொன்ன... இப்ப சீச்சீன்னு சொல்ற சிநேகிதம் தப்புன்னு சொல்றியா.''

''அதெப்படி தப்பு. நல்ல விஷயம்தானே அது.''

''அப்போ உனக்கேன் இல்லை.''

''எங்க காலத்துல தப்பு ''

''அப்போ இது சரிங்கிறியா.''

''இப்போ சரியாயிண்டு வருது''

''முழுக்க சரியாகலைங்கிறியா.''

''உன் பொண்ணு காலத்துல முழுக்க சரியாகும்''

''எந்த மாதிரி சரியாகும்.''

''ஆம்பளையோ பொம்பளையோ நின்னு பேசினா ஐயோ இவா என்ன பேசறான்னு யாரும் சந்தேகம் படாதகாலம் வரும். பேசிண்டு போகட்டுமே அப்படின்னு பெரும் போக்கா போறகாலம் வரும். மனசு வரும் ''

''நீயும் அந்த பெரும் போக்காதான் இப்போ போனியோ.''

''உன் பேர்ல ஒரு நம்பிக்கை.''

''என்ன நம்பிக்கை ''

''அப்பா பட்ட கடனை இம்சைபட்டு அடைக்கறதே இது தப்பு பண்ணாதுன்னு நம்பிக்கை.''

''தேங்யூ அம்மா.''

''அந்தபையன் யாரு'' அம்மா மறுபடியும் கேட்டாள்.

''குமார் பி எஸ் சி. மேத்மட்டிக்ஸ். டியூஷன் சென்டர் வச்சு நடத்தறான் அவா வீட்டு மாடில்லே. கூரைப்போட்டு இருபத்தேழு பசங்களுக்கு பாடம் சொல்லித்தர்றான். இங்கிலீஷ் கணக்குல வீக்கா இருக்கிற எங்க பள்ளிக் கூடத்து பெண்கள் நாலுபேரை அவன் டியூஷன் சென்டர்லே சேர்த்திருக்கேன். அப்போ பழக்கமாச்சு.

''அதான் சம்பாத்தியமா?''

''அதுவாது வருதே. அதும் தவிர தமிழ் இங்கிலீஷ் ரெண்டு டைப்ரைட்டிங்கும் தெரிஞ்சு வச்சிருக்கான். டியூஷன் போன மிச்ச நேரத்துல ஜாப் டைப்பிங் பண்ணித்தர்றான்.''

''ஒட்டு மொத்தமா எத்தனை வரும்?''

''எதுக்குமா கேட்கிற.''

''நமக்கு எதாவது உதவி செய்ய மாட்டானானு ஒரு அஞ்சாயிரம், பத்தாயிரம் கொடுத்தா அசல் கொஞ்சம் அடைக்கலாம், வட்டி குறையுமேன்னுதான்.''

''அந்த அஞ்சு ஆயிரத்துக்கு அவனுக்கு வட்டித்தர வேண்டாமா.''

''சிநேகிதர்களுக்குள்ள வட்டி உண்டா.''

''சரி அசல்தான் எப்படி அடைப்ப.''

''ரெண்டு வருஷத்துல மாசம் இருநூறு ரூபாய் கொடுத்தா அடைக்க முடியாதா.''

''அஞ்சாயிரம் கடனா கொடு, மாதம் இருநூறா ரெண்டுவருஷத்துல அடைக்கிறேன்னு எப்படி கேட்கிறது ஒரு வேளை அப்படி கேட்கலாமேன்னுதான் இந்தச் சிநேகிதம சரின்னு சொன்னியோ''

''சீச்சீ, அசிங்கமா பேசாதடி.''



''அதுக்கு நமக்கு மேல கஷ்டம். அந்த வீடு கடன்லே இருக்கு. மெள்ள மெள்ள வட்டி வீட்ட முழுங்கிண்டு இருக்கு என்னைக்கோ ஒரு நாள் அமீனா உள்ளே நுழைஞ்சு மொத்தத்தையும் ஜப்தி பண்ணப் போறான். அன்னைக்கு வீடும் பேச்சு, வருமானமும் போச்சு, தெருவிலேயா டியூஷன் நடத்த முடியும். நடைபாதையிலையா ஜாப் டைப்பிங் செய்ய முடியும்.''

''அட பாவமே.''

''இவன் சிநேகிதம் வேண்டாங்கறியா.''

''நான் ஏன் சொல்றேன். இருந்துட்டு போட்டும்.''

''ஏன் இருந்துட்டு போட்டும்.''

''நம்ம மாதிரி கஷ்டப்படற ஜீவன். நம்ம மாதிரி அல்லாடற குடும்பம். நாம பொம்மனாட்டி, அவன் ஆம்பிள்ளை அதுதான் வித்தியாசம்.''

''யு ஆர் கரெக்ட், இதனால்தான் நாங்க பிரண்ட் ஆனோம் இது தெரிஞ்ச பிறகுதான் பிரண்ட் ஆனோம். தெரியறதுக்கு முந்தி...'' தமயந்தி பேச்சு நிறுத்தினாள்.

''என்ன ஆச்சு தெரியறதுக்கு முந்தி''

''சண்டை வந்துடுத்து, போடா நாயேன்னேன்.''

''ஏன்டீ?''.

''என்ன தத்தி டீச்சர்ன்னான்.''

''ஏன்?''

''நான் கணக்கு தப்பு தப்பா சொல்லித் தரேனாம். பேஸிக் மேத்தமெடிக்ஸே எனக்கு தெரியலியாம்.''

''நீ கணக்கு டீச்சர் இல்லியே.''

''அது தெரியாம கத்தினான்.''

''அதுக்காக போடா நாயேன்பாளா.''

''உடனே சொல்லலை, ஒரு பேச்சு வளர்ந்து சொன் னேன், நான் கணக்கு டீச்சர் இல்லே சௌமியாதான் கணக்கு டீச்சர் நான் ஹிஸ்டரி டீச்சர்னு சொன்னேன்.''

''யாரு இந்த சினிமாக்காரி மாதிரி குலுங்கி குலுங்கி போறாளே அவளான்னு கேட்டான். யாரு எப்படி போனா என்ன ஏதோ வந்து கேட்டேயன்னு டியூஷனுக்கு பசங்கள அனுப்பிச்சா தேவையில்லாம பேசறியேனு கத்தினேன்.''

'குலுங்கிப் போறவள்னு சொல்லப்படாதா நியாயத் துக்கு வேற கெட்ட வார்த்தை சொல்லணும். ஒரு டீச்சரை அசிங்கமா சொல்ல வேண்டாமேன்னு சொனனேன்.''

''சொல்லேன் சொல்லிப்பாரேன்னு பதிலுக்கு சத்தம் போட்டேன். ப்ராஸ்னு சொன்னான். ப்ராஸ்யூட்ன்னு சொன்னான் சௌமியாவ. எனக்கு கடும்கோபம் வந் துடுத்து. போடா நாயே, பன்னி, தெரு பொறுக்கின்னு கண்டபடி திட்டினேன்.''

''எங்கடி நடந்தது இது.''

''அவன் வீட்டு மாடிக் கூரையில.''

''என்னிக்கு நடந்தது இது.''

''அது ஆச்சு ஆறு மாசம்.''

''அப்புறம்.''

''அந்த நாலு பசங்களையும் டியூஷன் போக வேண் டாம்னு சொல்லிட்டேன். மீறிப்போனா ஹிஸ்ட்ரியும் சுழிச்சிடுவேன்னு சொன்னேன்''

''அப்புறம்.''



''பசங்க நின்னுடுத்து, ஐயா சோத்துல மண்ணு. பயந்துபோய் வீட்டு வாசலுக்கு வந்தான்.''

''நம்ம வீட்டு வாசலுக்கா? எனக்கு தெரியாதே.''

''உள்ளே வரலை. வாசல்லே கடன்காரன் மாதிரி நின்னான். நான் பள்ளிக்கூடம் போனபோது பின்னா டியே வந்தான்.''

''ஐயோ,'' அம்மா கூவினாள்.

''நானும் முதல்ல அப்படித்தான் நினைச்சேன். நாம கன்னா பின்னானு திட்டிட்டோம். படீர்னு முதுகுல அடிச்சுட்டு போகப் போறானேன்னு எனக்கு பயம் வந்துடுத்து.''

''அடி கூத்தே.''

அம்மா கைதட்டி முகவாயில் கை வைத்துக் கொண்டாள்.

''கூத்தாதான் ஆச்சு.''

''என்ன என்ன சொல்றே.''

''பின்னாடி கிட்டே வந்து டீச்சர்ன்னான். நான் சட்டுன்னு திரும்பி வலதுகால் செருப்ப லேசா உதறி கால்லே இருந்து கழட்டினேன். ஏதாவது ஏடாகூடம் பண்ணா செருப்பாலே போடறதுன்னு தீர்மானம் பண் ணேன். அவன் பயந்துட்டான்.''

''டீச்சர் பிளீஸ் தப்பா நினைக்காதீங்க. நான் ஒரு கோபத்துலே அதிகமாக பேசிட்டேன். ஒரு டீச்சரைப் பத்தி இன்னொரு டீச்சரிடம் நான் அப்படி பேசினது, தப்பு, நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்னு சொன்னான். அவன் மூஞ்செல்லாம் வேர்த்து இருந்தது. பிரேதக்களை'

இதை தெருவுலதான் வந்து சொல்லணுமான்னு கத்தினேன். பள்ளிக்கூடத்துக்கு வர்றதுக்கு பயமா இருந்தது. உங்க வீட்டுக்கு வரவும் மனசு ஒப்பலே தயவு செய்து பசங்களை டியூஷனுக்கு அனுப்புங்கனு கெஞ்சினான்.

''அப்புறம்.''

''எட்டா மடிச்சு ஒரு லெட்டர் கொடுத்தான்.''

''என்னத்துக்கடி?'' அம்மா மறுபடி வியந்தாள்.

ஒரு வேளை என்கூட பேசமுடியாம போயிட்டா மன்னிப்பு லெட்டரா எழுதி வச்சிருக்கேன்னான். நான் சரின்னு வாங்கிண்டு திரும்பினேன். 'பட்டு'ன்னு செருப்பு அறுந்து போச்சு.

''எது அந்த ஹவாய் செருப்பா?''

''இல்லை அதுக்கு முன்னாடி வச்சிருந்தேனே லெதர் செருப்பு. ஜரிகை டிசைன் போட்டது. அதும் மோதிரம் பட்டுன்னு விட்டுப்போச்சு இழுத்துண்டு இழுத்துண்டு எல்லோரும் வேடிக்கை பார்க்கும்படி நடக்கும்படியாயிடுத்து. இவனை நாயேன்னு சொன்ன பாவத்துக்குத்தான்; இப்படி அவமானப் படறோம்னு நெனைச்சுண்டேன். ஒரு டீச்சரை ஒரு டீச்சர் நாயேன்னு சொல்றது தப்பில்லையா.''

''யார் யாரை சொன்னாலும் தப்புதான்'' அம்மா தீர்மானமாய் பேசினாள்.

''அவன் மறுபடி பின்னாடியேவந்து டீச்சர் கொடுங்க அதையென்று கேட்டான். நான் லெட்டரைதான் கேட்கறானோனு லெட்டரை திருப்பினேன்.''

''இல்லை டீச்சர் செருப்பை அவுத்துக்கொடுங்கன்னு சொன்னான். எனக்கு ஒரே கலவரம். என்ன செய்யறதுன்னு தெரியாம ஒரே குழப்பம். அவனே குனிஞ்சு கால் செருப்பை எடுத்துண்டான். அறுந்த செருப்பு கால்லே நின்னாதானே. அது காலுக்கு முன்னாடி எடுத்துக்கோன்னு நீட்டிண்டு இருக்கு.''



''இங்கே இருங்க டீச்சர்னு எங்கிட்ட சொல்லிட்டு அறுந்த செருப்போடு விறுவிறுன்னு போனான். ஏதோ கடையில ஆணி வாங்கி பொத்தல் பண்ணி ரெண்டா பிரியற பேப்பர் கிளிப்ப உள்ள நுழைச்சு கருங்கல்லே தட்டிக் கொடுத்தான். எனக்கு ஒரு மாதிரியா ஆயிடுத்து. ஐயாம் வெரி சாரி சார்ன்னேன் சார்லாம் வேண்டாம் என்னை குமார்னே கூப்பிடுங்கன்னான்''

''ஸாரி குமார்னு சொன்னேன். ஸாரின்னு சொல்ல வேண்டாம் சண்டைய மறந்துட்டா போதும்னான். நான் மறந்துட்டேன்னு சொல்லிட்டு பள்ளிக்கூடம் போயிட்டேன்.''

''பள்ளிக்கூடம் போனா ஒரே வேதனை. செருப்பு கால்லே உறுத்தறபோதெல்லாம் அவன் நினைப்பு''

''இதைத்தான் லவ்'ம்பாளோ?'' அம்மா கண் சிமிட்டி பேசினாள்.

''ச்சீ மட்ட புத்தி. உங்களையெல்லாம் எத்தனை குளிப்பாட்டினாலும்...'' தமயந்தி பல் கடித்தாள்.

''அம்மாவையும் நாயேன்னு சொல்லக்கூடாது.''

''நான் எங்கே நாயேன்னு சொன்னேன்.''

''சொல்லாத சொன்ன மேற்கொண்டு சொல்லு''

''மறுநாள் அந்த பசங்க நோட்புக் கொண்டு வந்து ரகசியமா காட்டினதுகள். டியூஷன் நோட்புக். எல்லா கணக்கும் டைட்டா போட்டு இருந்துதுங்க. அதே பசங்க பள்ளிக்கூடத்து மேத்த மேட்டிக்ஸ் புக்ஸகாட்

டினதுங்க டியூஷன்ல போட்ட அதே கணக்கு ஆனா சௌமியா ரெட் இங்கால்லே எல்லா கணக்கும் தப்பா போட்டிருக்குனு இன்ட் போட்டிருந்தா.''

''என்னடி எல்லா கணக்கும் ரைட்டாதானே போட்டிருக்குன்னு கேட்டேன்.''

''சௌமியா டீச்சர் நாங்க போடற கணக்க பார்க்கறதே இல்லே. நாங்க எப்போ நோட்புக் நீட்டினாலும் தப்பு போட்டுடறாங்க. நாங்க கணக்க தப்பாதான் போடுவோம்னு முடிவு பண்ணிட்டாங்க. ஒரு பொண்ணு அழுதுண்டே சொல்லித்து''

''டியூஷன் போனபிறகு எல்லா கணக்கும் எங்களுக்கு புரியறது டீச்சர் இங்கிலீஷ் கூட இம்ப்ரூவ் பண்ணிக்கறோம். எல்லா வார்த்தைகளும் ஒவ்வொரு தமிழ் அர்த்தம் சொல்லி அப்புறம்தான் பாடம் நடத்தறாங்க. நாங்க நல்லாதான் படிக்கிறோம் டீச்சர். சௌமியா டீச்சர்தான் எங்கள தப்பா நினைக்கிறாங்க' ஒரு பொண்ணு விம்மி விம்மி அழுதது.''

''எனக்கு ஏதோ மாதிரி ஆயிடுத்து. நீங்க சௌமியா டீச்சர்ட்டே எதுவும் பேசாதிங்க நீங்க எங்கிட்ட பேசினதா சொல்லாதிங்க. நானா இதுக்கு ஒரு வழி பண்றேன்னு சொன்னேன்.''

''சௌமியாக்கிட்டே பேசினியா'' அம்மா ஆவலாய் கேட்டாள்.

''ரொம்ப ஜாக்கிரதையா சுற்றி வளைச்சு பேசினேன்.''

''உங்க புடவை நன்னாயிருக்கு. உங்க செயின் நன்னாயிருக்கு. உங்க மச்சினர் என்ன பண்றார். உங்க வீட்டுக்காரர் எப்படி என்று எல்லாம் கேட்டு குளிரவச்சு என் கசின்பிரதர் ஒருத்தன் டியூஷன்சென்டர் நடத்தறான். நம்ம ஸ்கூல்பசங்க நாலு பேரை அங்கே அனுப்பிச்சிருக்கேன். நம்ம பள்ளிக்கூடத்து பசங்களுக்கு நாம சட்டப்படி டியூஷன் எடுக்கக்கூடாது. அதனால அங்க அனுப்பிச்சேன். அந்த பசங்க இம்ப்ரூவ் ஆயிருக்கா பார்ன்னு பேசினேன்.''



''அப்படியா அதுங்களா டியூஷன் போவுது அப்படின்னு கேட்டுட்டு உடனே கூப்பிட்டு அனுப்பினா கணக்கு நோட்ட வாங்கி பார்த்துட்டு எல்லா கணக்கும் ரைட் போட்டு வெரிகுட்டுனு எழுதினா. எனக்கு ரொம்ப சந்தோஷமாயிடுத்து.''

''தந்தனத் தம் தாளம் வரும் புதுராகம் வரும்...'' அம்மா பாடினாள். முகம் முழுக்க சிரிப்பு பொங்க கேலி செய்தாள்.

''இன்னொரு தடவே இந்த மாதிரி எதாவது சொன்னே எனக்கு கெட்ட கோபம் வரும் அம்மா.''

''கோபத்துல கெட்ட கோபம். நல்ல கோபம் உண்டா. மேல சொல்லு.''

''டியூஷன் சென்டர் நடத்தறது உன் கசின் பிரதர் தானே, இன்னும் ஆறேழு பசங்களை நான் அனுப்பறேன் அதுகளும் அங்கே சேரட்டும் நமக்குத்தான் சொல்லிக் கொடுக்க வணங்கலை. வணங்கி சொல்லிக் கொடுக்கறவாக்கிட்ட படிக்கட்டும். இதுங்களுக்கும் படிப்பு வரும். அவனுக்கும் காசு வரும். என்னாலதான் பசங்க நல்லா படிக்குதுன்னு நானும் ஹெட்மிஸ்டரஸ் கிட்ட பீத்திக்கலாம். ஒரே கல்லுல மூணு மாங்கான்னா, எனக்கு நிலை கொள்ளாத சந்தோஷம். என்ன தாயாரே இதுக்கும் எதனா பாட்டு பாட வேண்டியதுதானே.''

''பாடுவேன். நீ திட்டுவே வேண்டாம்.'' அம்மா போலியாய் முகம் தூக்கி வைத்துக் கொண்டாள்.

''பரவாயில்லை பாடு உன் புத்தி என்னனு தெரிஞ்சுக்கறேன்.''

''வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே'' அம்மா அழகாகவே பாடினாள்.

''ஏன் இந்த பாட்டு பாடறே'' தமயந்தி கடுகடுப்பாய் கேட்டாள்.

''அதான் அந்த குமாரு நம்ம மாளிகைக்கு வந்துட்டானே.''

''படு சீப்பான பொம்பளைம்மா நீ. நீ சரியே இல்லை.''

''அப்படி தோன்றதா உனக்கு.''

''ஆமாம்.''

''இதுக்கு பதில் அப்புறம் சொல்றேன். நீ மேற்கொண்டு சொல்லு.''

''அந்த குமார் நேரா வீட்டுக்கு வரலே, நேரா பள்ளிக்கூடத்துக்கு வந்துட்டான்.''

''அட கஷ்டகாலமே.'' அம்மா கேலி செய்கிறாளா, அல்லது நிஜமாகவே பதட்டமடைகிறாளா என்பது புரியவில்லை.

''நேரா எங்கிட்ட வந்து சௌமியா டீச்சரை இன்ட்ரடியூஸ் பண்ணுங்கன்னான்.''

''ஏன்னு கேட்டேன். அவனுக்கு கணக்குலே சில போர்ஷன் டவுட்டா இருக்காம். கேட்டு தெரிஞ்சுக்கலாமேனு வந்தானாம். பேசிண்டே இருக்கும்போது எதிரே சௌமியா வந்துடுத்து. நான் சட்டுன்னு நடுவுலே பூந்து இவர்தான் என் கசின் பிரதர்ன்னு சொன்னேன். குமார் முதல்லே பேய் பார்த்தாமாதிரி பயந்து மறுபடி சமாளிச்சுகிட்டான். ரொம்ப மரியாதையா டவுட் கேட்டான். வராண்டாவிலே உட்கார்ந்து அவன் கேட்ட கணக்கெல்லாம் போட்டு காமிச்சா. ரொம்ப தாங்ஸ்னு கைகூப்பினான் கசின் பிரதரை வாசல்லே விட்டுட்டு வா அப்படின்னா. நான் கடனேன்னு அவன்கூட போனேன்.



''சௌமியா டீச்சர் கெட்டிக்காரி. கணக்குலே புலி. ஆனா ஒரே ஒரு தப்பு அவங்ககிட்டே இருக்குன்னு சொன்னான். என்ன தப்பு குமார்னு அவன்கிட்டே கேட்டேன்.''

''அவங்க டீச்சரே இல்லே, டீச்சிங் பண்ண அவங்களுக்கு இஷ்டமே இல்லே. அதான் தப்புன்னு சொன்னான்.''

''அதெப்படி சட்டுன்னு கண்டுபிடிச்சான்னு எனக்கு ஒரே ஆச்சரியம். முடிஞ்சபோது டியூஷன் சென்டருக்கு வாங்கன்னு சொன்னான், போய் பார்த்தேன்.''

''என்னிக்கிது?''

''அஞ்சு மாசம் முன்னாடி.''

''அப்புறம்.''

''எனக்கு தடபுடலான வரவேற்பு. ஸ்வீட் காரம்னு உபசரிப்பு.''

''சொஜ்ஜி பஜ்ஜி மாதிரியா.''

''தேவையில்லாம பேசாதம்மா. ஜாங்கிரி, மிச்சர் மாதிரி ஏதோ. காபி அவங்க வீட்டுல போட்டது. ஸ்ட்ராங்கா ரொம்ப நன்னாயிருந்தது அப்பா, அம்மா தம்பி ரெண்டு பேர் எல்லோரையும் இன்ட்ரடியூஸ் பண்ணி வச்சான். ரெண்டு அக்காவுக்கும் கல்யாணம் ஆயிடுத்தாம். அவர் கல்யாணத்துக்காகத்தான் வீடு அடமானம் வச்சு முழுகற நிலையில் இருக்கறதாம்.

என்லா கதையும் சொன்னான். நானும் நம்ம கதையை சொன்னேன்.''

''அவன் அப்பா அம்மா கிட்டயா?''

''இல்லை. அவன் கிட்டே மட்டும் சொன்னேன்.''

''அவன் அம்மா ஒண்ணும் கேட்கலையா.''

''கேட்டாளே உனக்கு சமைக்க தெரியுமா, பாட்டு பாடுவியா. சாமி ஸ்லோகமெல்லாம் சொல்லுவியா என்னென்னமோ கேட்டார்.''

''அடிச்சக்கை மருமகளா வச்சுக்கலாமான்னு ஆசை படறாபோல இருக்கு.''

''நானா—அந்த வீட்டுக்கு மருமகளா, அங்கே போய் அந்த வீட்டுக் கடனையும் நான்தான் அடைக்கணுமா. என்னால முடியாது தாயே.''

''வேற யார் உன்னை வந்து இப்படி விசாரிப்பா சொல்லு இனம் இனத்தோட சேரும் கடன் கடனோட சேரும். குதிரைல ஏறி ராஜகுமாரனா வருவான். இடுப்பை வளைச்சி குதிரையில ஏத்தி மடியிலே வச்சுண்டு வேற தேசமா போவான். கடன்காரிக்கு கடன்காரன் தான் வருவான்.''

சட்டென்று அம்மாவின் உருவம் மறைந்து, அம்மாவின் பேச்சு மறைநது வீடு மறைந்து தான் கால் நீட்டி சாய்ந்த இருப்பு மறைந்து...அகழியும், தொங்குப் பாலமும், கோட்டையும் வெட்டவெளியும், புல்தரையும் கண்முன் தோன்றின. கோட்டை வாசலில் தமயந்தி நின்று கொண்டு இருக்கிறாள் சம்கி வைத்து தைத்த ரவிக்கையும் தொப்புள் விளிம்போடு ஒட்டிக்கட்டிய சரிகை பாவாடையும் உடுத்திக் கொண்டு இருக்கிறாள். ஒப்புக்கு ஒரு மேலாக்கு மாதிரி தோளில் ஒரு நைலான் துணி தொங்கு



கிறது. வினோதமாய் கொண்டை போட்டு அதில் ஒற்றைப் பூ சொருகி, முத்தாரம், காசுமாலை, கல்வளையல், வங்கி, இடுப்பு ஒட்டியாணம், நெற்றிசுட்டி சந்திர பிறை சூரிய பிறை அணிந்து காதுகளில் பெரிய குடை ஜிமிக்கியோடு காத்துக்கொண்டு இருக்கிறாள்.

வெள்ளக்குதிரையில் தொடை ஒட்டிய பேண்ட்டும், காலர் இல்லாத ஜரிகை கோட்டுமாய் காதுகளில் வளையமும், நெற்றியில் பிறைதிலகமுமாய் ஒரு அரசகுமாரன் பாலம் தாண்டி கோட்டைக்குள் நுழைகிறான்.

அவளை வாரி எடுத்து குதிரைமீது வைத்து கோட்டைக்கு வெளியே ஓடுகிறான். இடது கையால் அவளை இறுக்கிக் கொண்டு வலதுகையால் அவனது எதிர்ப்படை ஈட்டிகளை தட்டி எறிகிறான் கானகம் நோக்கி பறக்கிறான் துரத்தியவர்களையெல்லாம் மிஞ்சி மிகவேகமாக ஓடுகிறான். தமயந்தி அவனை இறுக்க தழுவிக்கொண்டு இருக்கிறாள்.

அழகிய காடு அருவி நுரைபொங்க குதித்து ஆறாக நடக்கும் இடம். கற்பாறைகள் அதிகம் உள்ள இடம். குதிரையோடும் அவளோடும் ஆற்றில் இறங்கி தாண்டுகிறான் அருவிச்சாரல் உடம்பையெல்லாம் குளிர வைக்கிறது. மழை மேகம் திரண்டு அந்த காட்டுப்பகுதியை மேலும் இருட்டாக்குகிறது

மரத்தடியில் உள்ள நடுகல் எதிரே அவளை நிற்க வைத்து பதக்கத்தோடு கூடிய தன் கழுத்துச்சங்கிலியை அவிழ்த்து அவளுக்கு தாலி கட்டுகிறான். மரத்துப் பூக்கள் இருவர்மீதும் உதிர்ந்தன.

அம்மா சட்டென்று கன்னத்தைத் தட்டியதும் கனவு கலைந்து போயிற்று. வீடும், முற்றமும் கூரையும் நினைவுக்கு வந்தன. இம்மா அவளைக் கூர்ந்து கவனிப்பது தெரிந்தது. மனசுள் நடந்தது ஒரு பகல் கனவு என்பது

தெரிந்தது ஆனால் அதில் அடைந்த திருமணம் மட்டும் அப்படியே இருந்தது.

''எவனோ ஒருத்தன் தனக்கு ஓர் பொண்ணு உதவி செஞ்சுதுன்னு ரொம்ப மரியாதையாய் நடந்தான். மதிப்பாய் நடத்தினான். அந்த மதிப்பு மரியாதையை தாங்க முடியலை அடடா இத்தனை அன்பா. இத்தனை மரியாதையா அப்படின்னு தவிச்சுபோய் மகிழ்ந்து போய் பசிச்ச வயிற்றுக்கு புளிச்ச பழைய ஜலம் மோர் விட்டுக் குடிச்சமாதிரி அந்த 'ஜில்'ப்பு தாங்காம கண்ணை மூடிக்கிறோம். அன்பு புளிச்ச பழையது மாதிரி. ரொம்ப சாதாரணமான மது சாப்பாடே இல்லாத வயித்துல மது இறங்கினா எழுந்திருக்க முடியுமா காலைவீசி கையை வீசி நடக்க முடியுமா. அப்படியே எதையாவது பிடிக்கத் தோன்றது நடந்தா தள்ளறது. நின்னா மூச்சு வாங்கறது. ஓடினா செத்து போயிடுவோம்னு பயம் வருது. லொங்கு லொங்குன்னு வேலைக்கு ஓட முடியாது. அடுத்தது அடுத்ததுன்னு பட்டியல் போட்டு செய்ய முடியாது. எங்கையாவது சுருண்டு படுத்துக்கத் தோணும் ''

பொம்மனாட்டி பசிச்சவ.

அன்போ புளிச்ச பழையது.

ரெண்டு சொம்பு குடிச்சுட்ட ராப்பகல் தெரியாது.

ஒரு தடவ குடிச்சுட்டா அந்த ருசி போகாது.

கொடங் கொடமா குடிக்கத் தோணும். கெடைச்சதோ குடிச்சுட்டு என்ன சொன்னாலும் கேட்டுண்டு தூங்கலாம்.

கிடைக்கலையோ பைத்தியம் பிடிச்சுடும்.

அதனாலதான் பசிய பொறுக்கற சக்திய பொம்மனாட்டிக்கு பகவான் கொடுத்திருக்கிறான். நான் சோற்று



பசியை சொல்லலை. சுதந்திர பசியை சொன்னேன். குடிச்சுட்டு படுத்துக்கறதுங்கறத மனசு மயக்கத்த சொன்னேன்.''

அம்மா சிறிது நேரம் பேசாமல் இருந்தாள்.

''நான் எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் கிறிஸ்துவ பள்ளிக் கூடத்துல படிச்சேன். கல்யாணமே வேண்டான்னு கன்னியாஸ்திரியா நிறைய டீச்சர் இருப்பா. அவள் ஸ்திரி பெண்மணி. ஆனால் கன்னிகை. எனக்கு 'ஆ'ன்னு இருக்கும் அவாளை பார்க்கறதுக்கு இவா ஜாதியில கல்யாணம் பண்ணாத இத்தன கன்னியாஸ்திரிகள் இருக்காளே நம்ம மதத்துல இத்தனை சௌகரியம் ஏன் இல்லேன்னு தோணித்து'' இந்த சௌகரியத்துக்காகவே கிறிஸ்துவ மதத்திற்கு போயிடலாமின்னு தோணித்து.''

''நமக்கு ராதாகிருஷ்ணன், சிவன் பார்வதி லக்ஷ்மி, நாராயணன் இன்னும் ஒருபடி மேல போய் வள்ளி, தெய்வானை, முருகன்.''

''குடித்தனம் பண்ணு குடித்தனம் பண்ணு கல்யாணம் பண்ணு கல்யாணம் பண்ணி குழந்தை பெத்துக்கோ பேரன் பேத்தி எடுத்துக்கோ இதான் வாசகம். இதான் வேதம், இதான் வழிமுறை. இதுதான் சந்தோஷம்னு ஒரு வியாக்கியானம்,''

''நானும் இதனாலதான் கல்யாணம் பண்ணின்டேன்'' அம்மா எதிரில் இருந்த சுவற்றை ஊடுருவி தொலை தூரம் பார்த்தாள்.

''உன் கல்யாணம் உனக்கு சந்தோஷமா இல்லையா'' தமயந்தி கேட்டாள்.

'ஒரு நேரம் சந்தோஷம். ஒரு நேரம் துக்கம். ஒரு ரெண்டுங் கெட்டான் இடம் போயேன்.''

அம்மா துன்பப்பட்ட நேரங்களை தமயந்தி அறிவாள்.

அப்பா கெட்ட பழக்கம் உள்ளவர் அல்ல. சோம்பேறி சிடுமூஞ்சி, தான் என்னும் கர்வத்தில் மண்டை வீங்கிய மனிதர்.

''இன்னைக்கு வரவு என்ன அப்படின்னு அஞ்சிலே இருந்து ஆறுக்குள்ளே மூணுதடவை கேட்டுட்டான். ஆறு மணிக்கு சொல்றேன். இப்ப கேட்காதேன்னு சொன்னேன்.''

''இப்பவே சொல்லுயான்னு அதட்டினான்.''

''ப்ளீஸ் டோண்ட் டிஸ்டர்ப் மீ னேன்.''

''இங்கிலிஷ்லியா பேசறேன்னு மேஜையில் அடிச்சான்.''

நாற்பத்தேழாயிரத்து முன்னூற்று நாற்பத்தேழு ரூபா அறுபது பைசா கல்லா ட்ராயரை அப்படியே உருவி தடேர்ன்னு அவன் தலையிலே போட்டேன். தடதடனு வெளியே வந்துட்டேன்.

ஒரு வருடத்தில் நாலாவது முறையாய் கிடைத்த வேலை. முப்பதது நாலுநாள் பார்த்த உத்தியோகம்.

அந்த முதலாளி வீட்டிற்கு வந்து சம்பளத்தை கொடுதது நான் என்ன சொல்லிட்டேனு இப்படி கோபப்பட்டிங்க. எல்லாத்தையுப் மறந்துட்டு வேலைக்கு வாங்க,என்று சொன்னபோது சரிசரி என்று தலையாட்டி விட்டு,

அவன் கெடக்கான் மயிராண்டி என்று தலையில் துண்டு வைத்து நிலைப்படியில் தலைவைத்து தூங்கிவிடுவார்.



வான்னு சம்பளம் மொத்தமும் கழிந்து கடனில் குடும்பம் தத்தளிக்கும்போது மறுபடி ஞானம் வந்தது போல் வேலைக்குப் போவார்.

வேறு வேலை வேறு கடை.

ஜார்ஜ் டவுனில் இருக்கிற எல்லா கடைகளிலும் அநேகமாய் அப்பா வேலை செய்து இருக்கிறார்.

அந்த பாப்பான் கெட்டிக்காரன், பொய் சொல்ல மாட்டான். திருட மாட்டான். கை சுத்தம் வேலை சுத்தம், ஆனா ரொம்ப திமிர் பிடிச்சவன். கல்லால உட்கார வச்சுட்டா மொத்தக் கடையும் அவனது மாதிரிதான் அவன் நடந்துப்பான். ஒரு வேலையிலேயும் ஒத்துப்போக மாட்டான். அவன் எல்லாக் கூலிக்காரனையும் டேய்னுதான் கூப்பிடுவான் அவனை ரங்கராஜன்னு பேர் சொல்லிக் கூப்பிட்டா கோபம் வந்துடும். மிஸ்டர் ரங்கராஜன்னு கூப்பிடணும் பான்.''

நீ மட்டும் டேய்ன்னு கூப்பிடலாமான்னு கேட்டேன்.

''உன் கடைக்கு மூட்டை தூக்க வந்த என்னை டேய்ன்னு கூப்பிடு. கணக்கு எழுத வந்தா மிஸ்டர்ன்னு கூப்பிடு கல்லால உட்காரவச்சா கேஷியர் சார்ன்னு கூப்பிடு நமக்கு ரூல்ஸ் சொல்லித்தரான்.

யோவ் ஐயரே உன்னை மறந்துபோய் ஒரு குழப்பத்துல பார்ட்னர் ஆக்கிட்டேன்னு வச்சுக்க இந்த கடையில் பங்குதாரர் ஆக்கிடேன்னு வச்சுக்க உன்னை எப்படிக் கூப்பிடணும்னு கேட்டேன்.

''இப்ப கூப்பிட்டியே ஐயர்ன்னு அப்படின்னு கூப்பிடலாம் இல்லை சுவாமின்னு கூடுதல் மரியாதை யாவும் அழைக்கலாம் என்றான்.''

''அப்படி உடம்பு பொங்கிப்போச்சு எனக்கு, கட்ட சொருகாத புது அறுவாளை எடுத்து கழுத்தை சீவிடலா மான்னு தோணிச்சு.''

''உங்களுக்கும் நமக்கும் ஒத்துவராது. ஒதுங்கிக்குவம். என் கடையவுட்டு இறங்கிப்போனேன். கையில இருக்குற வேலையை கடகடன்னு முடிச்சுட்டு பேனாவை பாக் கெட்டுல சொருகிக்கினு போயிட்டு வரேன் கூட சொல்லாம இறங்கிப் போயிட்டான்.''

''ஜாதி திமிரு.''

''இல்லிங்க. அப்படி இல்லை அது. அது ஒருவகை யான பைத்தியம். வேலை இல்லாத அந்த ஆளை கம்யூனிஸ்ட். கட்சி வாசகர் சாலையில் உட்கார்ந்து இருக் கறத பார்த்து இருக்கேன் எல்லா டீ கடைகளிலும் உட்கார்ந்து டீ சாப்பிடுவான். ரொம்ப அமைதியாக பேசுவான், செந்தூர் பாண்டியன்னு லோக்கல் மார்க் சிஸ்ட் லீடர் அவரை தலைவரேன்னுதான் கூப்பிடறான். படியில கால் பிசகி பாண்டியனுக்கு புசுபுசுன்னு வீங்கிப் போச்சு. தென்னை மரக் குடி எண்ணை போட்டு கால் உருவிக்கிட்டு இருப்பான்.''

''இந்த ஆள் ஜாதிவெறியன் ஆச்சேன்னு பாண்டியன் கிட்டே கேட்டேன்.''

''வெளியே பார்க்கறதுக்கு அப்படிபடும். வேலையில் வித்தியாசம் காட்டற புத்தியுண்டு போஸ்டர் ஒட்ட சொல்வேன் மாட்டேன்னுவாரு பந்தலுக்கு தோரணம் கட்டச் சொல்வேன் முடியாதுன்னுவாரு. மொழி பெயர்ப்பு வேலை செய்ய சொல்லுவேன் முத்துமுத்தா எழுதிக்கொடுப்பாரு எதிர்க்கட்சிய மடக்கறதுக்கு பாயிண்ட் கேட்டேன், ஒரே ராத்திரியில் நானூறு பக்கம் திட்டக்குழு அறிக்கையை படிச்சிட்டு நான் மடக்கிப்



பேசறதுக்கு பாயிண்ட் எழுதிக்கொடுத்தாரு. அவரு ஒயிட்காலர்.''

''அப்படின்னா?''

''குமாஸ்தா புத்தி இவங்களைபத்தி தோழர் லெனின் தெளிவா சொல்லியிருக்கிறார். இவர்கள் போராட்டக் காரர்கள் அல்ல. ஒரு போராட்டத்தின் பின்னணிக் காரர்கள், இவர்கள் பட்டாக்கத்தி அல்ல. பட்டாக் கத்தியின் மேலுறைகள் மேலுறை யுத்தத்திற்கு பயன் படாது. கத்தி காப்பாற்றப்படவும், நம் கத்தி நம்மை வெட்டாமல் இருக்கவும் மேலுறை அவசியம். உறை கத்தியாகாது. உறையின்றி கத்தி இருக்கலாகாது, குமாஸ்தாக்கள் அதாவது இந்த வெள்ளைக்காரர்கள் தொழிலாளர்களுக்கு அவசியமானவர்கள். தொழிலாளர் களுக்கு தேவையானவர்கள். இவர்களை நாம் விலக்கக் கூடாது. நம்மில் இருந்து வித்தியாசமாய் வைக்கக் கூடாது அப்படி வைக்கப்பட்டால் இவர்கள் நிலபிரபுத்து வத்துக்கு அடிமையாய் போவார்கள். நிலபிரபுத்துவம் இவர்களை நமக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தும். இந்த வெள்ளை கழுத்துப்பட்டைகளை நாம் கவனத் துடன் கண்காணித்து வரவேண்டும்.''

''கைகளில் விரல்நகம் முக்கியம். அதை ஆயுதமாய் கொள்ள முடியாது. ஆனால் ஆயுதம் இல்லாதபோது அவை ஆயுதமாகவும் பயன்படுத்தப்படலாம்.''

''அவரு கூலிக்காரன 'டோய்'னு கூப்பிடுவாரு அவரை பேர் சொல்லிக்கூப்பிட்டா கத்துவாரு''

'இது குமாஸ்தாக்களின் பலவீனம். தொழிலாளர் களின் முதலாளிகளாக தங்களை பிரித்துக்கொள்ளும் குணம் ஒரு முதலாளிக்கு தொழிலாளியாகவும், ஒரு தொழிலாளிக்கு முதலாளியாகவும் இருக்கும் இரட்டை மனம். இவர் மட்டும் அல்ல. உலகம் எங்கிலும் குமாஸ்தா

வர்க்கம் இப்படித்தான் இருக்கும். போலி கர்வத்தில் வாழும்''

மார்க்சிஸ்ட் கட்சி செந்தூர்பாண்டியன் தன்னைப் பற்றி இப்படிச் சொன்னார் என்று அப்பாதான் சொன்னார்.

என்னை மதிப்பு குறைவாக நடத்தினால் என்னால் தாங்க முடியாது. என்னால் எல்லா வேலைகளையும் செய்ய முடியாது. என் வேலையென்று உள்ளதை முடிக்காமல் வெளியேறவும் மாட்டேன்.

நான் உனக்கு அப்பா. அந்த மரியாதையுடன் நீ நடந்துக்க. நீ என் மகள் என்று உனக்கு செய்வதை நான் செய்கிறேன்.

ஒரு புதன் மாலை பூகோளபாடத்தின் போது தமயந்தி பெரியவளானாள்.

ஏதோ கடையில் வேலைக்குச் சென்றிருந்த அப்பாவுக்கு அது தெரிவிக்கப்பட்டபோது அம்மாவை அழைதது்கொண்டு பள்ளிக்கூடம் வந்தார். தலையை தடவி ஆசிர்வதித்தார்.

ஐந்தாயிரம் ரூபாய் முதலாளியிடம் கடன் வாங்கி இருந்தார்.

காதுக்கு மாங்காய் தோடு, கழுத்துக்கு மெல்லிய செயின், பட்டுபாவாடையும் நைலக்ஸ் தாவணியும் வாங்கிவந்தார். தங்க நிறத்தில் வெள்ளை உருண்டைக்கல் வாங்கிவந்து அம்மாவிடம் புட்டுபண்ணச் சொன்னார் புட்டு ரொம்ப நன்னா அமைஞ்சிருக்குடி. கொழுந்தை ரொம்ப நன்னா இருக்கும் என்று ரொம்ப சந்தோஷப் பட்டார்.

என்ன ரங்கராஜன் இனிமே தடுக்குபுடுக்குன்னு வேலைய விட்டா புண்ணியம் இல்லை. குழந்தைக்கு



கல்யாணம் பண்ணனும்னா ஒழுங்கா வேலைக்குப்போய் காசு சேகரித்து வைக்கணும் பணம் இல்லாதவன் பிணம்னு சொல்லியிருக்கு. எதிர் போஷன் ஆள் கொக்கரித்தபோது அப்பா பதில் சொல்லவே இல்லை.

சிறிது நேரம் பொறுத்து நான் பணத்தோடு இருக்கிற பொணம் நிறைய பார்த்திருக்கேன் என்றார்.

''என்னய்யா சொல்றீர்.'' எதிர்போர்ஷன் எரிச்சலோடு கத்தியது.

எனக்கு ஒரு இரும்புக்கடைக்காரனை தெரியும். அவன் சின்ன வயசுல கைநிறைய கமர்கட் அள்ளிண்டு போயிட்டான்னு துரத்தி புடிச்சு, அடிச்சு உதைச்சு போலீஸ்லே ஹாண்டோவர் பண்ணிட்டா. ஏழுநாள் ஜெயில், எடுத்தது இருபத்தி இரண்டு கமர்கட். தின்னது மூணு பாக்கி பத்தொன்பது போலீஸ் ஸ்டேஷன்லே பொட்டலமா இருந்தது. அவனுக்கு ஜெயில் தண்டனை கொடுத்துட்டு கமர்கட் பொட்டலத்தை குப்பைத் தொட்டியிலே தூக்கி போட்டாளாம். ஜெயிலில் இருந்து வந்தவனை வீட்டுலே சேர்க்கலை. அந்தப் பையன் விசாக பட்டணத்துக்கு ஓடிப் போயிட்டான் புயல்லமாட்டி கரையில ஒதுங்கின கப்பலை உடைக்கிற வேலையிலே சேர்ந்தான். கூலிகாசு கிடையாது. ரொம்ப துணுக்காக உடைந்த இரும்புத்துண்டு இருபது பவுண்ட். அதான் கூலி அதை வித்துதான் சாப்பாடு. அந்த இரும்பு துண்டோ விலைபோகாது. கான்வாய்ல போட்டுஇரும்பு துண்டை உருக்கி கம்பியாய், கட்டையா, பட்டையா பண்ணிக்கரான். அருவாளாச்சோ, சுத்தியாச்சோ செய்துக்கணும் கார்த்தால இரும்பு உடைப்பான் ராத்திரி கூலியா கெடைச்சதத்தான் உருக்குவான் ஞாயிற்றுக்கிழமை வித்துட்டு வருவான். ஓய்வே இல்லாம உழைச்சி இரும்பு பத்தின அத்தனை ரகசியமும் தெரிஞ்சுசம்பாதித்த

காசை சேர்த்து வச்சி ரெண்டாயிரம் கிலோஅரிவாளோட மெட்ராஸ் வந்தான். இங்க தெருவுல கடைபோட்டு வித்தான். இன்னைக்கு மூணு இரும்புக் கடைசொந்தம். ஒரு நாளைக்கு அஞ்சு லட்சரூபா டர்ன் ஓவர்.

சின்ன வயசுல பசிதாங்காத நண்டு மட்டுமே சுட்டு சாப்பிட்டு இருக்கான். சிப்பிய வேகவச்சி ஒரு கொதி வந்த பிறகு வேர்கடலை மாதிரி உறிச்சி தின்னுருக்கான். பச்சை ஆமை முட்டை சாப்பிட்டதா சொல்லியிருக்கான். எல்லாம் ஜீர்ணமாயிருக்கு.

ஆனா காசு வந்த பிறகு தயிர்சாதம் தவிர வேற எதுரும் சாப்பிட முடியாதபோச்சு. சர்க்கரை சாப்பிடக் கூடாது. உப்பு அதிகமா சாப்பிடக்கூடாது, உறப்பு பேதியாகும் வேகமா சிரிச்சா தொப்பை சுளிக்கிக்கும், வேர்த்துக் கொட்டிச்சின்னா மயக்கம் வரும் தூரல் போட்டுதுன்னா ஸ்வெட்டர் மாட்டிப்பான். கார்த்தால ஒரு கப் தயிர்சாதம் மதியானம் ஒரு கப் தயிர்சாதம். ராத்திரி ஒரு கப் தயிர்சாதம் ரெண்டு பொண்டாட்டி. ரெண்டு பேரும் ரெண்டு சொந்தக்கார குழந்தைகளை தத்து எடுத்துக்கிட்டா. ரெண்டு குழந்தைகளும் இவனை அப்பான்னு கூப்பிட்டு நான் பார்த்ததே இல்லே.

பசிக்கறதுன்னா காசு தரமாட்டான். பைநிறைய பக்கோடா பொட்டலம் வச்சிருப்பான். பூண்டு வெங்காயம் போட்ட பக்கோடா. அதை அவன் எதிர்க்கே சாப்பிடணும். அப்புறம் சாப்பிடறேன்னா அடிச்சிடு வான். அடுத்தவன் சாப்பிடறத பார்க்கப் பிடிக்கும். அந்த அடுத்தாளும் பக்கோடா மட்டும்தான் சாப்பிட ணும் ஏன்னா, அவனுக்கு பகோடான்னா அத்தனை இஷ்டம்.

காசான காசு அவனுக்கு ஆனா என்னைப் பொறுத்த வரைக்கும் அவன் பொணம்.



''அடடே...பரம சந்தோஷமா வேலை செய்யலாமே அவன்கிட்ட. பக்கோடா சாப்பிட்டுண்டே லெட்ஜர் மெயின்டைன்ஸ் பண்ணலாமே அவன்கிட்டே.''

''புடிச்சவா பண்ணலாம். எனக்கு பிடிக்கலை.''

''எது''

''பூண்டு வாசனை. அங்கு வேலை செய்கிறவரைக்கும் ஒரு துண்டு பக்கோடாகூட சாப்பிட்டது இல்லை.''

''எப்படி உங்களை சும்மா விட்டான்.''

''ஒருநாள் விளையாட்டா சொன்னான். ஒரு பொட்டலம் பக்கோடா சாப்பிட்டா ஆயிரருபாய் தரேன்னான்.''

''அடி சக்கை என்ன பண்ணினீர்.''

''ஒரு பொட்டலம் பக்கோடா சாப்பிட்டேன்.''

''ஆயிர ரூபா தந்தானா''

''தந்தான். சுவட்டி அவன் மூஞ்சில் அடிச்சேன்.''

''ஏன்யா.''

''எனக்கு இஷ்டம்னா நான் பக்கோடா சாப்பிடு வேனே தவிர என்னை நீ விலைக்கு வாங்கமுடியாதுன்னு நான் கத்தினேன்.''

''அது பூண்டு பகோடாதானே.''

''இல்லை, அது மெதுபகோடா.''

''திமிருய்யா உனக்கு.''

''ஒரு பொணத்துக்கு அவ்வளவு திமிர் இருந்தா உசிருள்ள எனக்கு எவ்வளவு திமிர் இருக்கும். உனக்கு இருக்கிறது பணத்திமிர் இல்லே. பணத்திமிர்ன்னு சொல் விட்டு வந்தேன்''

அப்பாவின் தத்துவம் அங்குள்ள எவருக்கும் புரிய வில்லை

அசடு என்றார்கள்.

அகந்தை என்றார்கள்.

அறிவாளி என்றார்கள்.

ஆனால், அப்பா அன்புள்ளவர் என்பதை தமயந்தி மட்டும் அறிவாள். தமயந்தியை அப்பா கோபித்துக் கொண்டதே இல்லை.

ஆனால் நிறைய புத்திமதி சொல்லி இருக்கிறார்.

''காத்தாலே எழுந்து படுக்கையை சுருட்டி வச்சுட்டு பல்லு தேய்ச்சு காபி குடிச்சபிறகு சரசரன்னு வீட்டை பெருக்கறது உன் வேலை.''

''பெண் பெரியவள் ஆகறது என்பது உடம்பு மாற் றம் மட்டும் அல்ல. புத்திமாற்றமும்கூட. தன்னை ஒரு பெண் பொறுப்புகளுக்கு தயார்படுத்திக்கணும் நீமனைவி யாய் தாயாய் மாறப்போகிற பெண். அந்தப் பொறுப் புக்கு இப்போதே உன்னை தயார் செய்து கொள்ள வேண்டும்.

''தயவுசெய்து வெட்கப்படாதே மனைவி, தாய் என்பது நாணத்தோடு சம்பந்தப்பட்டது அல்ல. இதைப் பற்றி பேசும்போது அதிக நாணம் கொள்கிற பெண் இந்த பொறுப்புகளைப்பற்றி புரியாமல்தான் இருக் கிறாள் என்பது அர்த்தம்.''



மனைவி, தாய்மை இரண்டும் ஆணோடு சம்பந்தப் பட்டதால் நாணம் பெண்ணுக்கு வருகிறது என்று அம்மா சொன்னாள். நன் அல்லது கன்னியாஸ்திரி என் கிற வார்த்தை சொல்லும்போது நாணம் வரவேயில்லை என்று சொன்னாள்.

''தமயந்தி நாம் இதைப்பற்றி யோசிப்போம். ஆண் என்பவனைப்பற்றி அதிகமாக நாணம் கொண்டதால் தான் ஒரு பெண் கன்னிகாஸ்திரியாக அல்லது துறவியாக மாறுகிறாள் என்பது என் கருத்து.

எது அதிகமானாலும் கடைசியிடம் அருவருப்புதான். உணவு, உடை, பாட்டு, ஆட்டம் எல்லாம் ஒரு அளவில் தான் இருக்க வேண்டும். அதிகமானால் அருவருப்பா கிறது. ஆணைப்பற்றிய நாணம் அதிகமாக, அருவருப்பு வருகிறது. அப்படி அருவருப்பு அடைந்த பெண்கள் துறவிகளாகிவிடுகிறார்கள்.

இன்னும் சற்று விரிவாக யோசித்துப் பார்ப்போம் ஆண் என்பது காமமாகவே பெண்களுக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கிறது காமம் கீழ்த்தரம் என்று சொல்லப்பட் டிருக்கிறது. இது 'மிகப்பெரிய சமூகத் தவறு. ஒரு குளறுபடி தயவுசெய்து நாணம் கொள்ளாதே வெறும் பேச்சுக்கு தலை துவண்டு உட்காராதே ஒரு விஷயத்தை மதிப்பாக்கிக்கொள்வதும் அவமதிப்பாக்கிக் கொள்வதும் நம்மிடம்தான் இருக்கிறது.

''என்னால் அவமதிப்பை தாங்கிக்கொள்ள முடிய வில்லை அவமதிப்போடு சம்பாதிக்கவேண்டும் என்ற அவசியம் எனக்கில்லை. அவமதிப்பு தலையெழுத் தென்றோ, அப்படிதான் இருக்கும் என்றோ. அப்படி இருப்பதுதான் நல்லது என்றோ நான் கொள்வதில்லை.

நான் நல்ல குமாஸ்தா. நல்ல கணக்குப்பிள்ளை. எவரையும் ஐந்து பைசா வஞ்சித்தது இல்லை. என்னை

அவமரியாதையாய் நடத்தினால் பொறுப்பதுமில்லை. அதனாலேயே என்னால் தொடர்ந்து வேலை செய்யவும் முடியவில்லை.

நான் உனக்கு சொல்ல விரும்புவதெல்லாம், அவமதிப்புடன் வாழவேண்டாம் என்பதுதான். மதிப்புடன் வாழ எதையும் துறக்க வேண்டிய அவசியமில்லை. மதிப்பை கொடுத்து மதிப்பை பெறுதல்தான் சிறப்பு. உன் வேலையை நீ செவ்வனே செய், பிற வேலை தானே நடக்கும். இந்த வீட்டை கத்தம் செய்வதே இங்கு உனக்கு வேலை அதை நீயாய் செய், நான், உனக்கு சொல்லித்தான் நீ செய்ய வேண்டும் என்பது உனக்கு ஏற்படும் அவமதிப்பு. நான் சொன்னதை யோசனை செய், போ.''

அப்பா இப்படித்தான் திடும் திடும்மென்று கூப்பிட்டு உட்கார வைத்துப் பேசுவார்.

'இந்த வீட்டில் நான் நம்பர் ஒன். அவள் அம்மா நம்பர் டு, நீ நம்பர் த்ரி. இங்கு முடிவு செய்யும் அதிகாரம் என்னுடையதே' என்று சொல்லுவார்.

அம்மாவுக்கு உடம்புக்கு வந்தது. கர்ப்பப்பையில் கட்டி என்றார்கள். கட்டியை புற்றுநோயா என்று சந்தேகப்பட்டார்கள். அறுவை சிகிச்சை செய்ய தேதி குறித்துவிட்டு உள்ளே கொண்டுபோய் மயக்க மருந்தும் கொடுத்துவிட்டு அறுவை சிகிச்சையை தாங்கமாட்டாள் என்றும் சொன்னார்கள். அப்படியே கொண்டுவந்து போட்டார்கள். அறுவை சிகிச்சை செய்யத்தான் வேண்டும். அதற்கு தயார் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள. அம்மா ஹார்லிக்ஸாக குடித்தாள். ஆப்பிளாகத் தின்றாள். மாத்திரைகளும் மருந்துகளும் இரத்த விருத்தியைத் தந்தன.



அரசு பொது மருத்துவமனையில் இலவசமாகத்தான் ஆப்ரேஷன் செய்யப்பட்டது. ஆனால், மருந்து, மாத்திரை ஊசிக்கு காசு செலவாயிற்று.

பிளஸ் டு முடித்திருந்த தமயந்தி வெல்லிங்டன்னில் டீச்சர் ட்ரெயினிங் பயிற்சியில் சேர்ந்தாள். அதற்கும் காசு செலவாயிற்று.

அவசியத்திற்கு காசு செலவு செய்துதானே ஆக வேண்டும் என்று அப்பா சொன்னாலும் அத்தனையும் கடன் என்று பின்னால் புரிந்தது.

வட்டிக்கு விட்டவன் செட்டிக்காரன். வம்சம் வம்சமாய் வட்டிக்கு விடுவதையே தொழிலாக கொண்டவன் அவர்கள் இருவரும் வாடகை வீட்டிற்கு சொந்தக்காரன். அம்மாவை கவனிங்கய்யா அதான் முக்கியம், என்று கேட்டபோதெல்லாம் காசு கொடுத்தான்.

''பாப்பா படிப்பு முக்கியமில்லையா. படிச்சு டீச்சர் ஆயிடிச்சுன்னா உங்க பாரத்த அதுவும் பங்கு போட்டுக்கும்மில்லையா. இந்த காலத்துல புள்ளைங்கள் நம்பறத விட பொண்ணுங்கள நம்பலாம், பொண்ணுங்கதான் குடும்பத்துக்கு பெரும் உதவி.

நம்ம தமயந்தி ரொம்ப பொறுமை. உங்கமாதிரி இல்லை. ரொம்ப நிதானம். நான் அதை நம்பித்தான் கடன் தரேன், தமயந்தி படிப்பு முக்கியம். நல்லா படிச்சி சட்டுன்னு ஒரு வேலையில சேர்ந்துடு. காசுல்லேன்னு படிப்ப விடாதே. காசு தரத்துக்கு நான் இருக்கேன் என்று சொன்னான்.

எவரும், எதற்காகவும், எந்த நேரமும் இலவசமாய் எதுவும் செய்வதில்லை என்று அன்று அவளுக்கு தெரியாமல் போயிற்று. வாங்கின அத்தனை காசுக்கும் கையெழுத்து சாட்சியும் பெறப்பட்டன.

நலன்தான் விசாரிக்கப்பட்டதே தவிர கடன் கேட்கப் படவே இல்லை. வட்டி என்னவென்று சொல்லவே யில்லை.

ஒருமுறை மெல்ல விழித்துக்கொண்டு வட்டியோடு கடன் இப்பொழுது எவ்வளவு இருக்கும் என்று கேட்ட போது, நீ எத்தனை லட்சம் வாங்கிட்ட எங்கிட்ட வட்டியப்பத்தி கவலையா கேட்கற முதல்ல வேலை தேடற வழியப்பாரு. எங்கினியாவது அஞ்சு பத்து குடுத்து சேரணும்னா அதுக்கும் எங்கிட்ட கேளு. ஆடி மாசம் வெள்ளிக்கிழமையா வீட்டுப்படி மிதிச்சிருக்கே உட்கார்ந்து ஒரு கப் பாயசம் சாப்பிட்டுட்டு போ'' ரவிக்கைத்துணி, மஞ்சட்கிழங்கு; கண்ணாடி வளையல், குங்கும டப்பா, வெற்றிலைப் பாக்கு, மாம்பழம் என்று அவளுக்கு தரப்பட்டது வணங்கி வாங்கி வந்தாள். மறந்து போனாள்.

ஆனால், டீச்சர் வேலைக்கு நாயாய் அலைய வேண்டி யிருந்தது. அரசாங்க பள்ளிக்கூடத்தில், வேலை கிடைக்க வில்லை தனியார் பள்ளிக்கூடத்தில் மாதம் ஐநூறு ரூபாய் சம்பளத்துக்கு சேர்ந்தாள். இவள் வேலைக்குச் சேர்ந்த மறுவருடம் பள்ளிக்கூடம் அரசு அங்கீகாரத்தில் வந்தது. அரசாங்கவிதிமுறைப்படிசம்பளம்வந்ததுதமயந்தி தாங்க முடியாத சந்தோஷத்தில் குதித்தாள், அப்பாவும் ஆறுமாதமாய் ஆயிரத்துஐநூறு சம்பளததில் நிரந்தரமாக இருந்தார். அதிகம வேலையே இல்லாத ஒரு கம்பெனியில் எந்த மரியாதையுப குறையாது உத்தியோகம் பார்த்தார்.

அந்தக் கம்பெனி வட இந்தியனது அந்த இரும்புக் கடை குஜராத்தி நாணயம் உள்ளவர்களை அதிகம் விரும்பினான். நாணயத்தோடு கடவுள் பக்தி உள்ளவரை குருதேவ் என்று கூப்பிட்டான். பிற்பகல் மூன்றில் இருந்து நாலரை வரை பகவத்கீதை ஸ்லோகம்



விளக்கிச் சொல்ல முடியுமா என்று கேட்டான். ஒரு நாளைக்கு நாலைந்து ஸ்லோகம் படித்து விளக்கிச் சொல்ல வேண்டியிருந்தது. அப்பாவின் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டுதான் அந்த குஜராத்தி பாடம் கேட்க உட்காருவானாம்.

எவனொருவன் அனவரதமும் என்னையே (கடவுளையே) நினைத்துக் கொண்டு இருக்கிறானோ அவனது நினசரி யோக க்ஷேமத்தை நான் கவனித்துக் கொள் கிறேன்.

அப்பா அதற்கு மூன்றுநாள் விளக்கம் சொன்னாராம். அந்த விளக்கம் சொன்ன அன்றுதான் தமயந்திக்கு அரசாங்க சம்பளம் கிடைத்ததாம் இதை பிற்பாடு அப்பா சொன்னார். இதையும் ஒரு புத்திமதி போல் சொன்னார்.

என்னையே அதாவது கடவுளையே நினைத்துக் கொண்டு இரு என்பதற்கு என்ன அர்த்தம். கோயில் மண்டபத்திலேயே உட்கார்ந்து இரு என்பதா, ஆறு கால பூஜை செய்வதா? இல்லை.

எல்லா நேரமும் கடவுள் சிந்தனையாகவே இருப்பது. எல்லாவேலைகளையும் கடவுள் வேலையாகவே செய்வது.

நீ யாரோ பெற்ற குழந்தைகளுக்கு பாடம் சொல்லித் தரவில்லை. கிருஷ்ணருக்கு பாடம் சொல்லித் தருகிறாய். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு கிருஷ்ணன். உன்னிடம் சரித்திரப் பாடம் கேட்கும கிருஷ்ணன் நீ யாரிடமோ வேலை செய்யவில்லை கிருஷ்ணருக்கு கீழ் வேலை செய்கிறாய். நீ சமைக்கிற பொழுது கிருஷ்ணருக்கு சமைக்கிறாய் என்று நினைத்துக்கொள் இந்த வீட்டை பெருக்குகிற போது கிருஷ்ணன் வீட்டை பெருக்குகிறாய் என்று நினைத்துக்கொள் கிருஷ்ணனே எல்லாமும் என்று இரு. கிருஷ்ணனுக்கே தெரியும், உனக்கு எப்போது என்ன தரவேண்டும் என்று.

தூங்கும் பொழுது ஒரு ஏழுமணி நேரம் நன்றாய் தூங்கவிடு கிருஷ்ணா அப்போதுதானே உனக்கு மறு நாளும் வேலை செய்ய முடியும் என்று வேண்டுகோள் விடு. கிருஷ்ணா...கிருஷ்ணா என்று இரு கிருஷ்ணருக்காக வேலை செய்ய வேண்டும் என்று எழுந்திரு இதுவே கடவுளோடு இருத்தல்.

கிருஷ்ணரை யாரோ எங்கோ எப்போதோ இருந்தவர் என்று எண்ண வேண்டாம். ஏதோ ஒரு யாதவ குலத்து அரசர் என்று நினைக்க வேண்டாம்.

கடவுளை நாம் கிருஷ்ணர் என்று அழைக்கிறோம் ஒரு அடையாளம் காட்டி கதை சொல்கிறோம் இதையேன் தூண் என்று சொல்கிறோம். ஏன் தூண் என்று பெயர் வைத்தோம் அப்பா தூணை அறைந்து காட்டினார். கீன் கான் கூன் என்று அழைக்கக் கூடாதா பெயரே இல்லாமல் விடக் கூடாதா. நான் சொல்வதை நீ புரிந்து கொள்வதற்காக இதற்கு தூண் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. எங்கள் வீட்டில் ஒரு தூண் இருச்கிறது என்று சொன்னால் எல்லோருக்கும் மனசுக்குள் படம் வரும். பார்த்தவர் ஆமாம் என்று தலையாட்டுவார். பார்க்காதவர் புரிகிறது என்று சொல்லுவார்.

எங்கள் வீட்டில் பெயரிடப்படாத ஒரு விஷயம் இருக்கிறது என்று சொன்னால் யாருக்கு என்ன புரியும்.

அடையாளம் தெரிவதற்காகவே கடவுளுக்கு கிருஷ்ணர் என்று பெயர் வைத்தோம். கதைகள் சொன்னோம். அந்தக் கதைகளினால் கிருஷ்ணரை அதாவது கடவுளை இன்னும் புரிந்து கொள்ள முயற்சிக்கிறோம். மனசை காதாக்கிக் கொண்டவனுக்குப் புரியும். வெறும் காதால் கேட்டவனுக்கு தகவலாக இருக்கும்.



''ராக்கெட் என்றால் உனக்கும் எனக்கும் புரிகிறது. அதுல ஈடுபட்டவனுக்குத்தான் அது என்ன சமாச்சாரம் என்பது புரியும். காரணம், ராக்கெட் நமக்குத் தகவல். வெறும் காது கொடுத்துக் கேட்டோமே தவிர, அதில் ஈடுபடவில்லை.''

''விஞ்ஞானி ஈடுபட்டிருக்கிறான். அவனுக்கு ராக்கெட் புரிந்த அளவுக்கு நமக்கு புரியாது.''

''கடவுளும் அவ்விதமே, கடவுள் நமக்கு ஈடுபாடா தகவலா என்பது பொறுத்தே புரிபடுதலும் இருக்கிறது.''

''ஏன் ஈடுபடவேண்டும்? கடவுளை நான் புரிந்து கொள்ளாவிட்டால் என்ன? கேள்வி வரும்.''

''இதற்குநான்பதில்சொல்கிறேன் எதுசந்தோஷமோ அதில் ஈடுபடுவது மனித இயல்பு. சாப்பிடுவதும், சந்தோஷம். சாப்பிட்டவுடனே மறுபடியும் சாப்பிடுவது சந்தோஷமா இல்லை துக்கம்.''

''தூங்குவது சந்தோஷம் தூங்கி எழுந்து உடனே மறுபடி தூங்குவது சந்தோஷமா? ஒன்பது மணி நேரம் தூங்கிய பிறகு மறுபடி தூங்கு என்றால் எவரால் முடியும்?''

''காசு சந்தோஷம். ஆனால் வியாதிவந்து வலியில் துடித்தால் அப்போது வலிமையின்மைதான் சந்தோஷமே தவிர பணம் அல்ல. வலியின்மைக்காக எல்லா பணத்தையும் கொடுக்கலாம் என்கிற சந்தோஷம்.''

''ஆக இங்கே எதுவும் நிரந்தர சந்தோஷம் அல்ல. எது நிரந்தர சந்தோஷம்.''

''இதை புரியவைக்க எதிர்க் கேள்வி போடுகிறேன். எது நிரந்தர பயம். எது இங்கே பெரிய துக்கம்?''

மரணம்.

''ஆக எது சந்தோஷம்? மரணம் பற்றிய பயம் அகல்வதே நிரந்தர சந்தோஷம். எல்லோரும் சாகப்பயந்து தான் சாகிறார்கள். பயமின்றி சாவதுதான் சந்தோஷம். மரணத்தைப் பற்றி நெல்முனையளவும் கவலைப் படாததுதான் சந்தோஷம்.''

''இந்த பயம் போவதற்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம். இந்த பயம் போக அந்த கடவுளை எங்கே தேட வேண்டும்''

கடவுள் வேறு எங்கேயும் இல்லை. உன் உள்ளேயே இருக்கிறார்.

என்னுள் எங்கே இருக்கிறார்.

தேடு.

''உன்னுள் இருப்பதை நீதான் தேடவேண்டும். நரன் எப்படித் தேடுவேன். என்னுள்ளே இருப்பதை நான்தான் தேடவேண்டும். நீ எப்படி தேடுவாய்.''

கடவுள் வெளியே இருந்தால் நாம இரண்டு பேரும் சேர்ந்து தேடலாம். உலகம் முழுவதும் ஒன்றாய் கூடி தேடலாம். ஆனால் கடவுள் உன் உள்ளேயும் என்னுள் ளேயும் இருக்கிறார், அவரவர்தான் தேட வேண்டும்.

''தேடு என்று தள்ளிவிட்டால் எப்படி. வழி சொல்ல வேண்டும் அல்லவா''

''சொல்லியிருக்கிறார்கள். தேடிக் கண்டுபிடித்தவர் களால் சொல்லப்பட்டு இருக்கிறது. சொல்லப்பட்டதா லேயே கண்டுபிடிக்க முடியாது.''

''மைலாப்பூருக்கு எப்படிப்போக வேண்டும் என்று கேட்டால் நான் இப்படி போக வேண்டும் என்று சொல் வேன். மைலாப்பூர் எப்படி இருக்கும் என்று கேட்டால் இப்படி இருக்கும் என்று விவரிப்பேன்.''

''நான் எத்தனை சொன்னாலும் நான் பார்த்த மைலாப்பூர் உனக்கு தெரியுமோ, நீ பார்க்க வேண்டும்,



நீயாய் பார்க்கும்வரை நான் உனக்குச் சொன்ன மைலாப் பூர் வேறு படமாய்த்தான் இருக்கும்.''

''என் குஜராத்தி முதலாளியை இப்படத்திலோ, நேரிலோ பார்த்தது இலலை. நீ எந்தா ஒரு முகம் கற்பனை செய்து கொண்டு இருப்பாய். ஒருநாள் நேரே பார்ப்பாய்.''

''அப்போது பார்த்த அந்த கணக்கில் நீ மனசில் போட்ட அவன் முகம் அழிந்து அவன் நேரடி முகம் உன் மனசில் பதியும். அவன் முகம் உன்னுள் பதிந்த பிறகு நீ மனசுள் போட்ட படம் மங்கிப்போகும்''

''எனவே நேரடி தரிசனம் போய் பார்ப்பது. நீயாய் தேடுவது என்பதே முக்கியம்.''

''நானாய் தேடுவது முக்கியம் என்று சொல்லிவிட்டீர் கள். தேடுவது எப்படி என்று சொல்லுங்கள். கடவுளைத் தேடுவது என்பது என்ன? அதுவும் தன்னுள் இருக்கும் கடவுளைத் தேடுவது எப்படி?''

''நீ ஒரு ஜாங்கிரி சாப்பிடுகிறாய். வாயில் போட்டு மெல்லுகிறாய். இனிப்பு நாக்கெல்லாம் பரவுகிறது. சந்தோஷமாக இனிப்பை அனுபவிக்கிறாய்''

''அந்த இனிப்பை அனுபவிப்பது யார், நாக்கா?''

''ஆம் என்று வைத்துக்கொள்''

''அந்த நாக்கு எதனால் இனிப்பை அனுபவிக்கிறது.''

''நாக்கில் உள்ள சுவைமொட்டுகளால். அந்த சுவை மொட்டுகளுக்கு எதனால் அந்த சக்தி உடம்பில் இருக்கும் ஆயிரக்கணக்கான நரம்புகளால் அந்த நரம்புகள் அதை எப்படி அனுபவிக்கின்றன. இரத்த ஓட்டத்தால். ஹிருதயம் அசைந்து இயங்குவதால். ஹிருதயம் எதனால் இயங்குகிறது. நம் நுரையீரல் சுவாசிப்பதால். அந்த

யார், எந்த சக்தி, நுரையீரலை அசைத்து இயக்குவது
எதன் பலத்தால் ஹிருதயம் அசைந்து அசைந்து காற்றை
இழுக்கிறது. உயிர் சக்தியால் அந்த உயிர் என்பது
எங்கே''

எங்கே வசிக்கிறது அந்த உயிர்? கால் கட்டை
விரலிலா. தோள் பட்டையிலா, தலையிலா, கழுத்தோ.
முதுகோ வா?

அந்த உயிர் நெஞ்சின் இடப்புறத்தில் கட்டைவிரல்
அளவு சக்தியாய் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

''இதை இப்படி விளக்குகிறேன். நான் தமயந்தி
என்கிற போது கால்கட்டை விரலிலா கை வைத்துக்
கொள்கிறாய். மூக்கிலா விரல் வைத்துக கொள்கிறாய்.
தலையையா தொட்டுக் காட்டுகிறாய். நான் தமயந்தி
என்கிறபோது இடது மார்புக்கல்லவா கை போகிறது.
நான் என்பதை ஹிருதய கோசம் ஹார்ட் என்பதாய்
உணர்கிறாயா. இல்லை. அதற்கு கீழும் உள்ள ஒரு
சக்தியை சொல்கிறாய்.''

நான் என்று அப்படி நினைப்பது யார், எது, எது
அந்த நான், எதனால் இருக்கிறாோ, எதனால் உண்
கிறாயோ, எதனால் தூங்கினாயோ எந்த சக்தியினால்
சிந்திப்புத் திறன் வருகிறதோ அது.

''யார் சிந்திப்பது, என்று உற்றுப்பார், யார் கோபப்
படுகிறார்கள் என்று உற்றுப் பார். யார் சந்தோஷம்
தேடுகிறார்கள் என்று இடைவிடாது கவனி கவனிக்க
கவனிக்க ஹிருதய குகையின் ஆழத்தில் ஏதோ ஒன்று
புலப்படும். அப்படி புலப்படுவதை விவரிக்க முடியாது.
அங்கே கண்டதை சொல்ல முடியாது.''

''கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்'' என்று
காவியங்கள் இதைத்தான் சொல்கின்றன. எங்கும் இருக்
கிற மிகப்பெரிய சக்தியே உன்னுள்ளும் இருக்கிறது.



உன்னுள் இருப்பதே வெளியிலும் இருக்கிறது, என்னுள்
ளும் இருக்கிறது.''

''மூடப்பட்ட இந்த பாட்டிலில் காற்று இருக்கிறது.
இந்த பாட்டிலை உடைத்து விட்டால் அந்தக் காற்று
வெளிக் காற்றோடு கலந்து விடுகிறது. இந்த பாட்டிலுக்
குள் இருக்கும் வெளியும், வெளியே இருக்கும் வெளியும்
கலந்து போய் விடுகின்றன.''

''பாட்டில் இல்லை உடைந்து விட்டது வெளியோடு
கலந்து விடுகிறது.''

இந்த பாட்டில் வேறு, அந்தப் பாட்டில் வேறு.
பாட்டில் எல்லாவற்றிலும் இருப்பதே வெளியிலேயும்
இருக்கிறது. அது கண்ணுக்குப் புலப்படாத சக்திஉருவம்
இல்லாத சக்தி.

''நாம் எல்லோரும் பாட்டில்கள் ஒரு நாள் உடை
வோம். எல்லா பாட்டிலும் ஒரு நாள் உடையத்தான்
செய்யும். உடையும் காலம்தான், வித்தியாசம்,''

''உன்னுள் உன்னை இயக்குகிற சக்தியே வெளியிலும்
இருக்கிறது. அந்த சக்தியே கடவுள். அந்த சக்தியே நீ.
அந்த சக்தியே என்னுள் இருக்கிறது, அதுவே நான்''

''எல்லா இடத்திலும் இருக்கும் சக்தி ஒன்றே எனில்
நானும் நீயும் வேறோ. நானும் கடவுள் நீயும் கடவுள்,
அம்மாவும் கடவுள் எல்லோரும் கடவுள்.''

''கடவுள் கடவுளோடு கலப்பது துக்கமா, சந்
தோஷமா.''

''எங்கும் பரவியிருப்பது சந்தோஷமா, இங்கே
அடைந்து கொண்டு இருப்பது சந்தோஷமா.''

''மரணம் விடுதலை. சாவு சந்தோஷம்.''

''எல்லோரும் சாக பயந்துதான் சாகிறார்கள் இதைத்
தெரிந்தவன் மரணத்திற்குப் பயப்பட மாட்டான்.''

''மரணத்தை வெல்லுதல் என்பது மரணமில்லாமல் இருப்பது அல்ல. மரண பயத்தை வெல்லுவது.''

ஆக இப்போது சொல் எது சந்தோஷம். பயமின்றி இருத்தலே சந்தோஷம். மரண பயமே போய் விட்ட பிறகு மற்ற பயம் என்ன செய்யும். மரண பயம் போனவனுக்கு வாழ்க்கையே வேறு விதம், எல்லாம் சிரிப்பு மயம். அது பரமானந்தம்.

அம்மாவும் தமயந்தியும், அப்பாவின் பேச்சை 'ஆ' வென்று கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.''

''அம்மாவுக்கு என்ன புரிந்ததோ தெரியவில்லை. எழுந்து போய் அப்பாவை நமஸ்காரம் செய்தாள் தலை நிமிர்த்தி இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன். எனக்கு நீங்க புருஷனா கெடைச்சத பத்தி இன்னிக்குத் தான் முழு சந்தோஷமா இருக்கேன்.''

நமஸ்கரித்துவிட்டு அம்மா உள்ளே போய் விட்டாள்

தமயந்திக்குப் புரிந்தது போலும் இருந்தது இல்லாது போலும் இருந்தது.

இரண்டாவது முறை பகவத்கீதையை முழுதாய் அந்த குஜராத்தி முதலாளிகு விளக்கம் சொன்ன மூன்றாவது நாள் அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்தது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

''மாசிவ் அட்டாக் என்று சொல்லப்பட்டது. காசுக்கு தமயந்தி வீட்டுக்காரனிடம் ஓடினாள்.''

ஏற்கனவே நிறைய கடன் இருக்கேயம்மா என்ற வீட்டுக்காரன் கைவிரித்தான்.

''இரும்புக்கடை குஜராத்தி அவன் மருமகனை அனுப்பினான். ஆஸ்பத்திரிக்கு காசு கட்டினான். அப்பா மறுநாள் கண் விழித்தார்.''



''நான் செத்துப் போறதப் பத்தி கவலைப்படாதே தமயந்தி'' என்றார். இன்னும் ரெண்டு நாள்தான் உசிரோடு இருப்பேன். உனக்கு அதிகமா சுமை தரமாட்டேன். என்னோட சுடுகாட்டுச் செலவுக்கும் வைத்திய காரியத்துக்கும் அந்த குஜராத்திக்காரன் காசு தருவான். நான் ரெண்டாம் தடவை பகவத் கீதையை படிச்சதுக்கு அதுதான் சன்மானம் அப்படி செய்டான்னு சத்தியம் வாங்கியிருக்கேன். அவனும் செய்து இருக்கான்.

ஆனா வீட்டுக்காரர்கிட்ட வாங்கின கடன் அப்படியே இருக்கு அதை அடைச்சுரு தமயந்தி. எனக்கு புள்ளை இல்லை எனக்கு இருக்கறது ஒரே பெண் நீ நீ தான் அந்தக் கடனை அடைக்கணும். எப்பாடுபட்டாவது அந்தக் கடனை அடைச்சுடு தமயந்தி. அப்பதான் என் மனசு குளிரும்.''

''மூன்று நாள் பிரைவேட் நர்சிங்ஹோம் செலவு ஆறாயிரம் ஆயிற்று. அப்பா நாலாம் நாள் முற்பகலில் மார்கழிமாதம் கிருஷ்ண பட்சத்தில் சப்தமி திதியில் இறந்து போனார்.''

''இறந்து போகுமுன் கண் விழித்து தமயந்தியைப் பார்த்து சிரித்தார். எல்லாம் தெரிந்த சிரிப்பு அது. அவர் இறந்த அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த குஜராத்தி ஆஸ்பத்திரிக்கு வந்தான். அந்த குஜராத்தி கிழவனை பார்த்த வினாடியில் அவனைப் பற்றி அவள் மனசில் வரைந்திருந்த அவன் முகம் அழிந்து அவன் நிஜமுகம் ஒட்டிக் கொண்டது.''

''மகளே என்று அந்த குஜராத்தி கைகூப்பினான். உன் தந்தையின் ஈமக்கடனை நான் முன்னின்று நடத்தி வைப்பதாய் வாக்குக் கொடுத்து இருக்கிறேன். எவ்வளவு விமர்சையாய் செய்ய வேண்டுமோ என்ன விதமான வைதீகம், தாளங்கள், விதிமுறைகள் செய்ய வேண்டுமோ

அதை நீ செய்யலாம். அதற்கான செலவு முழுவதும் என்னுடையது. அப்பாவின் தம்பி மகன், சித்தப்பாவின் பிள்ளை தீ மூட்டினான். தீ தகதகத்து எரியும் வரை காத்திருந்து இரண்டாயிரம் ரூபாய் பெறுமானப் உள்ள சந்தனக் கட்டையை அந்த குஜராத்தி போட்டதாக வீட்டிற்கு வந்து பெருமையுடன் சொன்னான்.''

''இரும்புச் சட்டியில் நல்லெண்ணெய் தானத்தி லிருந்து 'பசுவும் கன்று'மான கோதானம் வரைகொடுக்கப் பட்டது. வெங்கல மணியில் இருந்து கம்பளிப் போர்வை வரை தானமாக வழங்கப்பட்டது. காசு குஜராத்தியி னுடையது.''

பதிமூன்றாம் நாள் சுபஸ்வீகாரம் ஆனவுடன் அந்த குஜராத்தி நேரில் வந்து ஒரு சொம்பு தண்ணீர் குடித்தான். திருப்தியா குறையேதும் உண்டா என்று கேட்டான்.

''பிராவிடன்ட்பன்ட் போன்ற பிடிப்பு ஏதும் என் கடையில் வேலை செய்பவர்களுக்கு நான் செய்வதில்லை. இருப்பினும் அவர் மூன்று மாத சம்பளத்தை கணக்கிட்டு ஒரு இழப்பு நிதியாக உனக்கு தருகிறேன். இதை என் தானமாய் இல்லை அன்பளிப்பாய் செய்கிறேன்'' என்று தந்து விட்டுப் போனான்.

''அவன் போன பத்தாவது நிமிடம், அந்த வீட்டுக் காரர் உள்ளே நுழைந்தார், போனவர் போயிட்டாரு. இப்ப இருக்கறவங்கதான் பதில் சொல்லணும் என்றார்.

தமயந்தி என்னவென்று கேட்டாள்.

''கடன் இருக்கிறதேம்மா.''

''எவ்வளவு''

''அசல் வட்டி எதுவுமே தரலியே''

''எவ்வளவு''



''அப்பா வாங்கினதும் தரலை, நீ வாங்கினதும் தரலை.''

''எவ்வளவு?''

''இருபதாயிரத்து நானூத்தி எழுபத்தி அஞ்சு ரூபா கடன் வட்டி பதினேழாயிரம்.''

''ஐயோ''

''வட்டியாவது கொஞ்சம் கட்டு, அதை கேக்கத் தான் வந்தேன்.''

''ரொம்ப அதிகமா படறதே.''

''வாங்கறபோது படாது. வட்டின்னு கேட்கறபோது தான் படும்.''

''கொஞ்சம் குறைச்சுக்கங்களேன்.''

''கால்பாகம் வட்டி மட்டும் தள்ளிடறேன். மொத்த மும் கட்டிடறியா.''

''ஐயோ.''

''அப்ப வட்டியாவது கட்டு''

''எங்கிட்ட அவ்வளவு இல்லியே.''

''சேட்டு நாலாயிரத்து ஐநூறு கொடுத்தானே. அது எதுக்கு பட்டுப் புடவை வாங்கவா. பவுடர் டப்பா வாங்கவா. வட்டிய கட்டும்மா முதல்ல'' அதட்டிப் பேசி நாலாயிரம் வாங்கிக் கொண்டு போனான்.

மறுமாதம் வாடகைக்கு வரும் போதே வீட்டு வாடகையை தொன்னூறிலிருந்து நூற்றி ஐம்பதுக்கு மாற்றியிருப்பதாக சொன்னான். தரமறுத்தால் வீட்டை காலி செய்ய சொன்னான்.

தமயந்தி அந்த வீட்டை காலி செய்து நூற்று முப்பது ரூபாய் அடுக்குமாடி போர்ஷனுக்கு போனாள்.

அங்கேயும் கடன் கொடுத்தவன் வந்தான்.

''அசல்ல நீ எப்ப அடைப்பேன்னு எனக்குத் தெரியாது. ஆனா மாசம் அறுநூறு ரூபா வட்டிய கொடுத்துடணும். சாக்கு போக்குச் சொன்னா ஹூட்டு வாசல்ல அசிங்கமா கத்தும்படியாகும்.''

'அவள் அப்பா இல்லாத பொண்ணு'ன்னு அம்மா அழுதாள்.

''அதுனால என்ன, அரசாங்க வேலையிருக்கில்லே. ஆயிரத்தி தொள்ளாயிர ரூபா சம்பளம் வருதில்லே. அதுல அறுநூறு ரூபா கொடுக்கக் கசக்குதா.''

''அப்பா இல்லாத பொண்ணை நீங்க இப்படி தொந்தரவு படுத்தறது நியாயமே இல்லை. அவர் இருந்தா நடக்கறதே வேற.''

''என்னம்மா நடக்கும். அந்த ஆள் ஒரு அப்பனா. ஒரு ஆம்பிளையா, தான் இல்லாத போனாலும் அந்த கடனை தன் வாரிசு அடைக்கணும்னுதான் கடனை வாங்கினான். கடன் வாங்கி கையெழுத்து போட்ட அந்த பத்திரத்துல அதுவும ஒரு விதி ரூல். அதனாலதான் படியேறி வட்டிய கேக்கறேன். பாப்பா கடனை அடைக்கும்னுதான் இங்கே வந்து வட்டிய கேக்கறேன். இல்லேன்னா நடக்கறதே வேற''

''என்னா நடக்கும் சீறினாள்'' தமயந்தி.

''வாங்கின கடனுக்கு ஆத்தாளும் பொண்ணும் மாத்தி மாத்தி படுத்துக்கிங்கடின்னு சொல்லுவேன். வேற என்னா''

தமயந்திக்கு கோபத்தால் உடலெல்லாம் நடுங்கியது. அரிவாள் மனையை எடுத்து அவன் தலையைக் கொய்ய வேண்டும் போல் வந்தது. மாடியில் இருந்து அவனை



நெட்டுக் குத்தாய் தள்ள வேண்டும் போல் ஆத்திரம் வந்தது.

''ஆனால் சொல்லபட்ட அவமானம் தாங்காமல் அழுகைதான் வந்தது. அறுநூறு ரூபாய் அவன்மீது தூக்கிப்போட்டாள். ஹாலில் சுருண்டு படுத்துக்கொண்டு அழுதாள்.''

''அப்பா...அப்பா என் இனிய அப்பா, கடவுளை மட்டும் தேடித் தேடி கண்டு பிடித்துவிட்டு போய் விட்டாய். காசு தேட மறந்துவிட்டாய். தேடிப்பொருள் கொண்டு வந்து பெண்ணின் வாழ்க்கைக்கு சேர்த்து வைக்காமல் கடனை மட்டும் கைமாற்றிக் கொடுத்து விட்டுப் போய்விட்டாய்.''

அப்பா நீ தத்துவம் சொல்லித் தந்தாய். கடனும் சேர்த்து வைத்தாய். இப்போது எனக்கு உன் சீதனம் எது என்று சொல். உன் தத்துவமா அல்லது கடனா...''

''உன் தத்துவம் எனக்குப் புரியவில்லை. நீ வைத்து விட்டுப்போன கடன்தான் கண்ணுக்குத் தெரிகிறது.''

''அப்பா நீ சொல் பொறுக்க மாட்டாய். மதிப்பு அழிய வேலை செய்ய மாட்டாய் நீ வெறும் மதிப்பு மட்டும் சம்பாதித்து விட்டுப்போக நான் அவமதிக்கப் படுகிறேன். பெரும் அவவதிப்பு இது. காசுக்குப் பதிலாய் கற்பைக் கேட்கும் அவமதிப்பு இது. அப்பா...நான் இப்போ என் கற்பை மதிக்க வேண்டுமா அல்லது நீ வைத்து விட்டுப்போன கடனை மதிக்க வேண்டுமா.''

பகவத் கீதை இதற்கு என்ன பதில் சொல்லும். என்னைக் கற்போடு இரு என்று சொல்லுமா வாங்கின கடனுக்கு விற்று விட்டுப் போ என்று சொல்லுமா.

''செத்துப்போன உன்னைக் கேட்டால் நீ பதில் சொல்ல மாட்டாய் நான் என்னைக் கேட்கிறேன்' என்னுள் இருக்கும் என்னைக் கேட்கிறேன்.''

என்னுள் இருப்பதே உன்னுள் இருப்பது, என்னைக் கேட்பதே உன்னைக் கேட்பது.நானே நீ, நீயே நான்.

நான் இதற்கு பதில் சொல்லட்டுமா.

எனக்கு கற்பு முக்கியம். கற்பு என்பது மதிப்போடு சம்பந்தப்பட்ட விஷயம்.

கற்பழிய மதிப்பு அழியும். மதிப்பு அழிய வாழ்க்கை அழியும், இது வாழும்போதே மரணம். நான் கற்பு, மதிப்போடு வாழ விரும்புகிறேன். உன் கடனை அடைப் பேன். எப்பாடுபட்டாவது கடனை அடைப்பேன்.

'கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து ஒரு பள்ளிக்கூட டீச்சர் வீட்டுக்குப் போனாள், அந்த டீச்சர் புருஷன் ஒரு வக்கீல். அவரிடம் உதவி கேட்க. அவர். கடன் வாங்கியவர் வீட்டிற்குப் போய் பத்திரங்கள் பார்க்க சட்டப்படி நீ அடைத்துதான் ஆகவேண்டும் என்று சொல்லிவிட்டார். பத்திரம் சரியாக இருக்கிறது. எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும் தீர்ப்பு உனக்கு எதிராகத்தான் அமையும்.''

''வட்டி குறைக்கச் சொல்லி மேல் கோர்ட்டில் மனு போடலாம். ஆனால் மொத்தமாய் கட்டச் சொல்லி உத்தரவிடும் எனவே கோர்ட்டுக்குப் போவதை விட, சாதுவாக கடனை அடைப்பதே உத்தமம், என்று கைவிரித்து விட்டார்.''

''வட்டி குட்டிப்போட்டுக் கொண்டே இருந்தது. சில சமயம் வட்டியின் ஒரு பகுதிதான் கட்ட முடிந்தது. வட்டிக்கு வட்டி என்று ஏறியது. ஐந்து வருடத்தில் இருபதாயிரம் கட்டுவது கஷ்டமாயிற்று. ஒரு டீச்சருக்கு



மிகப் பெரிய வருமானம் கிடையாது. அந்தப் பள்ளிக்கூட சட்டப்படி டியூஷன் வைத்துக் கொள்ள முடியாது. வேறு வகையில் சம்பாத்தியம் செய்ய முடியாது.''

''எவனொருவன் அனவரதமும் என்னை சேவித்துக் கொண்டு இருக்கிறானோ, அவன் தினசரி யோக க்ஷேமத்தை தினசரி வாழ்க்கை வசதியை நான் கவனித்துக் கொள்கிறேன்.'' தமயந்தி கடவுளை வேண்டினாள். செய்யும் தொழிலை கடவுளாகவே நினைத்தாள். நல்ல டீச்சர் என்றே பெயர் வாங்கினாள்.

ஆனால்,.செய்யும் தொழிலை கால்விரல் நகமாகக் கூட மதிக்காவர்கள் சௌகரியமாக இருந்தார்கள். கடவு ளாக மதித்தவர்கள் கஷ்டப்பட்டார்கள்.

''கணக்கு சௌமியா கவலையே இல்லாமல் இருந் தாள். தினம் ஒரு புடவையில் வந்தாள். தினம் ஒரு காரில் இறங்கினாள். தினமும் ஒரு வெட்டிக்கதை சொன் னாள். ஆனால் தமயந்தி வாய்விட்டுச் சிரிக்கவே முடியாதபடி நிம்மதியாய் தூங்கவே முடியாதபடி வட்டிக்கு வட்டி கட்ட வேண்டிய வேதனை நெஞ்சை அரித்தது. எத்தனை சாப்பிட்டாலும் உடம்பில் ஒட்டாமல் போயிற்று. கனவு கூட சந்தோஷமாய் வர வில்லை. எதற்கோ பயந்து பயந்து ஓடுகிற கனவுதான் வந்தது. இரவுக் கனவுகள் சரியாக வராததால் அடிக்கடி பகற்கனவில் முழுகுவது பழக்கமாய்ப் போயிற்று.''

இப்போது கிளி ஜோஸியம் பார்த்ததுகூட ஒருபகல் கனவு. நாளை விடியும் என்று எந்த ஆதாரமும் இன்றி ஆறுதல் அடைந்த கனவு. ஆண்டாள் படம் கிளி ஜோஸ்யத்தில் வந்தது

ஆண்டாளின் கனவு பகல் கனவா, இரவு கனவா?

இரண்டும் இல்லை. அது முழுநேரக் கனவு. இரவ

பகலே இல்லாத கனவு. அனவரதமும் அவனே என்ற கனவு.

தமயந்திக்கு ஒருமுறை உடம்பு சிலிர்த்துப்போட்டது.

''நடந்துபோகும்போது சிக்னலுக்கு அருகேஒருபெரிய சாலையை கடக்க வேண்டியிருந்தது. பாதையை கடக்க பச்சை விளக்கு வரும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது அவள் பக்கம் இருந்த கார்களும் காத்திருந்தன.''

''ஒரு சிகப்பு மாருதி. கணவனைப்போல் ஒருவன் கார் ஓட்டுமிடத்தில் இருக்க, மனைவியைப் போல் ஒருத்தி முன்பக்கம் அமர்ந்திருந்தாள். பின்பக்கச் சீட்டில் ஒரு எட்டு வயது பையனும், வெள்ளைக் குச்சு நாயும் இருந்தார்கள். நாய் அலைந்து கொண்டு இருந்தது. அந்த பையன் 'வீடியோ கேம்' ஆடிக்கொண்டு இருந்தான். அந்த பெண்மணியின் முகத்தில் செல்வச் செழிப்பு தெரிந்தது அல்லது தெரிந்ததுபோல் இருந்தது. வலப்புற ரவிக்கை முற்றிலும் தெரியும்படியாக விம்மிப் புடைக்கும் மார்பகங்களோடு அவள் உட்கார்ந்திருந்தாள். தமயந்தியைவிட வயதானாலும் தமயந்தியைவிட அழகாக இருந்தாள்.''

''ஒரு சைக்கிள் ஒரு ஆள் கால் ஊன்றி அந்தப் பெண்மணியை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்ப்பதை அந்தப் பெண்மணியோ, அவள் புருஷனாகப் பட்டவனோ கவனிக்கவேயில்லை.''

''பணம் ஒருவரை அழகு செய்யுமோ. பணம் ஒருவருக்கு அலட்சியம் கொடுக்குமோ. அந்த அலட்சியம் இன்னும் அழகு சேர்க்குமோ.''

''நகரத்துக்குள் மாருதி கார் ஒரு சுகம். ஒருபிள்ளை ஒரு புருஷன், ஒரு நாய் சுகம். அவள் கழுத்தில் நல்லதடிமனாய் ஒரு தாலிச்சரடு மட்டும் இருந்தது. காதுகளில்



சின்ன கல்தோடு அதிகம் மின்னிற்று முன்தலை வெட்டி பின்தலைக்கு ரப்பர் பேண்ட் போட்டு பிரித்து விட்டாலும்பின்னிக்கொண்டாலும் அழகாய்இருக்கும்படி கத்தரித்து விட்டிருந்தாள். கைவிரலில் ஒரு பவழ மோதிரம் இருந்தது. கால்மீது கால்போட்டு உட்கார்ந்து ஒரு கம்பீரம் இருந்தது. திரும்பி அந்தப் பெண் ச்சூ... என்றதும் நாய் அடங்கி உட்கார்ந்தது. ச்சூ...என்று புருஷனை அவள் அதட்டினால் அவனும் அடங்குவான் என்று தோன்றியது மார்புச் சேலையை இழுத்து விட்டு கொண்டாள். மறுபடியும் நழுவியது.

அந்தப் பெண்மணி திரும்பி தமயந்தியை பார்த்தாள் அவள் புருஷன் தோளை சட்டென்று தட்டி ''இந்தபெண் உங்களையே முறைத்துப் பார்க்கின்றது பாருங்கள்'' என்று ஆங்கிலத்தில் சொன்னாள். அந்த புருஷன் சட்டென்று குனிந்து தமயந்தியைப் பார்த்தான். சிரித்தான்.

''தமயந்தியை 'தடா'லென்று ஒருவெட்கம் தூக்கியது கலவரமானாள். பின்னால் நெளிந்து வலப்புறம் நகர்ந்து அந்தக் காரின் பின்பக்கம் போய் நின்று கொண்டாள். தமயந்தியை இப்போது அந்தப் பையனும் நாயும் திரும்பிப் பார்த்தார்கள் நாய் குரைத்தது பையன் 'வெவ்வே' என்று அழகு காட்டினான் கார் கிளம்பி மற்ற வாகனங்களோடு கலந்தது. அவளைக் கடந்துபோன எல்லாக் காரிலும் பணக்காரத்தனம் தெரிந்தது''

''நான் மட்டும் ஏன் பணக்காரி ஆகவில்லைநான் ஏன் பஸ்ஸிற்கு செலவழிக்கக்கூட பயப்படும் ஏழையாக இருக்கிறேன். பிசுக் பிசுக்கென்று வெய்யிலில் நடந்து போகிறேன்.''

இவர்களுக்கு மட்டும் பணம் எப்படி வந்தது. எதனால் இவர்களை வாழ்க்கை யோகமாக மாறிற்று.

''அனவரதமும் அந்தப் பெண்மணி கடவுளையே நினைத்துக் கொண்டு இருந்தாளா, அதனால்தான் சொந்தக் காரில் சொகுசாகப் போகிறாளா. அல்லது அவர்களின் முன்னோர்கள் அனவரதமும் கடவுளை நினைத்துக் கொண்டு இவளுக்கு கொடுத்த புண்ணியமா''

''பணம் என்பது எவ்வளவோ செழுமை, கன்னத்தில் செழுமை, உடம்பு செழுமை காரில் இப்படி உட்கார்ந்து போனாலே செழுமை வந்துவிடுமோ பஸ்சுக்கு காசு செலவழிக்கப் பயந்து வெய்யிலில் நடந்து போனால் என்னைப் போல் கச்சல் உருவம்தான் அமையுமோ.''

''ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் ரூபாய் வருமானம் என்றால் சந்தோஷமாய்ச் சாப்பிடத் தோன்றும் மாதம் ரெண்டாயிர ரூபாய் வருமானத்தில் ஏழு நூறு வட்டி கட்ட வேண்டுமென்றால் எது சாப்பிட்டாலும் ஒட்டாது சாப்பிடத் தோன்றாது. இரண்டு கவளம் மோர் சாதம் சாப்பிட்டு ஒரு சொம்பு தண்ணீர் குடித்தால் பசிஅடங்கி விடுகிறது. அடுத்த கவளம் வெறுப்பாய் போய் விடுகிறது மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது கவளத்தை கடன் கவலையோடு சாப்பிட வேண்டியிருக்கிறது பசியில்லாது வேண்டாவெறுப்பாய் சாப்பிட வேண்டியிருக்கிறது. ஒரு வேளைக்கு ஐந்து கவளம்தான், அதற்கு மேல் சாப்பிடவே முடியாது ''

அந்த ஐந்து கவளம் கொள்ளும் டிபன் பாக்ஸையும் ஒரு நாள் மறந்து போய் வீட்டிலேயே வைத்துவிட்டு பள்ளிக் கூடத்திற்கு வந்தாள்.

''டிபன் பாக்ஸ் மறந்துட்டியா. அதனால் என்ன... என் சாப்பாட்டை பாதி பாதியாய் எடுத்துக்குவோம்.'' கணக்கு செளமியா அவள் டிபன் பாக்ஸை திறந்தாள்.

வெஜ்டேபிள் ஃப்ரைட் ரைஸ் மாசலா வாசனை தூக்கியது. பாதி எடுத்து டிபன்பாக்ஸ் மூடியில் தமயந்



திக்கு வழங்கினாள். அதனை சாப்பிட்டதும் இன்னும் கொண்டா...இன்னும் கொண்டா என்று வயிறு பசித்தது. அடிக்கடி தண்ணீர் குடித்து பசியை அடக்கவேண்டியிருந்தது. நறுமணமும் சுவையும்கூட இல்லாத உணவை சாப்பிட வேண்டிய வறுமை தனக்கு இருப்பதை பற்றி நினைக்கத்தோன்றியது. அந்த காரில் போனவள் எப்போது பார்த்தாலும் வெஜ்டெபிள் ப்ரெட் ரைஸ் சாப்பிடுவாள். அதனால்தான் அத்தனை வளமாக இருக்கிறாள். நல்ல நிறமாக இருக்கிறாள்.

''நான் நோஞ்சல், தோள்பட்டை குழியல். என் மார்புகள் சிறியன. புஜங்கள் மெலிந்தவை. இடுப்பில் தசையே இல்லை. வயசுவளம் வளப்பத்தால் கன்னங்கள் மட்டும் கொஞ்சம் பூசினதைப் போல் இருக்கின்றன.''

''பகவானே எனக்கு கார்வேண்டாம். வேதனையின்றி சாப்பிடுகின்ற நிலையைகொடு போதும். அப்பா மரணத்திற்கு பயப்படாததையே வெற்றி என்றார். கடன் தொல்லை கூட ஒரு மரணம். மனசின் மரணம் பயம்.''

''வட்டி கொடுக்க முடியலையா வாடி எங்கிட்ட அவிழ்த்துவிடு எல்லாத்தையும்'' என்று சொல்லிவிடுவானோ என்கிற பயம். மானம் அழிவதும் மரணம் வருவதும் ஒன்றே. மானம் அழிந்தால் மனசு பிணமாகும். மனசு பிணமானால் இன்னும் உடம்பு சீரழியும். எப்படி, யாவது கடனை அடைத்துவிட வேண்டும்.

''அதற்குப் பிறகு கடனே வாங்கக்கூடாது என்று வைராக்கியம் வரவேண்டும். அப்போது மோர் சாதமும். மாவடுவும்கூட சுவையாக இருக்கும்.''

''வழித்து வழித்து சாப்பிடத் தோன்றும். இன்னும் பெரிய டிபன்பாக்ஸ் தேவைப்படும். கூட நாலுகவளம் வயிறு கொள்ளும். உடம்பில் சதை பூசும். வெங்கடகிரி

புடவை எடுத்து சீராய் மடித்து உடுத்திக்கொண்டால் தன்னையே பிறர் 'ஆ.வென்று பார்க்க நடக்கமுடியும். இடுப்பிலும் கையிலும் பாடர் வைத்த ரவிக்கை போட்டுக் கொண்டால் தன் உடம்பும் எடுப்பாக இருக்கும். பெண்களும் ஆண்களும் தன்னை பொறாமையாய் பார்ப்பார்கள். நாம் பதிலுக்கு பார்த்தால் 'ஹலோ' என்று சிரிப்பார்கள்.

''ஆனால், அப்போதும் புடவை விலக உட்கார்ந்திருக்க முடியாது. இழுத்து விட்டுக் கொள்ளத்தான் தோன்றும். எல்லாம் சரியாக இருக்கிறதா என்று அடிக்கடி பார்க்கத் தோன்றும்.

''மனசும், கையும் அப்படி பழகிவிட்டது. இப்படி ஒரு வறுமை பார்த்தபிறகு அலட்சியமாய் இருக்கவே முடியாது. காரில் போகிற அளவுக்கு பணம் வருமா என்று தெரியவில்லை. கார் வேண்டாம். ஸ்கூட்டர் போதும். புருஷன் ஸ்கூட்டர் ஓட்ட பின்சீட்டில் தோள்பிடித்து அமர்ந்து பிள்ளையை இடுக்கிக்கொண்டு போனால் போதும்.''

''நாய் வேண்டாம். அது தேவையற்றது, வந்தவர்களைப் பார்த்து நாய் குரைக்கும். வந்தவர்கள் பயப்படுவார்கள்.''

''ஒரு வீட்டிற்கு வந்தவர்களும் பயப்படக்கூடாது, வரவேற்பவர்களும் அச்சப்படக்கூடாது. வீடு பயமின்றி இருக்கவேண்டும்''

''கடன்காரன் நுழையாத வீடு. கட்டிய கணவன் பயமுறுத்தாத வீடு பிள்ளைகள் அழாத வீடு. பெரியவர்கள் நோய்படாத வீடு வேண்டும்.''

''ஒரு ஹால், ஒரு பெட் ரூம் பிள்ளைகள் படிக்க, படுக்க ஒரு ரூம், ஒரு பெரிய கிச்சன், ஒரு சிறிய பூஜை



அறை, பல்தேய்க்க பின்பக்கவராண்டா, காற்று வாங்க முன் வராண்டா, ஊஞ்சல் கூடை நாற்காலி, சுவரோடு பதித்த மரபீரோ. குளிர்பெட்டி. டி வி, வீடியோ ஸ்டார் சேனல், இரும்பு அலமாரி. கேஸ் ஸ்டவ், கிச்சன் அலமாரி முழுவதும் ஒரே மாதிரியான பிளாஸ்டிக் டப்பா, எவர்சில்வர் சிங்க் பீங்கான், வாஷிங் மெஷின் நிறைய பாத்திரங்கள், தண்ணீர் ஓவர்டேங்க் தண்ணீரை பீச்சியடிக்கும்குழாய், இரட்டைக்கட்டில், நுரைமெத்தை, நாலு தலையணை நீளத்திண்டு, ட்ரஸிங் டேபிள், படுக்கையறையை ஒட்டிய பாத்ரூம், அங்கும் நிலைக் கண்ணாடி, வார்ட்ரோப் முழுவதும் புடவைகள் வொயர்லெஸ் டெலிஃபோன், மிக்ஸி, கிரைண்டர், காப்பர் பாட்டம் இரும்புசட்டி, ஸ்டெயின்லஸ் குக்கர், நாலிறக்கை மின்விசிறி, கூல்லைட். பிரைட் லைட் வசதிகள். பூஜையறையில் பெரிய ஆண்டாள் படம். தினமும் அதற்கு மாலை போடவேண்டும். கீழே சின்ன பிள்ளையார் விக்ரகம். தினமும் அதற்கு உதிரிப்பூ போட வேண்டும்.''

''கூடாரைவெல்லும் சீர்க்கோவிந்தா, உன்றன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம் பெறும் சம்மானம்,
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையேதோடே செவிப்பூவே
பாடகமேயென றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போ மதன்பின்னேபாற் சோறு
மூட நெய்பெய்து முழங்கைவழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம் பாவாய்.''

''ஆண்டாள்கூட இப்படித்தான் ஆசைப்பட்டிருக்கிறாள் தோள்வளையே செவிப்பூவே. என்ற நிறைய நகைகள் வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கிறாள். நிறைய நெய் ஊற்றிய சாப்பாடு கேட்டிருக்கிறாள்.

''நல்ல உணவு நல்ல உடை, நிறைய நகைகள், நல்ல விஷயங்கள்தான். அவசியமானவைகள்தான். தினசரி வாழ்க்கைக்குத் தேவையானவைதான்.

''அனவரதமும் கடவுளையே நினைத்துக் கொண்டிருக்கிறவரின் யோக க்ஷேமத்தை தினசரி வாழ்க்கையை கடவுள் கவனித்துக் கொள்வார்.''

''வேறு ஒரு படக்கடையை தாண்டும்போது ஆண்டாள் நினைப்பு மறுபடியும் வந்தது. பத்துக்கு ஆறு விலை கேட்ட போது இருபது என்று சொன்னான்.''

குறைத்துக் கேட்டபோது பதினெட்டு ரூபாய் என்றான். இன்னும் குறைத்துக் கேட்டபோது தரமுடியாது என்று சொன்னான்.

''படத்தில் ஆண்டாள் ரொம்ப அழகாக இருந்தாள். கொஞ்சம் சினிமா நடிகை ரேவதியின் சாயலில் இருந்தாள். நீண்ட மாலையும், சாய்ந்த கொண்டையுமாய் இருந்தாள். கையில் பச்சைக்கிளி உட்கார்ந்திருந்தது. ஆண்டாளின் சிரிப்பில் ஒரு ரம்மியம் இருந்தது. ஆனால் பதினெட்டு ரூபாய்க்கு வாங்க முடியாது. ஆனால் கடையைவிட்டுப் போகும்போது மறுபடி கடைக்காரர் கைதட்டிக் கூப்பிட்டார். பதினஞ்சு ரூபாய்க்கு தருகிறேன் என்று பேப்பர் சுருட்டிய படத்தை நீட்டினான்.''

''கையில் இருந்த நாற்பத்தேழு ரூபாயில் பதினைந்து ரூபாயை கொடுத்துவிட்டு படத்தை வாங்கி வந்தாள். வீட்டின் உள்ளே நுழையும்போதே சணல் கயிறின் சுருக்க விழ்த்து பேப்பரை பிரித்தாள்.

''அதுவேறு படம். ஆண்டாள்படம்தான். ரேவதியின் முகம் அல்ல. கற்சிலையின் முகம். ஷிஃப்பான் புடவை அல்ல, பட்டுப்புடவை. கையில் உள்ள பச்சைக்கிளி நிஜ கிளி மாதிரி இல்லை. பொம்மை மாதிரி இருந்தது மூல வரை பார்த்து வரைந்த ஓவியம் இது. படத்திற்குக் கீழே



ஏதோ ஓர் ஓவியர் பெயர் போட்டிருந்தது பீடமும் பூஜைக்கான பாத்திரங்களும் வரையப்பட்டு இருந்தன. ஸ்ரீவில்லிப்புத்தூர் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, ஆண்டாள் நாச்சியார் என்று போட்டு இருந்தது.''

''கடைக்காரன் விலைபோகாத படத்தை பதினைந்து ரூபாய்க்கு கொடுத்து விட்டானோ என்று கோபம் வந்தது.''

''என்னடி அது'' அம்மா எதிர்ப்பட்டாள். படத்தை வாங்கி பார்த்தாள்.

''நன்னாயிருக்கேடி. படம் நானே வாங்கணும்னு நெனைச்சேன்.''

''ஏமாத்திட்டான்மா''

''யாரு''

''கடைக்காரன். ரேவதி சாயல்லே போட்டோ மாதிரி ஒரு ஆண்டாள் படம் இருந்தது. அதுக்குதான் விலை கேட்டேன், இதை கொடுத்துட்டான்.''

''அது வாங்கப்படாது. இதான் ஒரிஜனல் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் மூலஸ்தானம். போட்டோ எடுக்காத படம் வரைஞ்சு அங்க எப்படி இருக்குமோ அத அப்படியே கொடுத்து இருக்கான். இது நல்ல படம். கைகால் அலம்பிண்டு விளக்கேத்தி படத்தை வச்சி நமஸ்காரம் பண்ணு. ரெண்டு திரியாய் ஏத்து. ஒத்த திரியா ஏத்தாத. லாரி வந்து இருக்காம். நான் தண்ணிக்கு போய்ட்டு வரேன். ஆண்டாள் வந்ததுல இருந்தாவது உனக்கு விடியட்டும். ஆண்டாள் லக்ஷ்மியில்லையா.''

''எனறைக்கும் ஏரேழு பிறவிக்கும் இவள் நமக்கு வழி காமிக்கட்டும். அவளுக்கு ஒரு புருஷன் கெடச்சா மாதிரி உனக்கும் நாராயணன் ஒருத்தன் கெடைக்கட்டும். போய் நமஸ்காரம் பண்ணு.''

அவள் கால் அலம்பி, படம் வைத்து விளக்கேற்றிய
போது சுடர் தெரிந்தது. படம் சிரித்தது. வாசலுக்கு
வந்து சந்து திரும்பியபோது குமார், அந்த டியூஷன்
சென்டர் குமார் அவள் வீட்டுப் பெரிய தவலையை
இரண்டு கைகளாலும் முன்பக்கம் பற்றியபடியே தபதப
வென வந்து கொண்டிருந்தான். அவளை உரசிக்கொண்டு
தண்ணீர்த் தவலையோடு உள்ளே போனான். கூடத்தில்
வைத்தான். மூச்சு வாங்கினான.

''உங்க அம்மா ஒரு பக்கெட்டும், ஒரு குடமும் உடனே
எடுத்துட்டு வரச்சொன்னா, இந்த தவலைத் தண்ணிய
அடுக்குல கொட்டச் சொன்னா. லாரி வந்திருக்கு.''

அடுத்த நிமிடம் பாத்திரங்களோடு இரண்டு பேரும்
வாசலுக்கு ஓடினார்கள். சென்னையில் தண்ணீர் கூட
காசுமாதிரிதான். அதற்கும் பறக்க வேண்டிருந்தது.
பக்கெட் பக்கெட்டாய் சொம்பு சொம்பாய் சேமித்து
வைக்க வேண்டியிருந்தது.

''வெளியே லாரிக்கு பின்னால் கூட்டம் ஏதுமில்லை.
தவலையும் பக்கெட்டுமாய் மூன்றுபேரும் ஆளுக்கு
இரண்டு நடை எடுத்தார்கள். வீட்டிலுள்ள எல்லா
பாத்திரங்களிலும் ரொப்பினார்கள் பிறகு, கூட்டம்
வந்துவிட்டது. அந்தக் கூட்டத்திற்கு நடுவிலும் புகுந்து
இன்னும் ஒரு தவலை நீர் பிடிக்க தமயந்தி முயற்சி செய்
தாள். கூட்டத்தில் அவளை இடித்துத் தள்ளினார்கள்.''

''நீ தண்ணி புடிச்சாச்சில்ல, இன்னும் ஏன் அலையற'
எவளோ பேய் மாதிரி கத்தினாள்.

' நான் எங்கே புடிச்சேன். தமயந்தி பொய் சொல்ல
முடியாமல் தவித்தாள்.

''ஆத்தாளும் பொண்ணுமா ஆறு குடம் எடுக்கல.
நான்தான் பார்த்துக்கின்னே இருந்தேனே மத்தவங்க
புடிக்கவாணாமா. வழிய வுடு.''



''உன்னை யார் பிடிக்கவாணான்னு சொன்னது.
எனக்கு இன்னும் தண்ணி வேணும்.''

''அந்த லாரிக்காரனே தமயந்தியின் குடத்தைப் பிடுங்
கித் தண்ணீரை பிடித்துக் கொடுத்தான். தமயந்திக்கு
ஆச்சரியமாக இருந்தது. லாரிக்காரன் நல்லவனாக
இருக்கிறானே என்று சட்டைப் பாக்கெட்டில் இருந்து
இரண்டு ரூபாய் குமார் தர, அதற்குத்தான் தண்ணீர்
தரப்பட்டது என்று புரிந்தது

''ஒரு தவலைத் தண்ணிக்கு ரெண்டு ரூபாயா?
வேஸ்ட்.''

''இது ஒரு தவலைக்கு இல்லை. பதிமூணு தவலைக்கு
இது வேஸ்ட் இல்லை. டிப்ஸ். நாளைக்கு வரும்போது
உங்களுக்கு பத்து தவலை தண்ணீர் தருவான். நீங்க
ரெண்டு ரூபா கொடுத்துடுங்க.''

''தேவையில்லாத கெட்டப்பழக்கம்.''

''போன தடவை எவ்வளோ தண்ணீர் கொடுத்
தான்''

''நாலு தவலை'' அம்மா சொன்னாள்.

''இந்த தடவை ஏன் பதிமூணு தவலை கொடுத்தான்.
இத்தன தண்ணீர் தேவையா இருக்கு இல்லையா.''

''நிச்சயமா தேவையாயிருக்கு'' அம்மா மறுபடி
சொன்னாள்.

''தினம் ரெண்டு ரூபா தரமுடியுமா?'' தமயந்தி சிடு
சிடுத்தாள்.

''ரெண்டு நாளைக்கு ஒரு தடவை கொடுங்கோ.
தேவைப்பட்டபோது காசு கொடுத்து வாங்கிக்கங்கோ.''

''ஆனால் எல்லா பாத்திரங்களிலும் தளும்ப தளும்ப
தண்ணீர் இருந்தது! பார்க்க சந்தோஷமாக இருந்தது'

இன்னும் ஒருஉயர அடுக்கு இருந்தா, நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அம்மா அடுப்பு மூட்டி காப்பி போட ஆரம்பித்தாள் தரையில் சிந்திய தண்ணீரை தமயந்தி மண்டிபோட்டு துணியால் துடைத்தாள். அவன் ஃபேண்ட்டும் நனைந்திருந்தது.

''என்ன விஷயம் உட்காருங்கோ'' மடக்கு நாற்காலியை கவனித்து பிரித்துப் போட்டாள். திபுதிபுன்னு குமார் ரெண்டு குடம் தண்ணீர் எடுத்தது சௌகரியமா போச்சு. என்னடா வீட்டுக்கு வந்தவா தண்ணீ எடுக்கறாளேன்னு கொஞ்சம் வருத்தமா இருந்தாலும் இந்த உதவி தேவையாக இருந்தது'' ''ரொம்ப தேங்க்ஸ்'' அம்மா மனமுவந்து சொன்னாள்.

''எதுக்கு மாமி தாங்ஸ். தண்ணிக்கு நாங்களும்தான் கஷ்டப்படறோம்.''

''கஷ்டப்பட்டவாளுக்குத்தான் மத்தவா கஷ்டம் தெரியும் டியூஷன் சென்டர் நன்னா நடக்கறதா.''

''இப்போதைக்கு நன்னா நடக்கறது. நாளைக்கு எப்படியோ'' குமார் அயர்ச்சியுடன் நாற்காலியில் உட்கார்ந்தான்.

''ஏன் என்னாச்சு'' தமயந்தி கேட்டாள்.

''வீடு ஏலத்துக்கு வரப்போறது.''

''ஐயோ...எப்போ.''

''அடுத்த வாரம் புதன்கிழமை.''

''வேற ஒண்ணும் செய்ய முடியாதா?''

''எப்பவோ கைமீறி போயிடுத்து. காலி பண்ணியே ஆகணும். அதுக்குத்தான் வந்தேன். இங்க ஒரு பெரிய போர்ஷன் காலியா இருக்காமே. ரெண்டு பிளாட் ஒரே வாசலா இருக்காமே, அதை வாடகைக்கு கேட்கலாமேன்னு வந்தேன்''



''ஆமாம். அங்க குடியிருந்தவர் தூக்குப்போட்டுன்னு செத்து போயிட்டார். அதுக்கப்புறம் யாரும் அங்க குடித்தனத்துக்கு வரல அவ்வளோ ராசியான இடம் இல்லே அது.''

''அதனாலென்ன, நம்ம ராசி நமக்கே வரும் ஏன் தூக்கு போட்டுண்டார்?''

''கடன் தொல்லை''

''ஏன் கடன்தொல்லைன்னு கேளுங்கோ'' அம்மா இடையே புகுந்தாள்.

''ஏன் கடன் தொல்லை?'' குமார் வெகுளியாய் கேட்டான்.

''சூது, குடி, பொம்மனாட்டி சகவாசம்.

''அதலாம் இல்லாமலே நாம கடன்காரனா இருக்க வேண்டி இருக்கு.''

''ஜப்தின்னா மேற்கொண்டு காசு வருமே''

''வராது, ஆனா, அப்பா வேற இடத்துல விக்கறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டு இருக்கார், கடனை வட்டியோடு அடைச்சி எங்களுக்கும் மேற்கொண்டு காசு வருமபடியா பார்த்துண்டு இருக்கார் அமினா வந்தா வீடு ஜப்தி ஆச்சுன்னு சொன்னா தனக்கு வீடு சலிசா கெடைக்கு மேன்னு கடன்காரன்பார்க்கறான் மெயின் ரோடு வீட்டை வித்தா நல்ல விலைக்கும் போகுமேன்னுப் பார்க்கறான். வீடு காலியாக இருந்தாத்தானே வாங்கறவனுக்கு சலிசா இருக்கும். அதனால சட்டுன்னு ஒரு இடம் வேணும்.

''அப்ப வந்துடுங்கோ'' அம்மா வலியுறுத்தினாள்.

''தூக்கு போட்டுண்ட வீடுன்னா எங்க அம்மா என்ன சொல்வாளோ?''

''வந்து ஒரு கணபதி ஹோமம் பண்ணினா எல்லாம் சரியா போயிடும். அறுனூறு ரூபா போர்ஷன் அது.''

தமயந்தியோடு அவன் அந்த போர்ஷனை போய் பார்த்தான் ஒரு ஹாலில் டியுஷன் சென்டராகவும், மறு ஹாலில் வீட்டு உபயோகத்திற்காகவும் வைத்துக்கொள்ள லாம் என்று தோன்றியது. இரண்டு அறைகள் இருந்தன. ஒன்று கிச்சன் ரூமாக இருந்தது, சிச்சன் அறையை ஒட்டி ஒரு அறை இருந்தது. கிச்சன் அறையை ஒட்டி ஒரு அறை இருந்தது ஒரு அறையை பூஜை ரூமாகவும் வைத்துக் கொள்ளலாம் இன்னொரு அறையை கிச்சனாகவும் வைத்துக் கொள்ளலாம். காப்பி குடித்த பிறகு தமயந்தி அவனை அந்த வீட்டுச் சொந்தக்காரரிடம் அழைத்துப் போனாள்.

''டியூஷன் சென்டரா ரொம்ப நல்லது வாங்கோ போர்டெல்லாம் போடாதீங்கோ வீடுன்னா நாலு பேர் வரபோற இடமா இருக்கணும். ஒத்த ஆளுக்கு விட்டுட்டு நான் ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன்,'' வீட்டுக்காரர் வரவேற்றார்.

ஆறுமாச அட்வான்ஸ் கேட்டு மூன்று மாச அட்வான்ஸ் முடிந்தது. குடிபெயர்வதற்கு முன்னே கணபதி ஹோமம் நடத்த முடிவாயிற்று. கணபதி ஹோமம் நடக்கும் போதே பால்காய்ச்சுவது ஏற்பாடாய் ஆயிற்று.

குமாரின் அப்பாவும் அம்மாவும் தம்பிகளும் வீடு வந்து பார்த்தார்கள். தமயந்தி வீட்டில் சர்க்கரை பொங்கலும் மெதுவடையும் சாப்பிட்டார்கள்.''

''எதுக்கு இவ்வளவு ஏற்பாடு'' குமாரின் அப்பா வியந்தார்.

''முதல் முதல்லே வந்திருக்கேள் பக்கத்துல இருக்க போறேள். தமயந்தி வந்தபோது ஸ்வீட், காரமெல்லாம் கொடுத்தேளாமே''



''குமாரின் அப்பா வியப்பாய் சிரித்தார். தமயந்தி அப்பாவைப் பற்றி விசாரித்தார்.''

''இரும்புக் கடை குமாஸ்தாவா, எந்தக் கடை.''

''அம்மாவுக்கு பெயர் சொல்லத் தெரியவில்லை.''

''பாரத மாதா ஸ்டீல் கார்ப்பரேஷன்'' தமயந்தி பதில் சொன்னாள்.''

''பாரத மாதாவா...'' குமாரின் அப்பா சர்க்கரைப் பொங்கலோடு நிமிர்ந்து உட்கார்ந்தார்

'நான் வேலைக்கு போய்க் கேட்டேன். முதல் கேள்வியே பகவத்கீதை தெரியுமான்னு கேட்டான். தெரியாதுன்னுட்டேன். பிராமணனா பொறந்து கீதை தெரியாம இருக்கலாமான்னான். அடபோடான்னு வந்துட்டேன். நான் தமிழ் ஸ்டூண்ட சேன்ஸ்கிரிட் தெரியாது. பெரிய புராணம் சொல்வேன். அவனுக்குத் தெரியாது.

''எங்களுக்கு நன்னா தெரியுமே.''

''எது? பெரிய புராணமா?''

''இல்லை அந்த குஜராத்தி இரும்புக் கடை முதலாளியை தமயந்தி சொன்னா போதும்உடனே வேலை கொடுத்துடுவான்.''

''சர்க்கரைப் பொங்கல் உங்க பொண்ணு பண்ணினாளா.''

''இல்லை, நான் பண்ணது. அவளும் பண்ணுவாள்'' அம்மா சொன்னாள்.

தமயந்தி மறுநாள் மாலை குமாரின் அப்பாவோடு அந்த குஜராத்தியின் வீட்டிற்கு போனாள் குமாரின் அப்பாவைத் தன் அப்பாவின் நண்பர் என்று அறிமுகப்படுத்தினாள். வேலை தரும்படி கேட்டாள்.''

''உங்க அப்பாவுக்கு பிறகு வேற யாரும் அந்த வேலைய சரியா செய்யலை, நாலஞ்சு பேரு மாறிட்டாங்க. யாரும் எனக்கு சரியா படலே லட்சமா காசு கல்லாவில இருந்தாலும் அஞ்சு பைசா அப்பா அதை தொடமாட்டாரு. உனக்கு ஒண்ணு தெரியுமா...உங்க அப்பா உட்கார்ந்த நாற்காலியில வேற யாரும் உட்கார விடலை. பகவத்கீதை புத்தகம் வச்சிருக்கேன். உங்க அப்பா உத்தமன் ஞானவான்-பிறர் பொருளுக்கு மறந்தும் ஆசைப்படாதவர். திருடர்கள் மிகுந்த இந்த கால கட்டத்தில் உன் தகப்பனைப் போல் உத்தமன் கிடைப்பது மிக அரிது. ரங்கராஜன் கடவுளோடுசேர்ந்து விட்டார். அவரை உள்ளன்போடு நீ நினைக்கும் வரை உனக்கே ஒரு குறையும் வராது'' குஜராத்தி கிழவன் குழறி குழறி பேசினான்.

தமயந்தி பரிந்து சொல்ல குமாரின் அப்பாவிற்கு வேலை கிடைத்துவிட்டது. அதே ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளம். பெரிய புராணம் அவர் சொல்லி இரும்புக்கடை முதலாளிக்குப் பிடித்திருந்தால், கூட ஐந்நூறு ரூபாய் தரப்படும்.

''குமார் வீட்டில் தமயந்தியைவிட தமயந்தி அப்பாவைப் பற்றிய மரியாதை அதிகமாயிற்று. தினமும் அவரைப் பற்றி பேசுவது வாடிக்கையாயிற்று.

''ரோட்ல ஒத்த வெள்ளிக் கொலுசு கெடைச்சுதாம். ரங்கராஜன் எடுத்து சாக்கடையில போட்டுட்டாராம். யார்துன்னு தேடிக் கொடுக்க வேண்டாமான்னு கேட்டாளாம் உடமஸ்தாளுக்கு வேண்டாம்ன்னுதானே அது அறுந்து இருக்கு எதுக்கு தேடணும்னாளாம். கோவில் உண்டியல்ல போட்டுடலாமேன்னாளாம். சாமிக்குத் தேவைப் படலாமேன்னாளாம். உமக்குதான் காசு தேவை சாமிக்கு காசு தேவையில்லைன்னாராம். யார்க்காவது ஏழைக்கு கொடுத்திருக்கலாமேன்னு கேட்டா



ளாம். எவனுக்காவது தேவைப்பட்டிருந்தா அது அவனுக்கு கெடைச்சிருக்கும்னாராம். ஆனா நான் தப்பு பண்ணிட்டேன். சாக்கடைல எடுத்துப் போட்டது தப்பு. கர்வம். அடுத்த தடவை கத்தை கத்தையாய் கரன்சி நோட்டு கிடந்தாலும் தாண்டித்தான் போவேனே தவிர, அதை கண்ணாலகூட பாக்க மாட்டேன்னாராம்.''

'ஞானி...'ஞானி என்று வீடு போற்றிற்று. வீட்டு சாமான்கள் மாற்ற அம்மாவும் பெண்ணும் உதவி செய்தார்கள்.''

''வந்த கையோட அடுப்படில உட்காரணுமா இன்னைக்கு நம்ம ஆத்துல சாப்பிடட்டும்.'' அம்மா சமையல் செய்து போட்டாள். வங்றல் குழம்பும், தயிர் சாதமும் ஜவ்வரிசி வடாகமும், கடலைப்பருப்பு பாயசமும் ஜெங்கடித்தன. வீட்டோடு வீடு ஒட்டியது.

''அவர்கள் வாழ்ந்து கெட்டவர்கள். வசதியாய் இருந்து சேர்ந்தவர்கள். பழைய சாமான்கள் நிறைய இருந்தன ஒரு பித்தளை உயர அடுக்கும், பழைய இரட்டை சோபாவும் உங்க வீட்டிலேயே இருக்கட்டும் என்று கொடுக்கப்பட்டன ரொம்ப பழங்காலத்து டைம்பீஸ் கொடுக்கப்பட்டது. இரண்டு பக்கமும் 'பெல்' உள்ள டைப் அது ஒருபக்க பெல் தொலைந்து போயிருந்தது. மற்றொரு பக்க பெல் கருக்கழியாமல் இருந்தது. அசைப்பில் ஓரக் கொண்டை போட்ட ஆண்டாள் முகம் போல் இருந்தது.

''இந்த வீடு வந்த வேளை சொந்த வீட்டின் ஜப்தி தள்ளிப் போடப்பட்டது. சொந்த வீட்டை காலி செய்ததால் வந்து விலை பேசுபவர்கள் கூட்டம் அதிகமாயிற்று. போட்டியிருந்தது. போட்டி அதிகமாகட்டும் என்று காத்திருந்தார்கள். கடன் வாங்கி பேப்பரில் விளம்பரம் கொடுத்தார்கள்.''

''பதில் சொல்லி மாளமுடியாத அளவுக்குக் கூட்டம். புரோக்கர்கள் முற்றுகை பெரியதொந்தரவாகஇருந்தது.''

''தமயந்தி உங்க பழைய வீட்டுக்காரன் செத்துப் போட்டான்.'' குமார் பதட்டத்துடன் ஓடி வந்தான். குமார் குடிவந்து ஒருமாதம் ஆகியிருந்தது.'' அப்பனுக்கும் புள்ளைக்கும் சண்டை ரெண்டு புள்ளைக்கும் நடுவுலயும் சண்டை சின்ன புள்ளை அப்பனைக் கத்தியால் குத்திட்டான். ஆஸ்பத்திரில அந்த ஆள் ரெண்டு புள்ளையும் அடிச்சாங்கனு வாக்குமூலம் கொடுத்துட்டு செத்து விட்டான். சின்ன புள்ளைய காணம். பெரியபுள்ளைய 'அரஸ்ட்' பண்ணிட்டாங்க தெருவே சிரிச்சுப் போச்சு.'' கூச்சலிட்டுக் கூறினான்.

''ஐயோ பாவம்,'' அம்மா பரிதாபப்பட்டுபேசினாள்.

''நான் கல்யாணமாகி அந்த வீட்ல நுழையறபோது பெரியவனுக்கு நாலு வயசு. சின்னவனை அந்த அம்மா புள்ளையாண்டு இருந்தா. செவசெவன்னு நன்னாயிருப் பான் குழந்தை அவனா அப்பாவ குத்தினான்?''

''நீங்க எதுக்குமாமி பரிதாபப்படறேள் அநியாயமா சம்பாதிச்சவனெல்லாம் அநியாயம்மாதான் போவான். முப்பத்தஞ்சு பர்ஸண்ட் நாப்பத்தி அஞ்சு பர்ஸண்ரு வட்டி வாங்கறவனை அவன் புள்ளை இப்படித்தான் கத்தியால குத்துவான்.''

''தமயந்தி இங்கே வா'' அம்மா எதிரிலேயே அவளை அடுத்த அறைக்கு அழைததுப் போனான். மிக நெருக்க மாக நின்று காதோடு ஒரு விஷயம் சொன்னான்.

''ஒரு விஷயம் கேள்விப்பட்டேன் அப்பனுக்கு வட்டி விடறதுதான் தொழில். அதுதான் வருமானம் அந்த வருமானத்துல தனக்கு பாதி வேணுமுண்ணு சின்ன



புள்ள அப்பன கேட்டிருக்கான். சின்னப்புள்ளை பீரோ உடைச்சி பாதி கடன் பத்திரங்களை எடுத்துன்னு போயிட்டான். இருந்தாதான்னே எடுத்துட்டுப் போவேன்னு மீதி பத்திரங்களை அப்பன் ஒரு வெறுப் புல நெருப்பு வச்சி கொளுத்திட்டான். இதைப் பார்த்து ஆத்திரமாகி சின்னப் புள்ள அப்பனை குத்திட்டான்.'' குமாரின் சூடான மூச்சு தமயந்தியின் கன்னம் தொட்டது.

''நெருப்பு வச்சு பத்திரத்துல உன் பத்திரம் இருந்த துன்னா நீ வட்டிகட்ட வேண்டாம் உன் கடன் பைசல் ஆயிடுத்துன்னு அர்த்தம்.''

''தமயந்தி குமாரின் பேச்சுக்கு விழித்தாள்.

''அடுத்த தடவ வட்டி கேட்கவரும்போது மொத்த காசும் தரேன். பத்திரத்த கொடுன்னு கேளு பத்திரத்தை தரலேன்னா பணம்தராதே.''

''அதெப்படி?'' தமயந்தி இழுத்தாள்,''

''முட்டாளே,'' குமார் சீறினான்.''

''எவ்வளவு கடன் அப்பா வாங்கியிருந்தார்.''

''இருபதினாயிரம்''

''வட்டியாவே எவ்வளவு கொடுத்து இருப்பீங்க.''

''அதுக்கு மேலே கொடுத்து இருப்போம்.''

''அப்புறம் எதுக்கு தரணும்?''

அநியாய வட்டி வாங்கியிருக்கான் அவன்தான் அழிஞ்சு போனான். நீ எதுக்கு இன்னமும் வட்டி தரணும்.''

''அவா நொந்துபோய் இருக்க சமயத்துல நாம தப்பிச்சுக்கறது சரியில்லை, இதை என் அப்பா அப்படி செய்ய மாட்டார்.''

குமார் அவளை ஊடுருவிப் பார்த்தான்.

''வட்டி கேட்க அவங்க வரலேன்னா நான் கொண்டு போய் கொடுப்பேன் குமார் எனக்கு சின்ன வயசுலேருந்து அந்த அம்மாவ தெரியும். அந்த வீட்டுல சாப்பிட்டிருக்கேன். அந்த சின்ன பையன், பெரிய பையனோட கண்ணா மூச்சு விளையாடி இருக்கேன். அவங்க பொண்ணு என் கூட படிச்சது. அவங்க பொண்ணு பழைய யூனிஃபார்ம் எனக்கு கொடுத்து உதவினாங்க• இந்த மாசம் வட்டிய கொண்டுபோய் கொடுத்துட்டு நான் துக்கம் கேட்கணும். சாதாரண சாவோ, கத்திக் குத்து சாவோ. சாவு சாவு தான். துக்கம் துக்கம்தான், அந்த வீட்டுப் பெண்களுக்கு எத்தனை வேதனை. எத்தனை அவமானம். நல்லதுக்கு போகிறோமோ இல்லையோ, துக்கத்துக்குப் போக வேண்டாமா நீங்க கொல்றது சரியில்லை குமார். அப்படி செய்தால் வாழ் நாள் முழுவதும் ஒரு கடன்பட்ட தொல்லை என்னுள் இருக்கும் நான் வட்டி கட்டுவேன், கட்ட எனக்கு கடவுள் வழிகாட்டுவார்'' தமயந்தி தீர்மானமாய் பேசினாள்.

''ஐயம் ஸாரி'' குமார் கைகூப்பினான்.

''அநியாய வட்டியாயிடுத்தே என்று வருத்தப் பட்டேன். நீ சொல்வது புரியறது'' விலகிப்போனான்.

வட்டிகட்ட, துக்கம் கேட்க, அம்மாவும் வருவதாகச் சொன்னாள் காசோடு அந்த வீட்டுப் படியேறினார்கள்.

அப்பா உட்கார்ந்த திண்ணை, நடந்த வராண்டா, துண்டு கட்டி குளிக்கும் முற்றம் அவர்கள் குடித்தனம் செய்த பெரிய ஹால் எல்லாம் தாண்டி உள்ளே போனார்கள். அம்மாவிற்கு அந்த வீட்டைப் பார்த்தவுடனேயே அழுகை வந்தது அப்பாவின் நினைவு பொங்கி பொங்கி வந்தது.



மற்ற குடித்தனக்காரர்கள் எதுவும் பற்றிப் பேச பிடிக்காமல் கதவைச் சாத்திக் கொண்டார்கள். வீட்டுக்காரர் குடியிருக்கும் இடத்தில் துக்கம் சூழ்ந்து இருந்தது.

அம்மாவும் பெண்ணும் சுவரோரமாய் நின்றார்கள். போஸ் மார்ட்டம் முடிந்து தகனம் நடந்து விட்டதாம். வீட்டிற்கே பிரேதம் கொண்டுவரப்படவில்லையாம்.

வீட்டுக்காரர் மனைவி ஐம்பத்தைந்து வயதுக் கிழவி ஒடுங்கிப் போயிருந்தாள். அவர்களைப் பார்த்ததும் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதாள். கைது செய்யப் பட்ட மூத்தவன் பெயிலில் வந்திருந்தான். அங்கே எல்லோரும் அழுதார்கள். அழுது ஓய்ந்ததும், தமயந்தி 'பர்ஸ்'சை திறந்தாள், எழுநூறு ரூபாய் எடுத்து மூத்தப் பிள்ளையிடம் நீட்டினாள். ''இது இந்த மாச வட்டி'' என்றாள்.

அந்தப்பிள்ளை முகத்தில் அடித்துக் கொண்டு அலறினான்.

''இதானே கொன்னுச்சி எங்க அப்பனை. இதனால தானே கெட்டுப்போச்சு எங்க குடும்பம். எந்நேரமும் பணம் பணம்னுதானே அலைஞ்சாரு. அப்படித்தானே எங்களை வளர்த்தாரு. இன்னிக்கி அவரோட பொணங்கூட வீட்டுக்கு வரலையே. தூக்க நாலு பேரு கெடைக்கலியே, கார்ப்பரேஷன் வண்டியில இல்ல கொண்டு போய் போட்டோம். ஒரு மாலைகூட போடாதில்ல எரிச்சோம், எனக்கு உங்க வட்டி வாணாம். எங்க வீட்டுக்கு இந்த காசு வாணாம் எங்க புள்ளைங்க நல்லாயிருக்கணும், நான் நல்லாயிருக்கணும். எங்க ஆத்தா இனியாவது நல்லபடியா இருக்கணும்'' தரையில் புரண்டு அழுதான்.

அந்தக் கிழவி சுவரில் கையூன்றி எழுந்திருந்தாள். பீரோவைத் திறந்தாள். கட்டுக்கட்டாய் பத்திரங்களை எடுத்துப் போட்டாள்.

முன்னூறு பத்திரங்களுக்கு மேலும் தரையில் சிதறின.

''உன் பத்திரம் எதுவோ எடுத்துட்டுப் போ. உங்க கிட்ட வட்டி எத்தனைன்னு சொல்லாத உன் வீடு காசுக்கு அல்லாடினப்போ மனுஷத்தனமே இல்லாம ஏமாத்தி வாங்கின பத்திரம் இது. உன் பத்திரம் எதுன்னு பார்த்து எடுத்துட்டுப் போ.''

''ஐயோ ஏமாத்தி வாங்கறியேன்னு அப்பவே சொன்னேன். அப்படித்தாண்டி வட்டி தொழிலுன்னு சொல்லிச்சு. உன்னையும், அம்மாவையும் அசிங்கமா பேசினதா இங்க வந்து பெருமைப் பட்டுச்சு, அதைவிட அசிங்கமா இப்ப நாங்க போய்டோம். என் பேரன்பேத்தி கல்யாணம் ஆவுமா சம்பந்தம் பண்ண ஆள் வருமா சின்னவன் பொண்டாட்டி இந்த வீட்டுப் படியே மிதிக்க மாட்டேன்னு தாலிய அறுத்து தூக்கிப் போட்டுட்டு போயிட்டா. ஊர் சிரிக்காம இருக்குமா. எனக்கு உன் துட்டுவாணாம் எடுத்துட்டு போயிறு. உன் கடனும் வாணாம். பத்திரத்த பொறுக்கிட்டுப் போ. எங்க சாபம் இத்தோட தீரட்டும்'' கை கூப்பினாள்.

புரண்டு அழுது கொண்டு இருந்த பிள்ளை விலுக்கென்று எழுந்தான். பத்திரங்களை புரட்டி தமயந்தியின் அப்பா கையெழுத்து போட்டிருந்த பத்திரங்களை உருவினான். நெடுகக் கிழித்தான். அவள் வைத்த வட்டிப் பணத்தை அதன் மீது வைத்துத் திருப்பிக் கொடுத்தான். எழுந்து உள்ளே போனான்.

அம்மாவும் பெண்ணும் விடை பெறாமல் வெளியே வந்தார்கள் எதுவும் பேசிக் கொள்ளாமல் தெருவில் இறங்கி நடந்தார்கள்.



சற்றுமுன் கண்டது கனவா, அல்லது நனவா. புரியாமல் போயிற்று.

''இந்த பத்திரத்த குப்பைத் தொட்டியில போட்டுடலாம்மா.''

''வாண்டாண்டி. அதுல உன் அப்பா கையெழுத்து இருக்கு. அவர் ஞாபகமா அது நம்மகிட்ட இருக்கட்டும். அவர் போட்டோ கூட இல்லையே. இதுவாவது நம்ம கிட்ட இருக்கட்டும்.'' அம்மா கிழித்த பத்திரத்தை வாங்கிக் கொண்டாள்.

''இந்த வட்டிக் காசு?''

''அப்பாவோட மூணாவது தெவசம் வருது.சர்க்கரை பொங்கலும், புளியோதரையும் நிறைய நாமே பண்ணி ஏழைகளுக்கு கொடுப்போம். அப்பாவுக்கு அது பிடிக்கும் இந்தக் காச அப்படியே வை.''

வீட்டிற்கு வந்து குளித்து தலை சீவிக்கொள்ள குமாரின் அம்மா தமயந்தியை உடனே மாடிக்கு வரும்படி கூப்பிட்டாள்.

அவர்கள் வீடு விற்பனைக்கு ஏற்பாடாயிற்றாம். கடனெல்லாம் போக லட்சத்து நாற்பதினாயிரம் கையில் தருகிறானாம். கடன் கொடுத்தவனுக்கு காசு கைமாறி விற்பனை செய்வதற்கு பத்திரம் எழுதித்தர சாட்சிக் கையெழுத்து தமயந்தி போட வேண்டுமாம்.

''இந்த லேடி என்ன பண்றாங்க?''

வாங்குகிறவன் கேள்வி கேட்டான்.

''பள்ளிக் கூடத்துல டீச்சர் கவர்ன்மென்ட்சம்பளம்''

''பெயர், விலாசம், உத்தியோகம் எழுதிக் கொண்டார்கள். அப்பா பெயர் கேட்டார்கள். சொன்னவுடன் ''அடடா அவரா... நம்ம கடையில கூட ரெண்டு மாசம்

வேலை செஞ்சாரு'' என்று சொன்னார்கள். அவர்கள் கையெழுத்து போடும்போது அப்பாவை சிலாகித்துப் பேசினார்கள்.''

மேல் மாடியில் புடவை உலர்த்தப் போகும்போது பின்னே காலடி சத்தம் கேட்டது. குமார் நின்றிருந்தான்.

''பத்திரத்த கிழிச்சு தூக்கிப் போட்டுட்டானாமே.''

''ஆமாம்.''

'அநியாய வட்டிதான் அப்பா செத்துப் போறதுக்கு காரணம்னு அழுதானாமே?''

''ஆமாம்.''

''ஐயம் ஸாரி, நான் ஒரு முட்டாள்.''

''என்ன இது திடீர்னு.''

''நான் சொன்னபடி வட்டி கொடுக்காம போயிருந்தா இப்படியொரு விடுதலை கெடைச்சு இருக்காது. நான் தப்பு வழி சொல்லிக் கொடுத்தும், நீ நேர் வழி போன பார் அது பெரிய விஷயம்.''

''அது எங்க அப்பா சொல்லிக் கொடுத்தது. என்னால் மாற முடியாது.''

''என்னை மாத்தேன்.''

''என்னது.''

''என் புத்திய மாத்தேன்.''

''நானா... எதுக்கு.''

''குறுக்கு வழியில பணம் சம்பாதிக்கணும்னு ஆத்திரம் வருது. லாட்டரி சீட்டுல காசு வராதான்னு ஆசை வருது. பேங்க்ல கடன் வாங்கி ஏமாத்திடலாமான்னு தோன்றது.'' குமார் குரலில் ஏக்கம் இருந்தது.



''அனன்ய சிந்தயந்தோமாம்
யே ஜனா பாயு—பாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தானம்
யோக க்ஷேமம் மஹாமியகம்''

தமயந்தி பகவத் கீதை ஸ்லோகம் சொன்னாள்.

''புரியலையே.''

''எவனொருவன் அனவரதமும் என்னை (கடவுளை) நினைத்துக்கொண்டு இருக்கிறானோ அவனது தினசரி க்ஷேமத்தை நான் (கடவுள்) கவனித்துக் கொள்வேன்'' விளக்கம் சொன்னாள்

குமார் அவளை நெருங்கி வந்தான்.

''நான் தினமும் க்ஷேமமா இருக்கணும்னா நீ வேணும். எனக்கு வேணும். கையைப் பிடித்துக்கொண்டான்.

''ச்சு...என்ன இது குமார் உங்க அம்மா பார்த்தாங்கன்னா என்னை என்ன நினைப்பாங்க.''

''அம்மாதான் சொன்னா.'

''என் கையை பிடிக்கச் சொல்லியா ''

''இல்லை. அவள் மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கோ. அந்த வீட்டுல அவதான் ஹெட் ஆப்ஃத பேமலி. தமயந்தி சரின்னு சொன்னா நான் அவ அம்மா கிட்ட பேசறேன். சிம்பிளா கல்யாணத்தை நடத்துவோம். உனக்கு வயசாறதேடான்னா.''

''கையை விடுங்கோ ''

''என்னை பிடிக்கலையா.''

'என்னை பிடிச்சிருக்கா உங்களுக்குனு தெரியலையே.'

''அன்னிக்கி குனிஞ்சு தரை தொடைச்சபோதே உன்னை எனக்கு புடிச்சுடுத்து ரொம்ப அழகா இருந்த நீ கௌதமி மாதிரி இருந்தே பார்க்கறதுக்கு.''

''கஷ்டம்டா சாமி. நான் கச்சல், ஒல்லி.'' தமயந்தி வாய்விட்டு சிரித்தாள். அவளை மீறி ஒரு சந்தோஷம் அந்தச் சிரிப்பில் பொங்கியது.

''கடன் தொல்லை போயிடுத்து. இனிமே நீ குண்டாயிடுவ.''

''நீங்ககூடத்தான் ஒல்லி.''

''நானும் குண்டாயிடுவேன்''

''உங்ககடன் தொல்லையும் போனதாலையா.''

''இல்லை. நீ கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னா நானும் குண்டாயிடுவேன்.''

''குண்டாயிடுங்கோ.''

''கல்யாணம் பண்ணிக்கிறேங்கறயா''

''குண்டோயிடுங்கோன்னுதான் சொல்ல முடியும்.''

''அழுத்தமா பேசறியே. உன்னை வெடுக்குன்னு கிள்ளணும் போல இருக்கு.''

அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளினான். அவள் பேசாது இருந்தாள். கிள்ளின இடத்தை முத்தமிட்டான்.

அவள் பேசாது சுவர் மீது சாய்ந்தாள்.

அவன் அவள் மீது சாய்ந்தான்

அவள் அவனை தாங்கிக் கொண்டாள்.

அவன் அவளை இறுக்கிக் கொண்டான்.



அந்த மேல் மாடியில் அவர்களைத் தவிர வேறு யாருமே இந்த உலகத்தில், இல்லையென்பதைப் போல் தனித்ததொரு தீவில் விடப்பட்டது போல் காதல் வயப்பட்டு கிடந்தார்கள்.

தமயந்தி கண் மூடிக்கிடந்தாள்.

''லட்சத்தி நாற்பதினாயிரத்துல நாற்பதினாயிரம் அப்பாட்ட கொடுத்துர போறேன். ஒரு லட்சம் நான் எடுத்துக்கப் போறேன், ஒன் தேர்ட் அட்வான்ஸ் கட்டி ஒரு ஜெராக்ஸ் மிஷினும் தமிழ் டைப்ரைட்டரும் வாங்கப் போறேன். டியூஷன் நேரம் போக மீதி நேரம் கடுமையா உழைக்கப்போறேன். டூ தேர்ட் பேங்க் கடன் வாங்கி அதுக்கு மாசா மாசம் வட்டியும், அசலும் கட்டப் போறேன். ''தமயந்தி ஜெராக்ஸ்'னு அதுக்கு பேர் வைக்கப் போறேன். நான் வாங்கற கடனுக்கு என் மனைவியா நீ சாட்சிக் கையெழுத்து போடணும். என்ன, ஐடியா ரைட்டா நீ கூட நிற்பியா. இல்லை கடனே வாண்டாம்னு நினைக்கறியா.''

அவள் இடுப்பை இழுத்துக் கொண்டு கொஞ்சினான்.

தமயந்தி அவன் தலையைக் கோதிவிட்டாள். சரி யென்றான்.

திருமணம் என்பது ஒரு தனித்தீவு. ஆனால் அங்கே கடன் பட்டாக வேண்டும். இது அநியாயக் கடன் இல்லை, ஆபத்தான வட்டி இல்லை. இங்கு அன்புதான் கடன், அன்புதான் வட்டி. இந்த வியாபாரம் நடக்கத் தான் வேண்டும். கொடுக்காமல் வாங்காமல் குடித்தனம் இல்லை.

முற்றும்

# நெல்லுக்கு இறைத்த நீர்

# நெல்லுக்கு இறைத்த நீர்

## 1

காமம் என்பது பெரியபழம். பலாப்பழம் மேலெல்லாம் முட்கள் நிறைந்த முரட்டுப்பழம். உயிர் என்பது சிறிய காம்பு, அவ்வளவு பெரிய பலாப்பழத்திற்கு. இது பழத்தை தாங்குமோ தாங்காதோ என்று கவலை தரும் வகையில் ஒரு காம்பு.

பலாப்பழம் பழுத்து ஒருநாள் விழப்போகிறது. அதாவது காமம் தாங்காமல் உயிர் அறுந்து போகப் போகிறது. தலைவி செத்துப் போகப் போகிறாள்.

''சிறுகோட்டுப் பெரும்பழம்.''

''இவ்வளவு கனமான பலாப்பழத்திற்கு இந்த காம்பு போதுமா? போதுமென்றே தோன்றுகிறது. அறுந்து விழாது என்று தோன்றுகிறது. அந்தக் காம்பில் இருந்து தானே பழம் வந்தது. அந்த காம்பிற்கு தெரியாதா பழத்தை எப்படி தாங்குவது என்று பழம் எவ்வளவு பழுத்தாலும் எவ்வளவு பெரிதானாலும் காம்பு அதனை விடாது கவனித்துக் கொள்ளும்.''

''வெளியில் இருந்து பார்க்கிறவர்களுக்குத்தான் பழம் அறுந்து விழுமோ என்ற பயம் வரும் அப்படி பார்க்கிறவர் கவிஞனாக இருந்தால் கலவரம் இன்னும் அதிகமாகும்.''

''பலாப்பழத்தை காமமாகவும், அதைத் தாங்கும் சிறிய காம்பை உயிராகவும் நினைத்துக் கொண்டு அவஸ்தைப்பட நேரிடும். இந்த குறுந்தொகைப் பாட்டில்

ஏதோ ஒரு தவறு இருக்கிறது. பனிரெண்டாம் வகுப்பிற்கும் இந்தப் பாட்டை பாடமாக வைத்திருக்கவேண்டாம். பகலெல்லாம் கணக்கும், விஞ்ஞானமும் படித்து விட்டு இரவு தமிழ் படிக்க அதுவும் தமிழில் இப்படி கவிதை படிக்க பகலில் படித்த பாடமெல்லாம் மறந்து போய் விடும். அதுவும் சந்தானலக்ஷ்மி போல பெண்கள் எல்லாம் இரவில் தமிழ் படித்தால் பகலில் படித்த பல விஷயங்கள் பயனற்று போய்விடும்.

சின்ன பாண்டி கவலையோடு புத்தகத்தை மூடினான் விளக்கை அணைத்து படுத்துக் கொண்டான். இந்நேரம் சந்தானலக்ஷ்மி என்ன செய்வாள் என்று யோசிக்க ஆரம்பித்தான். குறுந்தொகை மனனம் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாள். சத்தம் போட்டு அனுபவித்து படிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாள். தமிழை ப்ளஸ்டூவில் கஷ்டப்பட்டு படிக்க வேண்டுமா என்று நினைத்தான். ஆங்கிலம், தமிழ் இரண்டுக்கும் ப்ளஸ் ஒன்னிலேயே கடுமையான தேர்வுகள் வைத்துவிட்டு, ப்ளஸ்டூவில் மொழி தவிர்த்து மற்ற பாடங்களை முக்கியமாக வைத்து விடலாம். ப்ளஸ்டூவில் மொழிபடிக்க வேண்டிய அவசியமில்லை என்று வைத்துவிடலாம்.

சிறுகோட்டுப் பெரும்பழம் என்ற கவிதையில் இருந்து சந்தானலக்ஷ்மி போன்ற பெண்களை அப்புறப் படுத்தி வைக்கலாம். படிக்க ஏகப்பட்ட. விஷயங்கள் இருக்கின்றன.

பயாலஜி, கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ், கணிதமென்று பல விஷயங்கள் பயமுறுத்துகின்றன, விழிப்புடன் பாடம் கேட்டு உள்ளே விஷயத்தை வாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது புரிந்து படிக்க வேண்டியிருக்கிறது. படித்ததை பலமுறை எழுதிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் பலாப்பழம் போல காமம் என்கிற தமிழ்க் கவிதை சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது.



''காமம் பலாப்பழம் மாதிரியா சின்ன பாண்டியன் ஏன் அப்படிச் சொல்றாங்க?'' சந்தானலக்ஷ்மி சந்தேகத்தில் கேட்டாள்.

தமிழில் அவள் என்னென்ன படிக்க வேண்டும் என்று அட்டவணை அவன் எழுதி கொடுத்த போது பாட சம்பந்தமாய் பேசுவதைப் போல் தேவையில்லாமல் இது பற்றி பேசினான்.

''காமம்கிறது பெரிய பலூன் மாதிரி. நைட்ரஜன் பலூன் போல, மெலிசா ஒரு நூல்ல புடிச்சிட்டு இருக்கலாம். நம்ம தலைக்கு மேல அது பாட்டுக்கு அலைஞ்சுன்னு இருக்கும் நாலாபக்கமும் பொருட்காட்சில சுத்தற வரைக்கும் பலூனை அலையவிட்டு வேடிக்கை பார்க்கலாம். அப்புறம் நூலை விட்டுடலாம், அது எங்கோ கண் காணாம மறைஞ்சு போய்டும்.''

''இவரு ஏன் அதை பலாப்பழம் என்று சொல்கிறார் தெரியலையே'' என்று ஆராய்ந்தாள்.

படிக்க வேண்டியவை ஏகப்பட்டது இருக்கும்போது இம்மாதிரி கேள்விகள் மனசை பலவீனப்படுத்தும். தேவையற்று சிந்தனையை ஓட வைக்கும். எப்படியாவது ப்ளஸ்டுவில், சந்தானலக்ஷ்மி தொண்ணூத்தி ஐந்து சதவீதம் எடுத்துவிட்டால் டாக்டர் படிப்போ இஞ்சினியர் படிப்போ நிச்சயம். இந்த ஜாதிக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கக் கூடும்.

ஐந்து வருடம் கஷ்டப்பட்டு படித்தால், இந்த குப்ப கோணத்திலேயே பிரமாதமான 'டிஸ்பென்சரி' வைத்து விடலாம், எல்லா ஜாதி ஜனங்களுக்கும் கம்பீரமாய் சிகிச்சை சேவை செய்யலாம். இசை வேளாளர் குடும்பத்திலிருந்தும் படித்த பெண்கள் வாழ்க்கையின் மேல் மட்டத்திற்கு வருகிறார்கள் என்று கம்பீரம் கொள்ளலாம்.

சந்தானலக்ஷ்மி கெட்டிக்காரப் பெண். அறுபது, எழுபது வாங்குகிறாள். கொஞ்சம் விரட்டினால் எண்பது வாங்கிவிடுவாள். ஆனால் எண்பது போதாது. தொன்னூறு சதவீதம் வாங்கினால் எவர் தயவுமின்றி டாக்டர் சீட் கிடைக்கும்.

ஆனால் தொண்ணூறு சதவீதம் சந்தானலக்ஷ்மி எடுக்க வேண்டுமென்றால் எந்த நேரமும் படித்துக் கொண்டிருக்க வேண்டும்.

''வேண்டாம்டா பாண்டி. அவ வீட்டு வேலைன்னு எதுவுமே செய்ய வேணாம். சோறு தின்ன தட்டக்கூட எடுத்துப் போட வேணாம், நான் செய்யறேன். தொன்னூறு மார்க் வரலைன்னு வெச்சுக்க செய்யததுக்கும் சேர்த்து செய்ய வச்சுடுவேன். ஆமா,'' அத்தை கூச்சலாய் பேசினாள்.

அத்தை வீடு கும்பகோண மகாமகக் குளத்தின் கீழ் பக்க கரையில் இருந்தது. கம்பி கதவு தாண்டி தெருவும் குளத்துச் சுவரும் அப்பால் கோவில் கோபுரமும் நீலவானமும் பெரிய வர்ணப்படமாய் நெஞ்சில் நிரந்தரமாய் தங்கி பார்க்க பார்க்க பரவசம் கொடுத்தது.

பனிரெண்டு வயதில் அத்தை வீட்டுக்கு மல்லியத்திலிருந்து வந்து வராண்டாவில் நின்றபோது அந்த காட்சிதான் முதலில் ஈர்த்தது.

''உள்ளவாடா'' அத்தை குரல் கொடுத்தாள்.

அவள் குரலுக்கு பதில் கொடுக்காது சின்னபாண்டி கோவிலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன மாப்ளே என்ன பார்க்கறே?'' பின்னால் அத்தை புருஷன் வந்து நின்றுகொண்டார்.



''இந்த வராண்டா நல்லாருக்கு. ஒரு கைபிடிசேர் போட்டு உட்கார்ந்து கிட்டா ஒரு நா முழுக்க கோயில பார்க்கலாம்.''

''காலைல நல்லாருக்கும் மூணுமணிக்கு எதிர் வெய்யில் வந்துரும். ஆனி ஆவணில ஒரு பதினைஞ்சுநா சூரியன் நேர கோபுரத்து கீழா மறையும். அஞ்சு அஞ்சரைக்கு வெய்யில் தாக்க கோபுரம் மட்டும் தகதகன்னு தெரியும். மல்லியத்துல என்ன படிக்கிற?

''ஏழாங்கிளாஸ்.''

''வந்துருங்களேன் கும்பகோணத்துக்கு. எட்டாவதுலேர்ந்து இங்க பார்த்துப்பம்.''

''அப்பா சரிங்கணும்.''

''உமக்கு சந்தோஷமா.''

''இங்கேர்ந்து கோபுரம் ரொம்ப நல்லாயிருக்கு.''

''டேய் பேச்சுல பிடி கொடுங்கடா. நேர்பதிலா பேச கத்துக்குங்க. ரொம்ப கெட்டிக்காரத்தனமா பேசறதா நினைச்சு கயவாளித்தனமா பேசவேண்டாம். தன்னை எதிராளி அவமானப்படுத்திடுவானோன்னு எப்பவும் குறுக்கலா பேசுவானேன். கும்மோணத்து வர இஷ்டம்னு சொல்லுமேன்.''

''எனக்கு பன்னெண்டு வயசு.''

''அதனாலென்ன?''

''என்னைய வரிங்களா, போறிங்களான்னு பேசினா நாங்க எப்படி பதில் பேசறது. நீங்க கிண்டலடிக்கறாப்பல பேசறதாலே நாங்க குறுக்கலாதான் பேச வேண்டியிருக்கு.''

''நான் எல்லாருக்கும் மரியாதை கொடுத்து பேசணுமேன்னு பேசறேன்.''

''எல்லாரும் பேசணும். ;நீங்க மட்டும் பேசினா அது கிண்டலடிச்ச மாதிரி தான் ஆவும்.''

''அப்ப என்னையும் களவாணி கும்பலோடு சேர்ந்துகிட்டு கண்டாராளி பசங்களான்னு -பேசச் சொல்றே... இல்லையா?''

சின்னபாண்டி மௌனமாய் இருந்தான். அத்தை புருஷன் பீடி பற்ற வைத்துக் கொண்டார்.

''நல்லவனா ஒருத்தன் கூட இருக்கப்படாதுங்கிறீங்க?'' அத்தை புருஷன் செருமலோடு பேசினார்.

''மனசுல இருந்தாப் போதும்.''

''அதெப்படி மனசுல மட்டும்...?''

''நான் இப்பம்தான் வந்தேன் மல்லியத்துலேர்ந்து வீட்டுக்குள்ளாற இன்னும் நுழையல. ஆனா அத்தை வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்து வான்னு தலையாட்டி புன்சிரிப்பா பிரியமா ஒரு சிரிப்பு சிரிச்சுட்டு போய்டாங்க. அத்தை ஒன்னும் பேசலை. எனக்கு பிரியம் புரிஞ்சு போச்சு.''

''அடேங்கப்பா. என் பொண்டாட்டி வெளி ஆம்பளைகளோட அப்படி ரகஸ்யமாவெல்லாம் பேசறாளா. இருக்கட்டும். இருக்கட்டும் பொம்பளைங்க அப்படித்தான் ஜாடையா பேசும். ஆனா பனிரெண்டு வயதுல அது உமக்கு புரிஞ்சுது பாரும். அங்கதான் பிரச்சனை ஆரம்பம்.''

''ஏங்க?''

''ரொம்ப சீக்கிரம் முத்திட்டேருன்னு அர்த்தம்.''

''தப்புங்களா?''

''தப்பு இல்லீங்க. நல்லது கெட்டதுன்னு ஒரு சூட்சுமம் சின்ன வயசுலயே புரிஞ்சு போச்சுன்னு வெச்சுக்



குங்க. மனசு கனத்து போயிரும். ஐயோ உலகம் இத்தினி கெட்டதா. இத்தினி சுகமான்னு ஒரு அதிசயம் தட்டி ஹோன்னு கூச்சல் போட்டு மத்த பசங்கமாதிரி ஓடற மாட்டுக்கு பின்னாடி துரத்த முடியாத போகும்.''

''முடியலைங்க அத்தான்.''

''மாடு துரத்தறதா?''

''ஹோன்னு கூச்சல் போட்டு ஓடறது.''

''சந்தோஷம். மல்லியத்துல ஏன் உட்கார்ந்துகிட்டு. பேசாத கும்பகோணம் வந்துருங்க. எனக்கு ஒரே பொண்ணு. இது கோயில் வீடு. கும்மோணத்துல கிடைக்காதது இல்லை. நல்ல பள்ளிக்கூடம் நாலைஞ்சு இருக்கு, படிங்க ஐயா. இங்க வந்து படிங்க''

அவன் உறவுகள் பெரிதாய் சண்டை போட்டு பார்த்ததேயில்லை. சின்னவிஷயத்திற்கெல்லாம் வெட்டுப் பழி குத்துப் பழியாய் பல குடும்பங்கள் அலைந்து கொண்டிருக்க நெருங்கிய உறவுகளோ, தொலைவு தொடர்புகளே பார்த்தால் இதமாய் பேசாமல் போன தில்லை.

கும்பகோணம் தஞ்சாவூர் சுற்றி உள்ள பல கோவில்களில் அவன் உறவுகள் வாத்தியக்காரர்களாய் இருந்தார்கள் பெரிய செட் எங்கேனும் வந்து நாலு மணி நேரம் கச்சேரி செய்ய பஸ் பிடித்து தொலைவிலிருந்து கேட்க வேண்டுமென்பதற்காகவே வந்தார்கள் கச்சேரி முடிந்தவுடன் அப்படியே கலைந்துவிட்டு போவதில்லை தலையில் வைத்து ஆடுவதில்லை. ஒரு வரிசையாக நகர்ந்து வாசித்தவருக்கு எதிரே கைகூப்பி வந்திருந்தோம். கச்சேரிக்கு என்பதுபோல் சொல்லிட்டு போய் விடுவார்கள். நாதஸ்வரம் வாசித்த பிரபல்யமானவரும் எங்க மாலை, எங்க மலர் கிரீடம் என்று கேட்பதில்லை.

''வுட்டுறாதீங்கய்யா. பசங்களுக்கு இதுபத்தி சொல்லிப் போடுங்க. பத்து வயசுல எடுத்தாதான் நல்லது கை கட்டைவிரல் வாத்தியம் தாங்கி தாங்கி வலி வாகணும். இப்பவே பசங்களை பழக விடுங்கய்யா.''

''பழகவுட்டு...? அவன் பள்ளிக்கூடம் போய் படிப்பானா இல்லை இந்த வாத்தியம் வச்சுட்டு சுருதி சேப்பானா. சீவாளி ஊறி பதம் ஆகவே ஒரு மணி நேரம் பிடிக்கும் புள்ளை பாதி பதத்தில எழுந்து பள்ளிக்கூடம் போவும். வந்து மறுபடி மாத்தி மாத்தி சீவாளி ஊதத் தான் சரியா இருக்குமே. சரளி வரிசை வாசிக்கக்கூட நேரம் இருக்காது. படிப்பா வாத்தியமான்னு பத்து வயசுல தீர்மானம் செய்துடணும். இரண்டும் முடியாது.

சிலபேர் இருக்காங்க. வாத்தியம் கத்துக்கிட்டே பி.ஏ. படிச்சுருக்காங்க.''

''என்னத்துக்குன்றேன். ஒன்னு படி. இல்லே புடி படிப்புலையும் இல்லாத புடிப்புலையும் நாட்டம் வராத எதுக்கு ராட்சச வாத்தியம் இது இரண்டு நாள் தாடை நோவுதேன்னு வுட்டா மூணா நாள் முழுசா காத்து உள்ள ஊத முடியாது. காலையிலையும் மாலையிலையும் போராடிக்கிட்டே இருக்கணும். இத்தினி போராடி முத ஆளா நின்னா ஏதோ காசு பார்க்கலாம். இல்லைன்னா எதனா பிள்ளையார் கோயில்ல வாசிச்சுட்டு, ஏண்டா வாசிக்க வந்தோம்னு நொந்துகிட்டு இருக்கணும்.''

நல்ல கச்சேரி கேட்டுவிட்டு கூட்டமாய் பஸ் ஸ்டாண்டில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பாவும் மல்லியத்திலிருந்து வந்திருந்தார். சின்ன பாண்டியயோடு அத்தை வீட்டில் சாப்பிட்டுவிட்டு அவன் கையை பிடித்த படியே பஸ் ஸ்டாண்ட் வந்தார். எவ்வளவுபெரிய உறவுக் கூட்டம் தன்னுடையது என்று பஸ் ஸ்டாண்டில் புரிந்தது. சந்தோஷமாய் இருந்தது.



''புள்ளையா...உன்னுதா என்கிட்ட அனுப்பிடு நான் வித்தை கத்துத்தரேன்.' நாலைந்துபேர் அவன் தலையை வருடி அணைத்துக் கொண்டார்கள்.

''படிக்கறாங்க படிக்கட்டும்னு கும்பகோணத்தில் விட்டிருக்கேன். படிச்சாலும் சரி. வாத்தியம் புடிச்சாலும் சரி தலைசுழி நல்லா இருக்கணும். சுழி நல்லாருந்தா வெளிய வந்துரலாம். சீதாராமன் என்கிட்ட கத்துக் கிட்டவன்தான். உதறாத வாசிக்கத் தெரியாது. எது வாசிச்சாலும் எங்கனையோ அடில கீன்னுட்டு ஒரு பிசிறு வந்துகிட்டே இருக்கும். காது திருகி திட்டுவேன். மறுபடி வாசிப்பான். இப்ப எங்கனையோ சினிமா ஹீரோக்கு வாசிச்சானாம்.''

''நெசம்மாவே பெரியாளாய்ட்டான். அவனைவிட சுத்தமா வாசிக்கத் தெரிஞ்சவன் கோயில்ல கிடக்கான். எதுக்கு சொல்றேன். வித்தை மட்டும் போறாது, தலை சுழி நல்லா இருக்கணும். இவன் முகம் சந்திரபிரகாசமா இருக்கு. நல்லா வருவான்.''

யாரோ தடவி தலை வருடி அணைத்து உச்சி முகர வெற்றிலை களிப்பாக்கு, புகையிலை வாசனை சுகமாய் அடித்தது. எந்தக் கச்சேரிக்குப் போனாலும் இந்த வாசனை உள்ளே நுழையும் ஆளை கப்பென்று பிடித்துக் கொள்ளும். கொஞ்சம் பசியாய் இருக்கிறபோது இந்த வாசனை அதிகம் சங்கடப்படுத்தும். மேலும் பசியதிகமாகச் செய்யும். எங்கியாவது வெற்றிலைக்காம்பு கிடைக்காதா என்று தேட வைக்கும். நாலு காம்பு நாக்கில் நசுக்கப்பட்டு புரள கொஞ்சம் பசி அடங்கும்.

பத்தாவது பரிட்சைக்குப் படிக்கும்போது வீட்டில் இருந்த வெற்றிலையை சீவலோடு சுருட்டிப் போட்டுக் கொள்ள, அத்தை விடாது திட்டித் தீர்த்தாள்.

''முதல்ல இதைக் கத்துக்குங்க. அப்புறம் குடி, பீடி எல்லாத்துக்கும் போலாம். எங்களுக்கும் நல்ல பேரு எல்லாத்துக்கும் சந்தோஷமாகவும் இருக்கும்.''

''ஒண்ணும் இல்லிங்க அத்தை. வாய் நமநமன்னுது. அதனால கொஞ்சம் போலும் சீவல் போட்டேன்'' சின்ன பாண்டி வெட்கத்துடன் பதில் சொன்னான்.

''வாய்தான். வாய்தான் முதல்ல நமநமன்னும் யார் தின்னாலும் நாமும் திங்கணும்னு ஆசைவரும். வாசனை வாசனையா கொத்து புகையிலை, அடக்கி எவனாவது எச்சல் உறுஞ்சும்போது நமக்கும் உறியத் தோணும். சீவல் போட்டு தடிமனான வாயில புகையில சுருட்டி வச்சுக்க ஆசை வரும். ரெண்டு தடவை புகையிலை அதுக்கி காரம் பழகிட்டா நமக்கும் அது ருசி கண்டு போகும். புகையிலை மட்டும் இல்லை சின்னபாண்டி மசால் தோசை, மைசூர் போண்டா, தேங்காய் சட்னி சிக்கரி காபின்னு நாக்கு நமக்கு கட்டுப்படாம அலையும். ருசின்றது வாயிலதான் ஆரம்பிக்கும், அப்புறம் பொம்பளை ருசி, சாராய ருசி. புகை ருசின்னு போகும். இப்பமே, இந்த பதினாலு வயசிலேயே ருசியோட உறவு அறுத்துட்டோம்னா. பின்னால நன்னா இருக்கலாம். எதுக்கும் அலையாத ஆம்பளையா இருக்கலாம்.''

சின்னபாண்டி திகைத்துப் போனான். சில சமயம் நல்ல வார்த்தைகள் சுருக்கென்று தைத்துவிடும். எளிதில் மறக்காது. எவர் சொன்னாலும் மாறாது. அத்தையின் வார்த்தைகள் பல நேரங்களில் அவனை அதிகம் பாதித்தன, யோசிக்க வைத்தன.

இப்படி வக்கணையாய் வார்த்தை சொல்வதில் ஒரு ருசி வந்துவிட்டது. அத்தை சொன்ன உபதேசங்களை தன் அபிப்பிராயமாக ஒருமுறை ஹோட்டல் டேபிளில் சொன்னான்.



பள்ளிக்கூடத்தில் படிக்கிற பணக்காரன் நாலு நண்பர்களுக்கு டிபன் வாங்கிக் கொடுத்தவன் என்ன சாப்பிடுறாய் என்று இவனிடம் கேட்டான். 'எதுவாயினும் சாப்பிடுகிறேன்' என்று சின்னபாண்டி பதில் சொன்னான்.

''உன்னுடைய ருசி எது?'' என்று அவன் வற்புறுத்த தனக்கு எந்த ருசியும் இல்லை என்றும் ருசியில்லாமல் இருப்பதே நல்லது என்றும் சொன்னான்.

சின்னபாண்டி பேச்சை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த அடுத்த டேபிள் வயசாளி பிலுபிலுவென்று பிய்த்துக்கொண்டார். ''ருசி அறுப்பதா... நீயா, பின் எதற்காக நீ உயிரோடு இருக்கிறாய்?'' பையன்கள் அவர் பேச்சை ஆவலோடு கேட்டார்கள்.

''இங்க அடைக்கு பீர்க்கங்காய் கூட்டுன்னு கேள்விப்பட்டு ஸ்டேஷன்ல இருந்து இங்க வந்திருக்கேன்.''

''பசிக்கு பச்சை பீர்க்கங்காயை சாப்பிட முடியுமா. கூட்டு பண்ணி மொர மொரன்னு அடை வார்த்துப் போடுவான், இதை சாப்பிடுறதவிட சுகம் உண்டா? வேற எதுக்கு பிறந்திருக்கோம். ருசி முக்கியம்டா. ருசிச்சு சாப்பிடறதுக்கோ அது ஒரு கலை. அது ஒரு சுகம் ரசனை முக்கிய முக்கியம். ஒரு பருப்பு சரியா வறுக்கலைன்னாலும் எனக்கு தெரிஞ்சுடும். வாழ்க்கையில ஒவ்வொரு இடத்துலேயும் ருசி வேணும்'' என்று அடித்துச் சொன்னார்.

அத்தையிடம் அதை சொல்ல, அத்தை பாம்பு மாதிரி சீறினாள்.

''எவனோ நின்னு கெட்டவன் சொன்னதை எங்கிட்ட சொல்லாத சின்னபாண்டி. நெஞ்சுல காரம் ஏற சாப்பிடறவன் பாவி, பீர்க்கங்காய கூட்டு வயிற்றை புரட்டிச் தின்னா, அந்த வெட்கம் கெட்ட வாய் நொய் கஞ்சி

குடிக்கும். தினிக்கு அஞ்சு கிலோமீட்டர் அலையறவன் சுவர பிடிச்சுன்னு நிக்கும்படி ஆவும். ஆளில்லாத காட்டுல விட்டா அந்த பன்னாடை பச்சை பீர்க்கனையும் சாப் பிடும்''

சின்னபாண்டி நான் சமைச்சு சாப்பிடறத தப்புன்னு சொல்லல. சமையல் பத்தியே நினைச்சுண்டு இருக்கா தேன்னு சொல்றேன். பொம்பளையோட குடித்தனம் பண்ணக்கூடாதுன்னு சொல்லலை. எப்பவுமே பொம் பளைய நெனைச்சுட்டு இருக்காதேன்னு சொல்றேன்.

''உடுத்தறது தப்பு இல்லை பாண்டி. உடுத்திக்கிட்டு அலையறதே வாழ்க்கை ஆயிட கூடாது எல்லாத்துலேர்ந் தும் ஒதுங்கியிரு பாண்டி.ஒட்டாத இரு'' பதினாலு வயது பையனுக்கு இந்த பேச்சு மிக அதிகம்.

அத்தை அவனுக்குதான் உபதேசம் செய்தாளே ஒழிய, அவள் பெண்ணுக்கு எதுவும் கற்றுக் கொடுக்கவில்லை.

சந்தானலக்ஷ்மி ஒரு ரூபாய்க்கு, உள்ளிப்பூண்டு வாங்கி வந்து தோல் உரித்து லேசாய் எண்ணெய் இட்டு வதக்கி, மிளகாய் தனியாய் வறுத்து அம்மியில் வைத்து அரைத்து விழுதாக்கி, அந்த விழுதை பூண்டின்மீது கொட்டி பாட் டிலில் அடைத்து நல்லெண்ணெய் கலந்து தானே ஊறு காய் போட்டுக் கொள்வாள். பாட்டிலை பள்ளிக் கூடத் திற்கு எடுத்துப் போவாள்.

ஒரு வகுப்புக்கும் இன்னொரு வகுப்புக்கும் இடையே உள்ள நேரத்தில் கடைசி பெஞ்ச் பெண்கள் நாலு பேரும் வகுப்பு மணக்க பூண்டு ஊறுகாயை நக்கித் தின்பார்கள்.

பூண்டு பிடிக்காத எந்த டீச்சரோ சந்தானலக்ஷ்மியின் தலையில் கொட்டி பாட்டிலை பிடுங்கிக் கொண்டாள். அத்தை ஒரு ரூபாய் கொடுத்து வேறு ஊறுகாய் போட்டுக் கொள்ளச் சொன்னாள்.



''என்ன ஊறுகாய்ய சாப்பிடாதன்னு சொன்ன. ருசிச்சுத் திங்காதன்னு சொன்ன. உன் பொண்ணுக்கு மட்டும் காசு கொடுத்து ஊறுகாய் வாங்கி போட்டுக் கொள்ளச் சொன்னியே'' அதிசயமாய் கேட்ட சின்ன பாண்டியனை அத்தை தழுவிக் கொண்டாள்.

''பொட்டப்புள்ளை எத்தினி நாள் தின்னும். புருஷன் வீட்டுக்கு போற வரைக்கும் தானே. இப்ப திங்கறது தானே சாப்பாடு. இப்ப தின்னு தின்னு கொழுப்பு ஏறினாத்தானே பின்னால அதை கரைக்கிற வசதி. நீயும், சந்தானலக்ஷ்மியும் ஒண்ணா? இந்த வயசுக்கு சந்தான லக்ஷ்மி திமுதிமுன்னு இருக்கணும். நீ ஈர்க்குச்சி மாதிரி இருக்கணும். அதான் அழகு.''

''இப்பமே தின்னு உனக்கு தொப்பைவிழுந்துதுன்னா முப்பது வயசுல பாலக்கரை பன்னிமாதிரி ஆயிடுவே. நீயும் நல்லா சாப்பிடு. நிறைய சாப்பிடு. சாப்பிடற நேரத்துல மட்டும் சாப்பிடு. சும்மா சாப்பிடறவன் ரோகி இது வித்தை கத்துக்கற நேரம். எதுனா கத்துக்கிட்டேயிரு மத்தளத்துக்கு வார் புடி, சீவாளி மடிச்சு கத்துக்க. லீவு தானா இருந்தா யார் கச்சேரிக்குன்னா போய் ஒத்து ஊது. சும்மா இருக்காதே. எதுனா செய். இந்த தொழில் பிடிக் கலையா, வேற எதனா தொழில் கத்துக்க. கும்பகோணம் முழுக்க பித்தளை பாத்திரம் அடிக்கலாம். வெங்கலம் வார்க்கலாம். எதனா கத்துக்க.''

தெருமுனையில நின்னு வெறும் கும்பலா பேசினே எல்லாம் பாழாயிடும். பசியில இருந்து ருசிக்கு புத்தி திரும்பிடும்.

''எவனாவது ஹோட்டல் தோசை பத்தியோ, சினிமாக்காரி உடம்பு பத்தியோ பேசுவான். ஜொள்ளு வழிய ஆரம்பிச்சுடும் திங்கறதுக்கு முன்னாடியே நல்ல பண்டம்னு தோணிடும். பாக்கறதுக்கு முன்னாடியே நல்ல

பொம்பளைன்னு பட்டுடும், அப்பறம் உனக்கு ஒரு எடை கைக் கூடாது.''

பத்தாவது படிக்கும் போது சின்னபாண்டி யோசிக்க ஆரம்பித்தான். அத்தை சொல்லிக் கொடுத்தாள். யார் பேசுவதையும் சின்னபாண்டி உற்று கவனிப்பதை கற்றுக் கொண்டான்.

இரண்டு மாத லீவில் அத்தை சொன்னபடி ஒற்று நாயனம் எடுத்து திருவாவடுதுறை மடம் கச்சேரிக்குப் போனான்.

நாலு மணிநேர கச்சேரி முடிந்தபிறகு மடத்தில் சாதம் வாங்கி அங்கேயே சாப்பிட்டான். இரவு ராமாயணம் உபந்யாசம் என்று போட்டிருந்தது. நாதஸ்வர பார்ட்டி கும்பகோணத்திற்கு பஸ் ஏற அவன் மட்டும் சால்வையை தோளில் சுருட்டிப் போட்டுக் கொண்டு உபந்யாசம் கேட்க உட்கார்ந்தான். வட மொழியில் நீண்ட ஸ்லோகங்கள் சொல்லப்பட்டன. ஒரு வார்த்தை கூட விளங்காமல் போயிற்று கும்பகோணத்திற்கு பஸ் ஏறி போயிருக்கலாமோ என்று யோசித்த போது தமிழில் கதை சொல்ல ஆரம்பித்தார்கள்.

ராமாயணம் கதையில்லையப்பா. அது நீதிநெறி விளக்கம்.

அப்பா காட்டுக்கு போன்னு சொல்லிட்டார். அப்பா வின் வார்த்தையை மீறக்கூடாது அது தேவ நீதிநெறி என்று காட்டுக்கு வந்த ராமரை பலபேர் பலவிதமாய் கேள்விக் கேட்டு மடக்கினா.

இதுதான் சத்தியம்னு ஒரு மனுஷன் ஒரு வழியில போனா உலகம் சும்மா இருக்காது. அது எப்படி சத்தியம்னு கேள்வி கேட்கும்.

யாரோ சொன்னானு சத்தியத்தை கடைபிடிக்கிறவர், இல்லை ராமர். சத்தியத்தின் வேர் எது அப்பிடின்னு தெரிஞ்சுண்டு கடை பிடிக்கிறவர்.



ராமரைப் பார்த்து பரதன் கேட்கிறான். ''அண்ணா உன்னை காட்டுக்கு போன்னு அப்பா சொன்னபோது நான் அயோத்தியில் இல்லை. என்னை நாடாளணும்னு அப்பா சொல்லவில்லை. சொல்ல உயிரோடு இல்லை. நான் வந்தபோது நீங்க ஊரில் இல்லை. அப்பா செத்துப் போயிட்டார். யார் சொன்னதை வைத்து நான் ராஜ்ய பாரம் ஏற்க முடியும். எனக்கு ராஜ்ய பாரம் வேண்டாம். நீங்க அயோத்திக்கு வாங்கோ அப்படிங்கறான்.''

''அப்பாவுக்கு அடுத்தபடியா யாரு யாரு பெரிய உறவுங்கிறார் ராமன் நீங்கதான்ங்கிறான் பரதன். என்கிட்ட அப்பா சொன்னதை உனக்கு சொல்றேன். என் பேச்சுக்கு மறு பேச்சா? அயோத்திக்கு போ என்று சொன்னார் ராமர்.''

''அப்படியா. அப்பா எனக்கு கொடுத்த ராஜ்யத்தை நான் உங்களுக்குத் தரேன் நீங்களே அயோத்திக்கு மன்னனா இருக்கணும்னு கேட்கிறான் பரதன்.

''அப்பாவை அவமானப்படுத்தாதே பரதா. உன் மூலமா எனக்கு அரசாட்சி வரணும்னு அப்பாவோட ஆசையில்லை பதினாலு வருஷம் நான் காட்டுக்குப் போக வேண்டும் என்பதுதான் அப்பாவோட ஆசை. அவர் கட்டளை முக்கியமா, உன் ஆசை முக்கியமா? பதினாலு வருஷம் நீ ராஜ்யம் ஆளணும்ங்கிறது அப்பாவோட ஆசை, தானம் கொடுக்கறதுக்கு உனக்கு உரிமை இல்லை நீ போ அயோத்திக்கு என்கிறார் ராமர்.''

''யாரோ செய்த சூழ்ச்சியால் எங்க அப்பா கெட்ட புத்தியோட செய்த கட்டளைக்கு நான் மதிப்பு தரணுமான்னு கோபப்படறான் பரதன்.''

''அது யாரோ இல்லை பரதா. உன் தாய் கைகேயி கேட்ட வரம், உனது தாய் எனது தாயும் வரம்தரேன்னு சொன்னபிறகு அதை, கொடுக்கமாட்டேன் என்று சொல்வது அசிங்கம். தசரதர் மறுக்காத வரத்தை நாம் மறுக்கலாமா? அப்பா வரம் கொடுத்தார். புள்ளை

அதையில்லேன்னு சொல்லிட்டான்னு பிறர் பேச
வைப்பது அழகா. அப்பாவை உயர்த்தி அம்மாவையேன்
கேவலப்படுத்துகிறாய். அவள் ஆசையை பூர்த்தி செய்ய
மாட்டேன் என்பது அழகா ஒரு பிள்ளைக்கு அப்பா
வேற அம்மா வேறயா? அம்மாவின் ஆசையை நிறை
வேற்று. ராமர் ரொம்ப நிதானமா சொன்னார்.''

''பரதனுக்கு கோபம் வந்தது. என் அம்மாவின்
ஆசையை நிறைவேத்துன்னு உபதேசம் பண்றேளே.
உங்க அம்மா கோசலையோட ஆசை என்னன்னு நீங்க
கேட்டேளா. எனக்கொரு நியாயம் உங்களுக்கொரு
நியாயமா.''

ராமர் சிரிச்சாராம். கோசலையோட அனுமதியோட
நான் காட்டுக்கு வந்திருக்கேன். கோசலைக்கு தன்
கணவரின் ஆசையே ஆசை. உன் வாதம் சரியில்லை
என்றார்.

பரதன் பலவீனமாவதைப் பார்த்து ஜபாலிங்கிற
பெரியவருக்கு வேகம் வந்தது.

ராமா அப்பா யாரு அம்மா யாரு நீ உலகத்துல
பிறக்க தசரதன் ஒரு காரணம். தசரதன் இல்லையென்
கிறபோது அவன் கட்டளையும் இல்லை. காட்டுக்கு
போறது உசத்தின்னு நினைச்சு, தியானம் பண்றது பெரி
சுன்னு நினைச்சு பிடிவாதம் பிடிக்கிற சம்பாதிக்க முடி
யாதவனுக்குத்தான் காடு, தவம், பூஜை, புனஸ்காரம்.
ராஜ்யலட்சுமி கையில் இருக்கிற உனக்கு இது தேவை
யில்லை, காடு துக்கம். நகரம் சொர்க்கம். துக்கத்தை
மட்டுமே அனுபவிப்பேன் என்கிறது வக்கிரபுத்தி. செல்
வத்தை வேண்டாம்னு சொல்றது பிறர் பாராட்ட
வேண்டும் என்ற கர்வத்தால் வந்த யோசனை அனுப
விக்க கிடைக்கறபோது அனுபவி. அனுபவிக்க கிடைக்
காதபோது சண்டை போடு. நல்ல சுகம் வேண்டுமென்று
போர் செய். இதுவே வாழ்க்கைன்னார்.



ஜபாலி பேச்சை கேட்டது ராமருக்கு கோபம் வந்த
தாம். ஆனாலும் நிதானமா சொன்னாராம்.

எது அமைதியுடையதோ அதுவே செல்வம். எதை
அனுபவிக்கும்போது குற்றமற்ற ஒரு மனநிலையில் இருக்
கிறோமோ அதுவே உயர்வு அப்பாவினுடைய சொல்லை
மீறி வனம் போக பயந்து நான் அரசபதவியேற்றால்
அதை அனுபவிக்கும் குற்றமற்ற மனநிலை எனக்கு
வருமா? அப்போது காட்டிலே இருக்கும் எல்லா முனிவர்
களும் காசு சேர்க்க தெரியாதவர்களா. எவ்வளோ மோச
மான வாதம் உம்முடையது. தசரதன் மூலமாக பிறந்தது
மட்டுமே என்னை அவருக்கு பிள்ளையாக்கிற்றா?

தசரதன் என்னை சீராட்டியதும், பாராட்டியதும்
என்னை படிக்க வைத்ததையும் நான் மறந்துவிட
வேண்டுமா? தசரதன் என்னிடம் காட்டிய அன்புக்கு
நான் என்ன கைமாறு செய்தேன் அவர் கட்டளையை
மீறாததே அவருக்கு செய்யும் கைமாறு அல்லவா. பிறப்பு
மட்டும் தான் அப்பனுக்கும், பிள்ளைக்கும் தொடர்பு
என்றால் மனிதர்கள் வித்தைகளை ஏன் கற்றுக்கொள்ள
வேண்டும். அப்பாவே என் முதல் குரு அவரை நான் மீற
மாட்டேன்.

அப்போ ராமரை வசிஷ்டர் வேறவிதமாக மடக்கி
னார் நான் உனக்கும் குரு. உங்கப்பாவுக்கும் குரு. நான்
சொல்வதைக் கேள் ராமா அயோத்திக்கு வா.

ராமர் சிரிச்சாராம்.

அப்பாவுடைய கட்டளையை மீறுன்னு குரு சொல்
லிட்டா, குருவின் கட்டளையை மீறுன்னு வேற யாரா
வது சொல்லலாம். எல்லாவற்றையும் மீறிக்கொண்டிருப்
போமானால் வாழ்க்கை எங்கே முடியும்?''

வசிஷ்டர் கைகூப்பி ராமரை நமஸ்காரம் பண்ணி
னார்.

''இதை எதற்கு சொல்லறேன், இது நல்லவழின்னு
ஒரு இடத்துல உறுதியாக இருந்தா அதை உலுக்கி சரியில்

லைன்னு சொல்ல ஒன்பதுபேர் வருவான். விவாதத்துக்கு இழுப்பான். தெளிவா இருக்கிறவன் உறுதியிலிருந்து மாற மாட்டான். உறுதியாய் இருக்கிறவனுக்கு தெளிவு நிச்சயம்.''

சின்னபாண்டி வியந்து போனான். ராமரையே நினைத்துக் கொண்டு மடத்தில் தூங்கிப் போனான்.

அத்தை சொல்லி கொடுத்த ருசியிலிருந்து விலகி நிற்பதைப் பற்றி யோசிக்கத் தொடங்கினான்.

## 2

ஒரு குறிப்பிட்ட வயதில் மனசுகள் ஏற்படுகின்ற மாற்றங்கள் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வரு கின்றன. ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

உன்னித்து கேட்கவும், ஒரு முகப்படுத்திப் பார்க்க வும், உட்கார்ந்து இவைகளை யோசிக்கவும் எல்லோருக் கும் எப்போதாவது ஒரு நேரத்தில் ஏற்படும் எந்த முயற்சி யும் இல்லாது இது தானாய் நேரும். கும்பலோடு கும்ப லாய் ஜனங்களோடு ஜனங்களாய் எதற்கு அலைகிறோம் எங்கு ஓடுகிறோம். என்ன பேசுகிறோம் என்று தெரியா மல் பரபரக்கின்ற நேரங்களே மனிதர்களுக்கு வாழ்க்கை யில அதிகம்.

''இவையெல்லாம் சட்டென்று நீங்கி நாம் எதைக் கற்றுக் கொள்ள வேண்டும் எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்விகள் நெஞ்சைப் பற்றி யோசிக்க வைக்கும். மிக எதேச்சையாய் இது நிகழும்.

''அந்த நேரம் அந்த யோசிப்பில் ஆழ அமிழ்ந்தவன் பாக்கியசாலி.



பெண்ணாசையில் சிக்கிக் கொண்டிருந்தவர் சட் டென்று அதிலிருந்து விடுபட்டு சன்யாசியானதும் பெரும் பதவியில் 1இருந்தவர் எவரும் உதறி சாதாரணமானதும் இம்மாதிரி நேரங்களின் தாக்குதலால்தான்.

வனத்துக்குப் போன ராமரை மடக்கி மடக்கி நாலு பேர் பேச, எல்லாவற்றிற்கும் தெளிவாய் பதில் சொல்லி தன் முடிவு சரி என்று விவாதித்ததை சின்ன பாண்டி எதேச்சையாய் கேட்க நேர்ந்தது. வடமொழி என்று விலகும்போது தமிழில் பேச்சுத் தமிழில் கதை சொல்லப் பட்டபோது அதை முழுவதுமாய் எந்த இடையூறுமின்றி காது கொடுத்து கேட்க முடிந்தது.

நல்லதோ கெட்டதோ எதை எவர் செய்தாலும் அதைப் பற்றி விமர்சனம் செய்ய தங்கள் வழிக்குக் கொண்டு வர உலகத்தார் முயற்சிப்பார்கள். உலகத்தின் பேச்சுக்கு மாறி ராமர் அயோத்திக்கு திரும்பினால் வற் புறுத்திய கூட்டம் கேலி செய்யும்.

எப்படா கூப்புடுவாங்கன்னு காத்திருந்து கூப்பிட்ட ராமர் வந்து விட்டார் என்று பேசும். ராமருக்கு நாடா ளவே ஆசை. ஒப்புக்கு காட்டின் எல்லை லரை போனார் என்று கெக்கலிக்கும்.

வெறுமே முரட்டுத்தனமாய், கௌரவம் பார்த்து ராமர் நாடு மறுத்து காட்டுக்கு போயிருப்பின் காட்டில் அவர் வைக்கும் ஒவ்வொரு அடியும் அயோத்தியை நினை வூட்டி துக்கமாக்கும் புலம்பவைக்கும் கூப்பிட்டபோதும் மறுத்து காட்டுக்கு வந்து விட்டேனே என்று கலங்க வைக்கும்.

தன் நிலை எது, தன் செயலுக்கு அடிப்படை என்ன என்கிற மகத்தான தெளிவு ராமருக்கு இருந்திருக்கிறது. அறிவும் அனுபவமும் மிகுந்தவர்கள் வற்புறுத்தியும் கோபம் கொள்ளாது பதில் சொல்ல முடிந்திருக்கிறது.

காட்டிற்குப் போகும்போது ராமர் வயதென்ன பதி னெட்டா பத்தொன்போதா. என் வயதுதான். என் வயதில் ராமருக்கு எத்தனை தெளிவு. அப்படியானால் அந்த தெளிவு எனக்கு ஏன் வரலாகாது. ராமர் தெய்வ புருஷன் அதனால் அந்த தெளிவு வந்திருக்குமோ, இல்லை ராமர் தெய்வ புருஷன் என்று ராமருக்குத் தெரியாது. அவர் அளவில் அவர் சாதாரண ராஜகுமாரன். எதன் பொருட்டும் கோபமே கொள்ளாத மனிதன். தெளிவு தெளிவு தெளிவு இதற்குப் பெயர்தான் ராமன்.

எனக்கு இந்தத் தெளிவு வரலாகாதா.

என்ன தெளிவு. எது குறித்த தெளிவு. எது என் வாழ்க்கை என்று இந்த வயதில் நான் தீர்மானிக்க வேண்டும். எதை நோக்கிப் போகவேண்டும் என்று இப் போதே உறுதி வர வேண்டும்.

ருசியிலிருந்து விலகு என்று அத்தை சொன்னது சரி யான விஷயமாய் இருக்கிறது. தின்பதற்காக நான் உயிர் வாழவில்லை. உடுத்துவதே என் லட்சியமில்லை. நண்பர் களே உலகம் என்று வெறும் பேச்சில் என்னைக் கரைத்துக் கொள்ளக் கூடாது.

ருசியிலிருந்து ஆரம்பிக்கும் என்றாள் அத்தை. பேசிப் பேசி ருசி ஏறிவிடும் என்று பயமுறுத்தினாள்.

இந்த ஹோட்டல்ல இந்த பண்டம் நல்லா இருக்கும் என்று பத்து நிமிடம் எவரோ பேச பேச்சுக் கேட்டதால் பண்டத்தின் மீது ஆசை வந்து விடுகிறது உணவு பற்றி பேசியதைப் போல் பேண்ட் சட்டை பற்றி பேச்சு கேட்க வேண்டியிருக்கிறது. கட்டம் போட்ட பாம்பே டையிங், கட்டம் போடாத பின்னி, டெர்லக் காட்டன் லூஸ்பேண்ட், டைட் பேண்ட், கார்ட்ராய், ஜீன்ஸ் என்று ஏதேதோ சொல்கிறார்கள் எல்லாம் முக்கியம் என்று தோன்றிவிடுகிறது. எனக்கு ஜீன்ஸ் வேண்டும்



என்று பேச்சு கேட்டதாய் அலைகிறது. ஜீன்ஸ் வாங்க தேவையற்று அலைய வேண்டியிருக்கிறது. அலைந்து வாங்கியதை ஊருக்குக் காட்டி இது உசத்தி ஜீன்ஸ் என்று எவரிடமோ வலியப்போய் தம்பட்டம் அடிக்க வேண்டி யிருக்கிறது. வேஸ்ட். பெரிய வேஸ்ட். உண்ண உணவு, உடுத்த துணி அவ்வளவே.

ஜீன்ஸ் போட்டதாலேயே தான் உயர்வு என்கிற எண்ணம் வருகிறது. கும்பகோணத்தில் ஜீன்ஸ் போட்ட வெகு சிலரில் நானும் ஒருவன் என்று அலட்டும் மனோ பாவனையே மிஞ்சுகிறது.

அந்த வத்சலா உன்னையே பார்த்துவிட்டு போதுடா. எவரோ சொல்வார்கள். தன் ஜீன்ஸ் வத்சலாவை கவர்ந்து விட்டது என்று யோசனை வந்துவிடுகிறது. ஜீன்ஸ் லிருந்து மனசு வத்சலாவுக்கு தாவுகிறது. அதுவரை கவனிக்காத வத்சலாவை உடை உடுத்தியதாலேயே கவனிக்கத் தோன்றுகிறது. தான் அழகனோ என்கிற எண்ணம் ஏற்படுகிறது. அவனை கவனித்துப் போனதா லேயே சுமாரான வத்சலா அழகியாகத் தோன்றுகிறாள். அவள் நினைப்பு இரவும் பகலும் நெஞ்சில் ஊடுருவுகிறது. நெஞ்சில் அதிகநேரம் அவள் நினைப்பு இருந்ததாலேயே அவள் தனக்கு உரிமையுள்ளவள் என்கிற தோற்றம் வந்து விடுகிறது. தானும் வத்சலாவை உயிருக்கு உயிராய் நேசிப் பதாக நினைப்பு வருகிறது. இந்த நினைப்புக்கு பல விஷயங்கள் துணை வந்துவிடுகின்றன. சினிமா பாட்டு, நாடகம், கதை புஸ்தகம் எல்லாம் இதை வளர்க்க காரண மாகின்றன.

என்ன இப்போது செய்ய வேண்டுமோ அதைச் செய் யாமல், என்ன இப்போது தேவையில்லையோ அதை செய்யும் முனைப்பு வந்துவிடுகிறது

அந்த வத்சலாவை பின்தொடர அவளுடன் பேச, கடிதம் தர முயற்சிகள் வளருகின்றன. படிப்பு பாழாய்

போகிறது. பாடபுத்தகம் திறந்தால் எதுவும் மனதில் பதியாமல் வத்சலா மறைத்துக் கொள்கிறாள். பத்தா வதில் தவறிய பையனை எவளும் நேசிப்பதில்லை.

அது தெருப்பொறுக்கி. சும்மா பின்னாடியே அலைய றான் எப்படி பாஸாவான். குலத்தளவே ஆகுமாம் குணம். இப்படிப்பட்டவனுக்கெல்லாம் கவர்மெண்ட் செலவு செய்யறது வேஸ்ட் என்று வத்சலா சொல்லிவிட நேரும்.

இது மிகப்பெரிய அடி மிகப்பெரிய அவமானம். அவன் செய்த தவறுக்கு குடும்பத்தையே ஒரு கூட்டத் தையே புறம் கூறும் கேவலம் எல்லாவற்றுக்கும் காரணம் ருசி உணவு ருசி. உடை ருசி, கர்வ ருசி, காதல் ருசி ருசி அறு, ருசி அறு

ஆனால் கூட உள்ள பையன்கள் கேலி செய்வார்கள். என்னடா இப்படி பேண்ட் போட்டுகிட்டு வரே. பிங் கலர் சர்ட் போடாதம்மா அசிங்கமா இருக்கு. ஒரு பொண்ணும் உன்னை ஏறெடுத்தும் பார்க்கமாட்டா.

இப்படி கம்மங்குடி பையன் மாதிரி வந்தே உன்னைய கிட்டவே சேர்க்க மாட்டோம்.

வயசு பையன் ஷோக்கா ட்ரஸ் பண்ண வேணாம். எல்லாரும் பவர். ஷூ போட்டுகிட்டு இருக்கறப்போ ஹவாய் செருப்போட வராம் பாரு. என்கிட்ட பழைய பவர் ஷூ இருக்கு பாதி விலைக்குத் தரேன் வாங்கிறியா.

இப்ப உடுத்தாத எப்படா உடுத்தப்போற, முப்பது வயசு ஆனா பிறவு வேட்டிதான் அதுக்குள்ள உடுத்தி முடிச்சுரணும்.

எதற்கு ஏன்?

கூடா ஒழுக்கம் கேடாய் முடியும். இந்தக் கூட்டம்



வேண்டாம் என்று ஒதுங்கிவிட வேண்டும். கூட்டத்தின் ருசியையும் விட்டுவிட வேண்டும்.

என் வேலை இப்போது படிப்பது உலகத்தைக் கவ ளிப்பது. ஒதுங்கி நின்று எல்லோரையும் உற்றுப் பார்ப் பது.

நாளைக்குப் படிச்சுக்கலாம் நாளைக்குப் படிச்சுக்க லாம் என்று நண்பர்கள் கூட்டம் நாட்களை கடத்தி போட சின்ன பாண்டி படித்த பாடத்தையே மறுபடி மறுபடி படிக்கத் துவங்கினான்.

கிளாஸ் டெஸ்ட் தானம்மா. ஒருவாரம் உட்கார்ந்தா பைனல்ல தூள் கிளப்பிடலாம். தங்களுக்குள்ளேயே உறுதி சொல்லிக் கொண்டார்கள்.

சின்னபாண்டி செண்ட் பர்ஸெண்ட் கணக்குல. ஐயா வாங்க. கணக்கு வாத்தியார் கூப்பிட்டார்.

''காப்பி அடிச்சீங்களா?'' நம்ப முடியாது கேட்டார்.

''இல்ல சார்.''

''போர்ட்ல கணக்கு போடுவீங்களா?''

''போடறேன் சார்.''

அல்ஜீப்ரா எழுதி தீர்வு காட்டும்படி கணக்கு வாத்தி யார் சாக்பீஸ் தூக்கிப் போட்டார்.

இரண்டு நிமிடத்தில் விடை காட்டினான்.

''அடி சக்கை பார்க்குல பேசிக்கிட்டே இருந்தாலும் படிப்புல கெட்டியா இருக்கியே.'

''பார்க் பக்கம் போறதில்லை சார்.''

''நெஜம்மாவா.''

"டென்த் மார்க் முக்கியம் சார். எப்படினா நல்லா படிச்சு நல்ல வேலைக்குப் போகணும் சார்."

"நிச்சயமா போகணும் நல்லா முன்னுக்கு வரணும். எதுல வீக் நீ."

"இங்லீஷ் சார்."

"புரியுது. உருப்போடு. கமா புல்ஸ்டாப்போட உருப்போடு."

"புரியாத படிக்கிறேன் சார்."

"பரவாயில்லை சின்னபாண்டி. மொழி பழக்கம் காரணமாய் வளரும் விஷயம். முதல்ல மொழியோட நெருங்கின தொடர்பு வெச்சுக்க புரிஞ்சாலும் புரியாத போனாலும் உருப்போட்டுறு. இப்ப உருப்போட்டு நெஞ்சுல பதிய வச்சுட்டா இங்கிலீஷ் பேசற சூழ்நிலைக்கு நீ போறபோது சரசரன்னு பாஷை வந்துரும். இப்ப அடிப்படை விட்டுட்டா பின்னால பிக்கப் பண்ண முடியாது."

ஆனால் பார்க் கூட்டத்தில் சில பையன்கள் ஆங்கிலம் சரளமாய் பேசினார்கள். பேசமட்டுமே கற்று வைத்திருக்கிறார்கள். எழுதச் சொன்னால் தடுமாறுகிறார்கள் என்று சின்னபாண்டி தெளிவாய் புரிந்து கொண்டான். எந்த பரிட்சையிலும் பேசச் சொல்லி, பேச்சுக்கு மார்க் போடுவதில்லையே என்று இடித்துக் காட்டினான். அவனுக்கு பேச முடியாது போனாலும் கேள்விக்கு உண்டான பதிலை பலமுறை எழுதிப் பார்த்தான்.

"வாங்கய்யா பேண்ட் போட்டவரே" அப்பா திடீரென்று திண்ணையிலிருந்து குரல் கொடுத்தார்.

எந்த வேலையும் இல்லாது போனால் மெல்வதற்கு சின்னபாண்டியை அழைப்பது அவருக்கு வழக்கம்.



"நாங்க பள்ளிக்கூடம் போறப்போ எங்களுக்கு அரை நிக்கர்தான். வயசு புள்ளை அரை நிக்கர் போட்டு உட்கார்ந்தா கண்ணை உறுத்துதுன்னு நாலு முழ வேஷ்டி வாங்கிக் கொடுத்தாங்க. என் கல்யாணத்துக்கு முதல்நாள் வரைக்கும் நாலுமுழவேஷ்டிதான் தெரியாத்தனமா கல்யாணத்துக்கு நாலுமுழ வேஷ்டி வாங்கிட்டேன். அப்புறம் ஐயருக்கு வாங்கின வேஷ்டி நான் கட்டிக்கினு எனக்கு வச்சிருந்த வேஷ்டிய நான் ஐயருக்கு கொடுத்தேன்," அப்பா வாசலில் நின்றபடியே வீட்டுக்குள் குரல் கொடுத்து பேசினார்.

"எங்களுக்கு அப்பல்லாம் உடுத்தக்கூட தெரியாது' இவரு என்னடானா வூட்ல பேண்ட்ட கூட கழட்ட மாட்டேன்றாரு."

"இவன் என்னா உடுத்திட்டா, எல்லா பசங்களும் என்னென்னமோ போட்டுன்னு திரியுதுங்க. இவனப் போய் நொய் நொய்ன்னு சொல்றீங்களே. அவன் நல்லா படிக்கிறான்னு வாத்தியார் சொல்றாரு. மேல படிக்க வைக்காமல் விட்டுடாதிங்கன்னாரு.'

"யாரு யாரை படிக்க வைக்கிறது? அவனா படிச்சிக்க வேண்டியதுதான் ஆயிரம் பத்தாயிரம் நம்மகிட்ட துட்டு கேட்க போறான். இப்பமே சொல்லிடு முடியாதுன்னு."

"அவன் சம்பாதிச்சா சோத்துக்கு போய் நிப்பிங்களே"

"சோத்துக்குத்தான் நிப்பேன். சோறு போட்டதுக்கு பதில் சோறு போடட்டும் வேற எதுவும் வேணாம்."

"வயசான காலத்துல யாருக்காவது வாத்தியம் தூக்கின்னு போனா அஞ்சு பத்துன்னு கொடுப்பாங்க.

அவங்களுக்கு கொடுக்கற வேட்டிய நமக்கு தூக்கிப் போட்டுடுவாங்க, அதுபோதும் நமக்கு.''

''வாத்தியம் தூக்கறவனுக்கு ஆடி மாசம்தான் பஞ்சமே தவிர, மத்த நேரத்துல கூப்பிட்டு உட்கார வச்சு சோறு போட்டுடுவாங்க.''

''இப்ப என்னான்றீங்க,'' அம்மா வீட்டுக்குள் இருந்த படியே அப்பாவை பார்த்து சீறினாள்.

''நல்லா படிக்கிறமேன்னு ஆடிட போறான். எங்களுக்கு அதுபத்தி ஒன்னும் பெரிய மரியாதை இல்லேன்னு சொல்லிடு.''

எதற்கு அப்பா இத்தனை கடி கடிக்கிறார் என்று பிள்ளைக்கு புரியாமல் போயிற்று. யாராலும் பாராட்டப் படாமல் வளர்கிறோமே என்ற துக்கம் பரவியது.

''கணக்கு நூத்துக்கு நூறா வெரிகுட்'' என்று யாராவது கட்டியணைத்தால் தேவலாம் என்று தோன்றியது. ஏக்கம் வந்தது.

அத்தையிடம் போய் அப்பா சொன்னதைச் சொன்னான்.

''இது பயம், எல்லோரும் தன் கைக்குள்ளே இருக்கணும்ங்கிற பேராசை. நீ நல்லா படிக்கிறதுக்கு நான் கூட பாராட்டமாட்டேன். படிக்கிறது உன் வேலை. அதை ஒழுங்கா செய் ஒண்ணும் எதிர்பார்க்காத. யாராவது பாராட்டினா கூட மனசுல வாங்கி அவங்க பின்னால போவாத. பாராட்டை அலட்சியப்படுத்தினா அடுத்த பாராட்டு தானா வரும்.''

இதுவும் எங்கோ தைத்தது பள்ளியில் இரண்டாவது மாணவனாக தேறினான். ரோஜா பூ மாலை போட்டு பாராட்டு பத்திரம் கொடுத்து சின்ன எவர்சில்வர் கப்பும்



கொடுத்தார்கள். பத்திரத்தை பெட்டியில் வைத்துவிட்டு கோப்பையை அம்மாவிடம் கொடுத்தான்.

அம்மா அந்த கோப்பையை எப்போதும் கண்ணில் படும்படி சமையல் அறையில் வைத்துக் கொண்டாள். பதினோராம் வகுப்பில் கதை புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தான். பாட புத்தகத்தை கதை போல படிக்க ஆரம்பித்தான். அப்புறம் மாவட்ட நூலகத்துக்குப்போய் ஆங்கிலப் புத்தகத்தை படிக்கத் துவங்கினான். தாறுமாறாய் முளைத்திருந்த மீசையை முற்றிலும் வழித்துக் கொண்டான். வழித்துக்கொண்டபிறகு கழுத்துப்பக்கம் இறகே இல்லாத வான்கோழிபோல காட்சியளித்தான். உயரமானான் உறுதியானான். பத்தாம் வகுப்பு பேண்ட்டு தன் கணுக்காலுக்கு மேல் ஏறின பெண்களை பார்க்கும் ஆவல் ஏற்பட்டது மத்திய வயது பெண்கள்மீது பார்க்க பார்க்க காமம் தோன்றுகிறது.

ஒருநாள் பஸ் பிடிக்க தபதபவென்று ஓடியபோது, ஒரு மத்திய வயது பெண்மணி மிரண்டு ஒதுங்கினாள். மழைச்சேறில் கால் வைத்து தள்ளாடினாள். ''எருமை மாடு மாதிரி ஓடறான் பார்'' என்று வாய்விட்டு கத்தினாள்.

''டேய் பையா. டிக்கெட் வாங்கிட்டியா?'' வயசாளி கண்டக்டர் அதட்டிக் கேட்க, அந்தப் பெண்மணியின் கோபத்தையே நினைத்துக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டு விழித்து டிக்கெட் வாங்கினான்.

ஒரு பொம்பளை என்னை எருமை மாடுன்னு சொல்றா. ஒரு கண்டக்டர் என்னை பையன்னு கூப்பிடறான். நான் மாடா, பையனா, நான் ஆணா சிறுவனா? குழப்பம் ஏற்பட்டது.

''இதான் சின்னப்பாண்டி, ரெண்டுங்கெட்டான் இடம். பதினேழு வயசுலே இருந்து இருபத்தியோரு வயசு வரைக்கும் ரெண்டுங்கெட்டான் இடம். நீ பெரிய

ஆம்பளையுமில்லே. சின்ன பையனுமில்லே. ஆளுக்கு தகுந்தபடி உன்னை மாத்தி மாத்தி நடத்துவாங்க. எல்லோரும் கூப்பிட்டு கூப்பிட்டு புத்தி சொல்லுவாங்க. புத்தி சொல்றதை கேலியா, குத்தலா சொல்லுவாங்க.''

அத்தை சிரித்தபடி புத்தி புகட்டினாள்.

''பறக்கத் தெரிஞ்ச குஞ்சு பார்த்திருக்கியா ஒரு காக்கா அதுக்கு அலகுள்ள அலகு வச்சு சோறு ஊட்டும், இன்னொரு காக்கா பற... பறன்னு கொத்தி கலவரப் படுத்தும் தானா பறந்து... தானா கொத்தி அந்த காக்கா குஞ்சு ரொம்ப அவஸ்தைப்படும் காக்கா, குருவி, நாய், பூனை எல்லாத்துக்கும் இப்படியொரு வயசு, இப்படியொரு வேதனை உண்டு. மனுஷாளுக்கும் உண்டு. இந்த வேதனையை முழுங்கு. எவ்வளவோ ஒடுக்கமா இருக்க முடியுமோ அவ்வளோ ஒடுக்கமா இரு.

''உன்னைக் கண்டு பொம்பளைக்கெல்லாம் ஒரு அச்சம் வரும் வயசாளி ஆம்பளைக்கெல்லாம் பொறாமை வரும். நல்லா ஓடு. பஸ் ஏறதுக்கு ஓடாத. பஸ்ஸி தண்டால் எடுத்து இரும்பு மாதிரி உடம்பு வச்சுக்க, மாரத்திறந்து காட்டாத. பட்டுப்பூச்சி இருக்கே. இந்த நேரத்தைத் தந்திரமா தாண்டிடும். புழுன்னு அல்பமா நினைக்கிறோமே. அது கூட்டுக்குள்ளே ஒளிஞ்சுக்கும் தன்னை சுத்தி கூடுகட்டிக்கும். சடார்னு ஒருநாள் பளபளன்னு பட்டுபூச்சியா வெளியில் வந்துடும். அது எப்ப நெறம் மாறிச்சுன்னு யாருக்கும் தெரியாது. அந்த மாறுதலை யாருக்கும் காட்டாது.'' அத்தைதான் மறுபடியும்போதித்தாள். கூட்டுப்புழுவாய் இரு என்றாள் கூட்டுப்புழுவாய் இருப்பது என்றால் என்ன? என்று சின்ன பாண்டி யோசித்தான். காவிரிப் பாலம் வரை நடந்து போய்விட்டு அங்கிருந்து வடக்கு நோக்கி தினமும் ஓட ஆரம்பித்தான். விறுக் விறுக்கென்று நடந்து



திரும்பி வந்தான். அந்த ஓட்டம் அசாத்திய பலம் கொடுத்தது

பள்ளிக்கூடத்து மைனர்கள் விளையாட்டுப் போட்டியிலும் பங்கேற்க, நானூறு மீட்டர் பந்தயத்திற்கும், ஆயிரத்து ஐநூறு மீட்டர் பந்தயத்திற்கும் மட்டுமே பெயர் கொடுத்தான். இரண்டரை கிலோ மீட்டர் நிற்காது ஓடுகிறவனுக்கு ஆயிரத்து ஐநூறு மீட்டர் கவலையே இல்லாத விஷயமாக இருந்தது. ஆனால் அவனைப் போலவே ஆறேழு பேர்கள் பயிற்சி செய்தார்கள். ''கும்பலா ஓடலாம் வர்றியா'' என்று கேட்டார்கள். ''நீ எந்தப் பக்கம் ஓடறே?'' கேள்வி கேட்டார்கள். அவன் ஓடுவதை சைக்கிளில் தொடர்ந்துவந்து பார்த்தார்கள். சின்ன பாண்டி இடம் மாற்றினான்.

வெவ்வேறு பஸ் ரூட்டுகளை தேர்ந்தெடுத்து ஷூ இல்லாமல் வெறும் கால்களோடு ஓடினான்.

''கால் உயரமா நீளமா இருக்கு உனக்கு. லாங் ஜம்ப்புக்கு பேர் கொடுடா ஹை ஜம்ப்பும் பண்ணு'' உடற்பயிற்சி ஆசிரியர் ஆசை காட்டினார்.

நாலு முறை லாங் ஜம்ப் செய்ய மணலில் குதிக்கும் போது கால் பிரண்டது வலியில் உயிர் போயிற்று. மூன்று நாட்கள் நொண்டி நொண்டி ஓடவேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு நீளம் தாண்டலை ஒதுக்கிவைத்தான். உயரம் தாண்டலின் பக்கமே போகவில்லை. அத்தை தென்னைமரக்குடி எண்ணையை சூடு பண்ணி அவன் காலில் தடவி உருவிவிட்டாள். அம்மா தினமும் அரைவேக்காடு முட்டை கொடுத்தாள். முருங்கைக் கீரையை விதவிதமாய் சமைத்துக் கொடுத்தாள். கடையில் இருந்து ஆட்டு எலும்புகளாய் வாங்கி ரசம் வைத்துக் கொடுத்தான்.

மறுபடியும் ஓட்டம், வேகமாயிற்று. மூன்று கிலோ மீட்டர் ஒரே சீராக ஓட முடிந்தது. காக்கி நிக்கரும் வெள்ளை பனியனுமாய் அவன் மட்டுமே இருந்தான், மற்றவர்கள் கலர் கலராய் உடுத்திக் கொண்டிருந்தார்கள் உளசுற்று ஓரம்பிடிக்க சண்டை இட்டுக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் தள்ளியபடி நின்றார்கள். சின்னபாண்டி ஒதுங்கி நின்றான். எட்டணாவுக்கு வாங்கிய மஞ்சள் ரிப்பனை தலையில் இறுக்கி கட்டிக் கொண்டான்.

நாலு ரவுண்ட் வரவேண்டும். துப்பாக்கி சத்தம் கேட்டதும், வெளிச்சுற்றில் எல்லோருக்கும் பின்னே நிதானமாக ஓடினான். முப்பது பேர் கூட்டம் ஒரே பக்கத்தில் முண்டியடித்துக் கொண்டு தடுமாறிற்று. இரண்டாவது ரவுண்டில் அந்த கூட்டம் இருபது பேராயிற்று. மூன்றாவது ரவுண்டில் ஆறு பேரே இருந்தார்கள். மூன்றாவது ரவுண்ட் முடியும் போது சின்ன பாண்டி வெளிசுற்றிலேயே எல்லாரையும் தாண்டினான். உள்சுற்றுக்கு வந்தான். வேகத்தை நிதானமாக அதிகப் படுத்தினான். கிட்டத்தட்ட நூறு மீட்டர் இடைவெளி கொடுத்து முதலாவதாக வந்தான். உடற்பயிற்சி ஆசிரியர் அவனை தழுவிக் கொண்டு தண்ணீர் கொடுக்க முன்வந்தார்,

''தண்ணி சாப்பிடக்கூடாது சார்'' என்று மறுத்து விட்டான். பழைய டர்க்கி டவலால் உடம்பை துடைத்துக் கொண்டான். ஒரே ஒரு மிட்டாய் மட்டும் வாயில் அடக்கிக் கொண்டான். நானூறு மீட்டருக்கு தயாரானான்.

''டேய் இந்த பந்தயத்துல உன் காலைத் தட்டி விட்டுட போறாங்களாம்'' யாரோ ஒரு சோனிப் பையன் சொல்ல சிரித்துக் கொண்டான்.



நானூறு மீட்டரில் அவனுக்கு நடுவட்டம் கிடைத்தது. கடைசியில் நூறு மீட்டரில்தான் லைன்மாற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. உடம்பு முழுவதும் வலுசேகரித்து தயாரானான். துப்பாக்கி சத்தம் கேட்டதும் மின்னல் போல் பாய்ந்தான், யாரோ அடிக்க துரத்துவதைப்போல் நினைத்துக் கொண்டு பேய் மாதிரி ஓடினான். கடைசிவரை லைன் மாறாமல் முதலாவதாக வந்தான் இப்போது நல்ல இடைவெளி கொடுத்தான். ஓடியவர்கள் நொந்து போனார்கள். ஓடாதவர்கள் ஆரவாரம் செய்தார்கள். அவன் இரண்டையும் அலட்சியப்படுத்தினான்.

தனியே போய் பேண்ட்டுக்கும், சட்டைக்கும் மாறினான்.

''லாங் ஜம்ப்புக்கு வாடா...லாங் ஜம்ப்புக்கு வாடா'' பல ஆசிரியர்கள் தொந்தரவு செய்தார்கள்.

'டீ சாப்பிட்டு வரேன் சார்'' பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்தான். கடுமையாகப் பசித்தது. அம்மா கொடுத்த பத்து ரூபாயில் ஆறு ரூபாய்க்கு முழு சாப்பாடு சாப்பிட்டான்.

''அப்போ லாங் ஜம்ப்புக்கு போகலையா?'' ஹோட்டலின் மறுகோடியில் காபி சாப்பிட்டுக் கொண்டிருந்த கணக்கு வாத்தியார் அருகில் வந்து கேட்டார்.

''போகலை சார்''

''ஏன்?''

''இது போதும் சார்.''

''ஏன்?'' மறுபடியும் கேட்டார்.

''நாளைக்கு வேலைக்கு போக எதாவது சர்டிபிகேட்

வேணும். அதுக்குத்தான் ஓடினேன். ஸ்போர்ட்ஸ்மேன் ஆகணும்னு எனக்கு ஆசை இல்லை சார்.''

''ஏன் ஆசை இல்லை?''

''விளையாட்டுல புத்தி போயிடுச்சின்னா படிப்பு மண்டைய விட்டு நகர்ந்துடும் சார். ப்ளஸ் டூவுல பள்ளிக்கூடத்துல முதலாவதா வரணும். விளையாட்டை விளையாட்டாத்தான் வச்சுக்கணும்.''

''நீ இசை வேளாளர்தானே?''

''ஆமாம் சார்''

அவன் குற்றம் புரிந்தவன் போல் தலை குனிந்து கொண்டான்.

''நோ...நோ...தலை குனியாத சின்னபாண்டி, நான் இழிவு படுத்தறதுக்காக கேக்கலை. தயவு செய்து என் கேள்விய தப்பா நினைக்காதே உன்னுடைய எல்லா நடவடிக்கையும் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. உன் பேச்சு ரொம்ப ஆச்சரியமா இருக்கு. ஜெயிக்க முடியும்ங்கிற இடத்தைக்கூட விட்டுட்டு, வா...வான்னு கூப்பிட்ட போதும் ஒதுங்கி நிக்கிறது ஆச்சரியமா இருக்கு ப்ளஸ்டுல நீ என் க்ளாஸ்தான் வருவேன்னு நினைக்கிறேன், என் செக்ஷனுக்கு வராது போனாலும் உன்னை நான் கேட்டு வாங்கிப்பேன். செக்ஷனுக்கு வருவியா?'' முதல் முதலாய் ஒரு அன்னியர் அவனைக் கனிவோடு பார்ப்பது உணர்ந்து அவனுக்கு உடம்பு நடுங்கிற்று.

''வரேன் சார், உங்க செக்ஷனுக்கே வரேன்... ஆனா...'' அவனுக்கு எப்படி பேசுவது என்று தெரியவில்லை.

''என்ன ஆனா...?''

அவர் தூண்டியபோதும் சின்னபாண்டி பேசத் தயங்கினான்.



''சொல்லு மனசு விட்டு பேசு.''

''நான் இசை வேளாளர்னு என்னை இரக்கமா பார்க்கறீங்களா?'' மனதில் உள்ளதை வெளியில் கொட்டினான். ஒரு கணம் அந்தக் கணக்கு வாத்தியாரின் கண்ணில் கோபம் தோன்றியது. மறுகணத்தில் சாந்தம் படர்ந்தது.

கணக்கு வாத்தியார் வாய் விட்டு சிரித்தார்.

''தப்பு என் பேர்ல இருக்கு. நான் அந்தக் கேள்விய கேட்டிருக்கக் கூடாது ஜாதிகள் இல்லையடி பாப்பா குலம் தாழ்ச்சிச் சொல்லல் மிகப்பாவம். நான் மனுஷன். நீ மனுஷன். நான் வாத்தியார். நீ ஸ்டூடண்ட். எனக்கு நல்ல ஸ்டூடண்ட் வேணும். கணக்கு கற்றுக் கொடுக்க மட்டுமில்லை .எனக்கு தெரிஞ்சதெல்லாம் உனக்கு கத்துக் கொடுக்கணும்ங்கிற ஆசை. எனக்கு நிறைய தெரியும் சின்னப்பாண்டி. கத்துக்கறத்துக்குத்தான் ஆள் இல்லை. கத்துக்கறது சுகம். கத்துக் கொடுக்கறதும் சுகம். நான் தப்பா பேச ஆரம்பிச்சுட்டேன். அதனால இத்தோட நிறுத்திக்கறேன். ப்ளஸ்டூவுக்கு வா. நான் யாருன்னு உனக்கு புரியும்.''

சரட்டென்று அவனை விட்டு நீங்கினார்.

இந்த முறை நல்ல வெள்ளி பதக்கமும், பெரிய வொய்ட் மெட்டல் கோப்பையும் கிடைத்தன அவன் பரிசு வாங்கும்போது மிகப்பெரிய ஆரவாரம் எழுந்தது.

பரிசு வாங்கித் திரும்பும்போது யாரோ ஒருவன் 'பீப்பி...டும்டும்' என்று குரல் கொடுத்தான். உள்ளே ஒரு ஆத்திரம் பரவியது. ஆவேசமாய்த் திரும்பிப் பார்த்தான். நாலு அடி தள்ளி நின்ற கணக்கு வாத்தியார் விருட்டென்று எழுந்தார்.

'பளார்' என்று குரல் கொடுத்த பையனை அறைந்தார். "மரியாதை கெட்ட நாயே...திருட்டுத் தம் அடிக்கிற பொறுக்கி. உன்னை ஒழிச்சுக் கட்டிடுவேன் பள்ளிக்கூடத்துல இருந்து."

சட்டென்று ஆரவாரம் அடங்கியது.

"என்ன...என்ன?" என்று மற்ற வாத்தியார்கள் கேட்ட போது அவர் மௌனமாய் இருந்து விட்டார், தலைமை ஆசிரியர் அழைத்துக் கேட்டபோது காதோடு அவருக்கு விபரம் சொன்னார்.

அடித்தவருக்கும், அடி பட்டவனுக்கும், சின்ன பாண்டிக்கும், தலைமை ஆசிரியருக்கும் மட்டுமே அந்த நிகழ்ச்சி புரிந்தது. சகஜமான பேச்சால் மற்றவரிடமிருந்து அது மறைக்கப்பட்டது.

தலைமை ஆசிரியர் அவனை ஞாபகம் வைத்துக் கொள்ள அந்த நிகழ்ச்சியே காரணமாயிற்று.

பாண்டியன் பதினோறாம் வகுப்பு அரை இறுதித் தேர்வு மார்க்குகள் தலைமை ஆசிரியரால் புரட்டிப் பார்க்கப்பட்டான், எண்பது, தொண்ணூறு எல்லாம் போதாது இன்னும் தீவிரமாக படிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

"பள்ளிக்கூடத்து முதல் ரேங்க் போதுமா உனக்கு. மாநிலத்தில் முதலாய் யார் வருவது. அந்த பெருமையை இந்த பள்ளிக்கூடத்துக்கு தரக்கூடாதா நீ. வைத்திய நாதய்யர் ட்ரஸ்ட் என்கிற அமைப்பு பள்ளி இறுதி படிக்கும் மாணவனுக்கு வருஷத்துக்கு இரண்டாயிரம் தருகிறது பதினோராம் வகுப்புக்கு சித்தையா பிள்ளை அறக்கட்டளை ஆயிரம் ரூபாய் தருகிறது. இரண்டும் உனக்கு தருகிறேன். பதிலுக்கு நீ எனக்கு என்ன தருவாய்?" தலைமை ஆசிரியர் கேட்டார்.



சின்ன பாண்டி திகைத்துப் போய் நின்றிருந்தான்.

"சொல் பதிலுக்கு என்ன தருவாய்?"

"என் உண்மையான முயற்சியை செய்வேன்."

"இதை ஆங்கிலத்தில் சொல் பார்க்கலாம்."

சின்னபாண்டி தடுமாறினான். தலைமை ஆசிரியர் சொல்லிக் கொடுத்தார்.

மூவாயிரத்துக்கு காசோலை வாங்கிக் கொண்டு அத்தையை நோக்கி ஓடினான். சமையல் அறையில் தோசை வார்த்துக் கொண்டிருந்தவளிடம் காசோலையை காட்டினான். சுவரில் சாய்ந்து கொண்டு கண் கலங்கினான்.

"நல்ல விஷயம் தானடா எதுக்கு அழற?"

"தெரியலை."

"மனசு கனத்துப் போச்சா?"

"ஆமாம்."

"என்னாத்துக்கு இதலாம் கொடுத்து கஷ்டப்படுத்துறாங்களோன்னு தோணுதா?"

"ஆமாம்."

"சாதாரணமா எடுத்துக்கோ சின்னப்பாண்டி. இது வரலைன்னா எப்படி ஒதுங்கியிருப்பியோ அப்படி வந்திலிருந்தும் ஒதுங்கியிரு."

"உனக்கு இதுல புடவை எடுக்கட்டுமா அத்தை?"

"எனக்கேன் உன் புடைவை."

"எனக்கு நீ நிறைய சொல்லி தரே அத்தை. உன்னால தான் எனக்கு இதலாம் கிடைச்சது."

"நான் சும்மாவா சொல்லித்தரேன் ஒரு சுயநலம் தான்."

"உனக்கு என்னா சுயநலம் அத்தை?"

"பொண்ணுபெத்து வச்சிருக்கேனே. தீனி பண்டாரமா சுத்திட்டு வருதே. எங்கியும் விலை போகலைன்னா

உங்க ஆத்தாகிட்டதானே நான் வந்து நிக்கணும். உன் புள்ளைக்கு இஷ்டம் உனக்கு இஷ்டமான்னு உன் ஆத்தா கிட்ட பேச்சு ஆரம்பிக்கலாமில்லை.''

''நிஜமா இந்த எண்ணத்துலதான் எனக்கு சொல்லி தர்றியா?''

''இதுல நெஜம்மென்னா. பொய் என்ன? கொல்லையில் கீரைத்தண்டு இடுப்புசரத்துக்கு நிக்குது. அறுத்து வீட்டுக்கு வச்சுட்டு அக்கம் பக்கம் கொடுப்பேன். அப்படி கொடுக்கறதுக்கு முன்னாடி விதைய உருவிவச்சுக்குவேன். ஒருமழை பெஞ்சுதுன்னு வச்சுக்கோ மண்வெட்டில ஒரு தடவை கிளறி உருவின விதையை வீசிட்டு வந்துடுவேன். கொல்லையில் கீரை முளைக்கணும்னு பாடுபடலே. முளைக்க கூடாதுன்னும் எண்ணமில்லை. முளைச்சா சரி முளைக்காட்டாலும் சரி.''

''என்னா சொல்ற நீ.''

''நீ என் பொண்ணை கட்டிக்கிட்டாலும் சரி. கட்டிக்காத போனாலும் சரி விதைய தூவறது தூவி வப்போம்னு செய்யறேன்.''

''மழையே இல்லாம வெயில் காஞ்சு கீரை முளைக்கலேன்னா?'' சின்னபாண்டி புரிந்துகொண்டு கேள்வி கேட்டான்.

கொல்லைப்புறம் உட்கார்ந்து தலைவிரிச்சுட்டா அழமுடியும். காவேரிப் பாலம் போய் காசு கொடுத்து வாங்கிட்டு வர வேண்டியதுதான்.''

''யப்பா...உன்னை கையெடுத்து கும்பிடணும் போல இருக்கு அத்தை.''

''நான் இதையெல்லாம் தானா கத்துக்கிட்டேன்னா? எனக்கும் எவளோ சொல்லிக் கொடுத்தா, அவளுக்கும் எவளோ சொல்லிக் கொடுத்தா, கும்பிடறதாருந்தா பல



தலைமுறைக்கு முன்னாடி கும்பிடணும். எப்பவோ கீரை விதைன்னு கண்டுபிடிச்சது இன்னிவரைக்கும் வருது. அப்படிதான் எல்லாமும் வருது.''

''யார் அந்த முதல் ஆள்?''

சின்னபாண்டி தொலைவில் பார்த்து அத்தையை கேட்டான்.

''தெரியாது.''

''எந்தரோ மகானுபாவுலு அந்தரீக்கி வந்தனமு''

அத்தை கைகூப்பினாள்.

''என்ன அர்த்தமிதுக்கு.''

''யார் யாரோ பெரியவங்க நல்லது சொல்லிவிட்டு போயிருக்காங்க.''

''அது தொடர்ந்து கீரையா முளைச்சிட்டுதான் இருக்கும். நல்லது மறையாது. கீரையும் அழியாது.''

உலகம் எவ்வளவு பிரமாண்டம் என்பது சின்ன பாண்டிக்கு புரிந்தது. எவ்வளவு பெரிய சங்கிலி தொடர் என்று புரிய அதிசயம் ஏற்பட்டது.

அத்தை அறுத்த கீரைத்தண்டுகளை பெரிய கட்டாய் கட்டிப்போய் கணக்கு வாத்தியார் வீட்டில் கொடுத்தான். வாத்தியார் வீடியோபார்த்துக் கொண்டிருந்தார். சோமயாஜுலு நடித்த தியாகைய்யா படம் ஓடிக்கொண்டிருந்தது. வாத்தியார் கண்களில் நீர் கட்டியிருந்தது. அவனை சைகையில் உட்காரச் சொன்னார். மறுபடி படத்தில் ஒன்றிப்போனார்.

''நாத தனு'மனிஸம் சங்கரம் நமாமி மே மனஸா ஸிரஸா...

தம்புரா சுருதியோடு பாட்டு வந்தது. அர்த்தம் புரியாது போனாலும் சுகமாய் சங்கீதம் மனதை வருடிக்

கொடுத்தது. படம் முழுவதும் தரையில் உட்கார்ந்து
பார்த்தான். படத்துக்கு நடுவே அவல் உப்புமாவும்,
காப்பியும் கணக்கு வாத்தியாரின் சிறிய பெண் கொண்டு
வந்து வைத்தாள். வெட்கப்பட்டான், சாப்பிட்டான்.

''நான் சொல்லலைம்மா சின்னபாண்டியன் இந்த
பையன்தான்''

''ஹலோ'' அந்த பெண் குயிலாய் கூவிற்று.

கலைக் கல்லூரியில் பி. எஸ். சி கணிதம் மூன்றாவது
வருடம் படிப்பதாய் சொல்லிற்று. 'ஐ லவ் மேத்தமெட்
டிக்ஸ்' என்று தொடர்ச்சியாய் ஆங்கிலத்தில் பேசியது.

அவள் பேசும் ஆங்கிலம் புரிந்தது. ஆனால் பதில்
சொல்ல முடியவில்லை. ஏதோ ஒரு தயக்கம் தொண்
டையை அடைத்தது.

''அப்பா உங்கள பத்தி நிறைய சொன்னார். உங்
களை மாதிரி இருக்கிறவாளுக்குத்தான் ஸ்காலர்ஷிப்
கொடுக்கணும்னு நான் அடிச்சு சொன்னேன். அந்த
பணம் கெடைச்சுதா?''

'கிடைத்தது' என்று தலையாட்டினான். வாத்தியார்
தான் காரணமா? மனசுக்குள் கை கூப்பினான்.

'அவனுக்கு மோட்டார் ரிப்பேர் பண்ண தெரியு
மான்னு கொஞ்சம் கேளுங்களேன்.' வாத்தியாரின்
மனைவி கெஞ்ச ஓடிப்போய் எலக்ட்ரிஷியனை அழைத்து
வந்தான். பம்புக்கு வாஷர் மாற்றி,மோட்டாருக்கு ஆயில்
மாற்றி எர்த் அடித்து மேல் தொட்டியில் தண்ணீர் குபு
குபு வென்று பொங்கியது. ரொம்ப தேங்ஸ். ரொம்ப
தேங்ஸ் என்று வீடு வளையவளைய வந்து வாழ்த்தியது.

''வாரத்துக்கு ஒரு தடவை வந்துட்டுப் போப்பா''



அடுத்த வாரம் மறுபடி வாத்தியார் வீட்டுக்குப்போய்
மோட்டார் போட்டு தண்ணீர் வருகிறதா என்று மேல்
தொட்டிக்கு போனபோது வாத்தியாரின் இரண்டாவது
மகள் சரஸ்வதி அருகேநின்ற ஒரு ஆளைக் கட்டிப்பிடித்து
முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். அவன் வந்ததும்
சாதாரணமாய் விலகி ''என்ன?'' என்று கேட்டாள்.
பம்பு தொட்டி வாட்டர் என்று சின்னபாண்டி உளறி
னான். வேர்த்துப் போய் இருந்தான்.

''நடராஜன் தண்ணி வருதான்னு பாருங்களேன்''
முத்தம் கொடுத்த ஆளை சரஸ்வதி ஏவினாள்.

அவன் ஏணிபோட்டு எட்டி பார்த்துவிட்டு 'வரு
றெது' என்று சொன்னான்.

''நல்லா வருதா, மெலிசா வருதா?''

''சுமாரா வருது'' அந்த ஆள் பதில் சொன்னான்.

''இருங்க நான் பார்க்கிறேன்.'' அவள் புடவையை
சொருகிக் கொண்டு ஏணியில் ஏறினாள். வெள்ளை
வெளேர் என்கிற பாதங்கள் முயல் குட்டிகளை போல்
நகர்ந்தன.

''சின்னபாண்டி ஏணிய புடிச்சுக்கங்களேன்'' என்
றாள்.

சின்னபாண்டி ஏணி பிடித்துக் கொள்ள நடராஜன்
மேலிருந்து கை கொடுக்க தேள் மாதிரி ஏறினாள்.

''நல்லா வருது'' என்று இறங்கினாள். இறங்கும்
போது மல்லாக்க ஏணியில் சாய்ந்து மாடிப்படியில் இறங்
குவதை போல் இறங்கி சின்னபாண்டி தோளில் கை
வைத்து 'தொப்' பென்று குதித்தாள்.

சின்னபாண்டிக்கு உள்ளுக்குள் உதறிப்போட்டது
பவுடரும் வேர்வையும் கலந்த பெண் வாசனை மூக்கை
தாக்கியது.

எல்லோரையும் சுலபமாக தொடுகிறாளே இந்த பெண், இது நல்லதா என்ற கேள்வி வந்தது. வீட்டிற்கு வந்தபோதும் அந்த வாசனை]சங்கடப்படுத்தியது. அன்று கனவில் சரஸ்வதி அவன் முதுகில் உப்பு மூட்டையாய் தொங்கினாள். மேல்நிலைத் தொட்டியில் அவனோடு முங்கி குளித்தாள். மோட்டார் பம்ப் குழாய்கள் அற்று டப் டப்பென்று முன்னும் பின்னும் ஆடியது.

'தண்ணி வரலையே...தண்ணி வரலையே' சரஸ்வதி கத்தினாள்.

சரேலென்று தண்ணீர் பாய்ந்து உடல் முழுதும் அடித்தது. சின்னபாண்டி கனவு கலைந்து எழுந்து உட்கார்ந்து தலையில் அடித்துக் கொண்டான்.

மறுபடியும் அயர்ந்துபோய் படுத்தான். அவனுக்கு வெட்கமாக இருந்தது. தன் நிலையை குறித்து யாரிடம் கேட்பதென்று புரியாமல் இருந்தது. சரஸ்வதியை அந்த ஆளோடு அவன் பல இடங்களில் பார்த்தான்.

''ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா சின்ன பாண்டி? நடராஜன் பேங்க். போன் வேலை செய்யலே இன்னிக்கு எனக்கு காலேஜ் லீவ்ன்னு சொல்லிட முடியுமா?''

''காலேஜ் லீவ்னு சொன்னா போதுங்களா?''

''போதும் மத்கது அவருக்கு புரியும். மறக்காம சொல்லிட்டு வாங்க?''

''காலேஜ் லீவா. அப்ப நான் வீட்டுக்கு வந்துடரேன்னு சொல்லு'' நடராஜன் அவனுக்கு பதில் சொன்னான்.

''இதைபோய் சொல்லணுங்களா?''

''வாணாம். நீ யாருட்டையாவது சொல்லி வம்பு வந்துடும்...''



''வாத்தியாருக்கு தெரிய கூடாதுங்களா.''

''வாத்தியாருக்கு தெரியும், நல்லா பழகறோம்னு. மத்தது தெரிய நியாயமில்லை.''

''என்ன மத்தது.'' சின்னபாண்டிக்கு கேள்வி வந்தது. ஆனால் கேட்கவில்லை. ஆனால் அந்த நடராஜனை பார்த்து வினோதமாய் விழித்தான்.

''என்ன பிரதர் வாத்தியாரை நாங்க ஏமாத்தறதா நினைக்கிறீங்களா? அவரு எனக்கும் வாத்தியாரா இருந்தவருதான். அவரு மாதிரி வாத்தியாராய் கிடைக்கிறது கஷ்டம். அவரை ஏமாத்த யாராலும் முடியாது, நான் பேங்க் வேலையில் இருக்கேன். எக்ஸலண்டா இங்கிலீஷ் பேசறேன்னா அவருதான் காரணம். என்னை மாதிரி இங்கிலீஷ் லெட்டர் எழுத இந்த பேங்க்ல ஆளே கிடையாது. வாத்தியார் இங்கிலீஷ் கத்துக்குங்க எங்கியோ போயிடலாம். வாத்தியார் யார்கிட்டேயும் ஒட்ட மாட்டார்.''

''நீங்க சரஸ்வதி மேடத்தை கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா?''

''எஸ்... வாத்தியார் பர்மிஷனோட கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.

முத்தமிட வாத்தியார் பர்மிஷன் கொடுத்தாரா என்று கேட்க ஆவலா இருந்தது. ஆனால் கேட்கவில்லை

''என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள் சார்'' நடராஜன் கையை குலுக்கிவிட்டு வந்துவிட்டான்.

ஆனால் ஏனோ நடராஜனை நம்பமுடியாமல் அவனுக்கு இருந்தது. திருடன் என்று தோன்றியது.

பதினோராம் வகுப்பு பயிற்சியில், பள்ளியில் முதலாவ தாக தேறினான்.

''நீ முதல் இல்லை. சுரேஷ் தான் முதல் மார்க். கணக்கு வாத்தியார் உன் தொண்ணூத்தி ஆறை நூறா போட்டுட்டார் அவன் டோட்டலை பாத்துட்டு உனக்கு மார்க் போட்டுட்டார். ரெண்டு மார்க்ல நீ அவன பீட் பண்ணிட்டே, எடுபிடி வேலை செஞ்சு நீ மொதல் மார்க் வாங்கிட்டே'' பள்ளியில் சிலர் பேசி னார்கள்.

''கடைசி கணக்கு தப்பா போட்டு இருந்த சின்ன பாண்டி. நான் அதை அடிச்சு உன் கையெழுத்து மாதிரியே சரியா போட்டுட்டேன், அப்பாகிட்ட பேப்பர் காமிச்சி நூறு மார்க்னு சொல்லிட்டேன்.'' சரஸ்வதி கண்சிமிட்டி சொன்னாள்.

சின்னபாண்டிக்கு அவன் வெற்றி கசந்தது. அதனா லேயே முதல் மார்க் வாங்கியது பற்றி கர்வப்படாமல் இருக்க முடிந்தது.

ப்ளஸ்டூ ப்ளஸ்டூ என்று பள்ளிக்கூடத்தில் எல்லோரும் பதறினார்கள். கோடை விடுமுறையிலேயே கணக்கு, பயாலஜி, கெமிஸ்ட்ரி என்று ஆரம்பித்தார்கள். அந்த வருட ப்ளஸ்டூ ரிசல்ட் நூறு சதவிகிதம் என்று தெரியவர பள்ளியின் ஆசிரியர்கள் குதித்தார்கள்.

''எவனாவது படிக்காது போனா முட்டிய பேத்துடு வேன்'' என்று கத்த ஆரம்பித்தார்கள்.

ஆட்டம் பாட்டம் பேச்சு பாட்டு எல்லாவற்றிலும் ப்ளஸ்டூ மாணவர்களை விலக்கி வைத்தார்கள். படிபடி யென்று விரட்டினார்கள். பள்ளிக்கூடம் மறுபடியும்



திறந்த முதல் வாரம் கணக்கு வாத்தியார் வரவில்லை. பம்பாய் போயிருப்பதாக சரஸ்வதி சொன்னாள். பள்ளிக் கூடத்துக்கு கார் அனுப்பி விடியற்காலை கும்பகோணம் ஸ்டேஷனுக்கு வரச்சொன்னாள்.

மறுநாள் காலை வண்டியில் கணக்கு வாத்தியார் மூத்த மகளோடும் மூன்று வயது பேரனோடும் ஏகப்பட்ட சாமான்களோடு இறங்கினார்.

சிறிய டெம்போ பிடித்து லக்கேஜ் வண்டியிலிருந்து இரும்பு பீரோவும், ஸ்பிரிங் தொட்டிலும் மரக்கட்டிலும் இறக்கினார்கள். மகளோடு அவர் வீட்டிற்கு போக சின்னபாண்டி சாமான்களை வாரிக்கொண்டு அவர் வீட் டிற்கு வந்தான்.

வாத்தியார் வீட்டில் எல்லோரும் அழுது கொண்டி ருந்தார்கள். மூத்த பெண் தரையில் சுருண்டு படுத்துக் கொண்டாள். அந்த நடராஜன் வாத்தியார் தோளில் கையை வைத்து தேற்றிக் கொண்டிருந்தான்.

''பீடையை போச்சுன்னு இருங்க சார். விநோதி னிக்கு நான் வேலை வாங்கித் தர்றேன். எனக்கு இவங்க உறவு. இவங்க டைவர்ஸீனு வேலை வாங்கித்தர்றேன். ஒரு குழந்தைக்கு அம்மான்னு வேலை வாங்கித் தர்றேன்.''

வாத்தியார் முகம் பொத்திக் கொண்டிருந்தார். அவர் உடம்பு அழுது குலுங்குவது தெரிந்தது.

''விவாகரத்து பெரிய விஷயமில்லை சார். இப்போ ரொம்ப சகஜம்.''

''ஒரு பொம்பளைக்கு அவள் ஒப்பினியன் சொல்ல உரிமையில்லையா. அட்டை படத்துல பொண்டாட்டி போட்டோ வந்தா அதுக்கு ஒருத்தன் சந்தேகப்படு வானா? ஆம்பளையா அவன்'' நடராஜன் சிறிக்கொண் டிருந்தான்.

சின்னபாண்டிக்கு மெல்ல மெல்ல விஷயம் புரிந்தது.

ஒரு ஆங்கில மாத பத்திரிகையில் ஆண் அடக்குமுறை
கொடுமைபற்றி வாத்தியாரின் மூத்த மகள் கடுமையாய்
பெரிய கட்டுரை எழுத அந்த வேகமான கட்டுரையை
பார்த்துவிட்டு அந்த பத்திரிகையில் அட்டையில் அவள்
படம் போட, அவள் புருஷனுக்கு அது அவமானமாக
போய்விட்டதாம். அவனை சுற்றியுள்ள ஆண்கள் அதை
கேலி செய்ய வீட்டில் மனைவியோடு வாக்குவாதம் ஏற்
பட்டதாம்.

''உன்னை யாரும் அடக்கமாட்டார்கள் எது செய்
தாலும் கேள்வி கேட்க மாட்டார்கள். நீ விடுதலையான
பெண். வா என்னோடு படுத்துக்கொள்'' என்று
மாமனார் அவளை கைபிடித்து இழுத்தாராம்.

மாமனாரை அவள் செவிட்டில் அறைய பிள்ளை
அவளை தலைமுடியை பிடித்து அடித்தானாம்.

விநோதினி இதை போலீஸில் புகார் செய்ய பம்பாய்
மாதர் சங்கங்கள் ஒன்று சேர்ந்து அவளை விவாகரத்து
நோட்டீஸ் அனுப்பும்படி செய்துவிட்டதாம். வழக்கு
கோர்ட்டில் இருக்க கும்பகோணம் வந்துவிட்டாளாம்.

விநோதினி பிள்ளையோடு பெட்டி படுக்கையோடு
ஆறு காப்பி ஆங்கில மாத பத்திரிகையோடு பிறந்த
வீட்டிற்கு வந்து விட்டாள்.

''இது அற்புதமான கட்டுரை விநோதினி இதில்
உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் நான் மதிக்கிறேன்''
அந்த நடராஜன் அதை தலையில வைத்துக் கொண்டு
கொண்டாடினான்.

பம்பாயின் விக்டோரியா டெர்மினஸ் பின்புறம்
தெரிய மூன்று வயது குழந்தையின் கையை கையில் ஏந்தி
சிரித்தபடி அந்த அட்டை படத்தில் விநோதினி இருந்



தாள். அதை நடராஜன் தங்க கலர் ப்ரேம் செய்து
கொண்டு வந்து நடு வீட்டில் மாட்டினான். பிற்பாடு
தேவைப்படுமென்று அந்த கட்டுரையை ஜெராக்ஸ் எடுத்து
வைத்துக் கொண்டான்.

'படிச்சுப்பார்' என்று சின்ன பாண்டிக்கும் ஒருகாப்பி
கொடுத்தான்.

மனைவி என்பவள் போக பொருள் அல்ல என்று
அந்த கட்டுரை ஆரம்பித்து இருந்தது.

அத்தையிடம் அதை படிக்க ''அப்படியானால் வேறு
எது போக பொருள்?'' என்று அத்தை உடனே கேள்வி
கேட்டாள்.

''புருஷன் தன்னை போகப் பொருளாய் நினைக்கக்
கூடாது என்று மனைவி சொல்லலாமா?'' என்று கேள்வி
கேட்டாள்.

சின்னபாண்டி அத்தையையே பார்த்துக் கொண்டி
ருந்தான்.

எதெல்லாம் போகப் பொருள் என்று கேள்வி
கேட்டாள்.

சங்கீதம் போகப் பொருள், கேட்கிறபோது போகப்
பொருள், விடிய விடிய நாதஸ்வரம் கேட்ட பிறகு
தோடியும் . மோகனமும் கல்யாணியும் கேட்டபிறகு
வாத்தியம் வாசிச்சவனை எட்டி உதைச்சுபார்த்திருக்கியா?
எழுந்து போடா போதும்னு சொல்ல கேட்டிருக்கியா?
எழுந்து வந்து கை கொடுத்து கண்ணுல ஒத்திக்குவாங்க
சால்வை போத்துவாங்க பதக்கம் குடுப்பாங்க தோடா
போடுவாங்க அடுத்த கச்சேரி எங்க எப்போன்னு
கேட்பாங்க.

''மனசு ஒருமுகப்பட்டு வாசிச்சா கேட்கிற மனசு
தானா ஒருமுகப்படும் ஐயோ நான் நாதஸ்வரக்காரன்
தானேனு அப்ப இழிவா யாராவது நினைப்பாங்களா?

புருஷனுக்கு போகம் கொடுக்கறது கேவலமா? என்ன கட்டுரை இது சின்ன பாண்டி ஆரம்பமே சரியில்லை.'' அத்தை முகவாயில் கையை வைத்து ஆழ யோசித்துக் கொண்டிருந்தாள் சின்னபாண்டி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மொத்த கட்டுரையும் முழுவதும் படிக்கச் சொன்னாள்.

''அடுத்தவாரம் வா பதில் சொல்றேன்'' என்று கவலையானாள்.

அத்தை அந்த கட்டுரைக்கு எப்படி மறுப்பு சொல்லுவாள். சின்னப்பாண்டி அதை யோசித்தான்.

அந்த ஆங்கிலக் கட்டுரையை பலமுறை படிக்க அம் மாதிரி பல கட்டுரையை படிக்க வேண்டுமென்கிற ஆவல் அவனுக்கு ஏற்பட்டது. ஆங்கிலத்தோடு ஒரு ஸ்நேகம் வந்தது. யாரோ கோபப்பட்டு எங்கோ எதுவோ எழுத ஆங்கில ஆவல் அந்த மொழியோடு ஸ்நேகம் சின்ன பாண்டிக்கு வந்தது.

இரண்டு நாள் கழித்து சின்னபாண்டி வீட்டிற்கு அத்தை வந்தாள். சந்தானலக்ஷ்மி பெரியவள் ஆகி விட்டாள் என்று சொன்னாள். அத்தையின் முகத்தில் கவலை அப்பிக் கிடந்தது.

## 3

அட்டை ஜரிகையில் அன்னபட்சிபோல் செய்து சந்தானலக்ஷ்மியை உட்கார வைத்திருந்தார்கள். கழுத்தெல்லாம் சந்தனம் தடவியிருந்தார்கள். பட்டுப் புடவையிலும் பூ அலங்காரத்திலும் சந்தானலக்ஷ்மி மிக அன்னியமாக சின்னபாண்டிக்குத் தெரிந்தாள்.



அவள் வீட்டு சார்பாக விலையுயர்ந்த புடவையும், வெற்றிலைப் பாக்கு, பழம் பூவோடு ஒரு ஜதை தங்க ஜிமிக்கியையும் அவனையே கொடுக்கச் சொன்னார்கள்.

''இதானே...இதானே உங்க வீட்டுக்காரு'' என்று மற்ற பெண்கள் கேலி செய்ய சந்தானலக்ஷ்மி, அவனை ஆவலோடு பார்த்து விட்டு வெட்கத்துடன் தலை சாய்த்துக் கொண்டாள்.

சின்னபாண்டி மிக குழப்பமாக அவளை பார்த்தான்.

''இவளா என் மனைவி'' என்று வியப்போடு பார்த்தான்.

விருந்து சாப்பாடு சாப்பிட்டு விட்டு படிக்க வேண்டுமென்று வீட்டிற்கும் வந்துவிட்டான். கொல்லைப்புறம் உட்கார்ந்து புத்தகத்தைப் பிரித்தபோதும் மனசு ஒன்றவில்லை. அது நவராத்திரி சமயம். கும்பகோணத்துப் பெண்கள் விதவிதமாய் உடுத்திக்கொண்டு முன்னும் பின்னும் போய் கொண்டிருந்தார்கள்.

''ஜிமிக்கி மட்டும் போதுமா வளையல் வைக்கணும் குறைந்த பட்சம் ஒரு டஜன் ப்ளாஸ்டிக் வளையலாவது வைக்க வேண்டாமா'' என்று யாரோ குறை சொல்லியிருந்தார்கள்

' ஆமாண்டி ஜிமிக்கி வச்சா வளையல் வைக்கலேம்பீங்க. வளையல் வச்சா மூக்குத்தி வைக்கலேம்பீங்க. ஆலிலைத் தகடு வரைக்குமா அடிச்சுப் போட முடியும்? எங்களுக்கு மிஞ்சிதான் சீர் செஞ்சிருக்கோம்'' என்று அம்மா கத்தியது ஞாபகத்திற்கு வந்தது.

தன் அன்பளிப்பாய் தன்முறைப்பெண் மனுஷியானதற்கு தன் காதல் பரிசாய் தனக்கு கிடைத்த மூவாயிர ரூபாய் காசிலிருந்து வளையல் வாங்க ஆசைபட்டான். கடைக்குப் போய் கவரிங் வளையல்கள் விலை கேட்டான்

வெள்ளியில் செய்து தங்கம் தோய்த்த வளையல்கள் பளபளக்கும் டிசைனாய் முன்னூறு ரூபாய்க்கு வாங்கினான். விருந்து விழாவெல்லாம் ஓயட்டுமென்று பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

கணக்கு வாத்தியார் வக்கீலிடம் போய் இருந்தார். குழந்தை தூளியில் ஆடிக் கொண்டிருந்தாள். வாத்தியாரின் மூத்தப்பெண் விநோதினி தலை சீவிக்கொண்டிருந்தாள். தானே கையுயர்த்தி நிலைக்கண்ணாடி முன் தலை பின்னல் போட்டுக் கொண்டிருந்தாள். அவள் இடுப்பும், மார்பும் சின்ன பாண்டியனின் கண்களைப் பிடுங்கின. இத்தனை அழகு பெண்பிள்ளையை வேண்டாமென்று ஒருவன் எப்படி புறக்கணிக்க முடியும் என்று வியப்பு வந்தது. அழகுக்கு அப்பால் அவளிடம் ஒரு கெட்டிகாரத்தனமிருந்தது.

''சின்னபாண்டி எங்ககூட கடைக்கு வர்றீயா. கும்பகோணம் கடை மறந்தே போச்சு எனக்கு.''

அவள் அழைப்பை மறுக்க முடியாமல் போயிற்று. அழைப்பை ஏற்கிற போதே படிப்பு பாழாகிறதே என்கிற எண்ணமும் வந்தது.

அவன் போன அதே வளையல் கடைக்கு விநோதினியும் போனாள். ஆயிரத்து சொச்சம் ரூபாய்க்கு வாங்கினாள். கடைக்காரன் சின்னபாண்டியை நன்றியுடன் பார்த்தான்.

''கொஞ்ச நேரம் முன்னாடி வளையல் வாங்கிட்டு போனீங்க இல்லே. இவங்களுக்குத்தானா'' என்றான்.

''இல்லிங்க. அது எங்க அத்தைப் பொண்ணுக்கு. அது ஏஜுக்கு வந்துடிச்சு. என் பிரஸன்டேஷனா வாங்கினேன்.''

கடைக்காரர் முகத்தில் மெல்லிய சிரிப்பு படர்ந்தது.



''இந்தா இதையும் உன் ப்ரஸண்டேஷனா கொடு'' என்று இருபது ரூபாய் முத்துதோடு தூக்கிப் போட்டார். நல்ல கஸ்டமரை கூட்டி வந்ததற்கு பரிசு என்றார், விநோதனி விளையாட்டு பொம்மைகள் முன்னூறு ரூபாய்க்கு வாங்கினாள்.

நடராஜன் பாங்க் எங்கே இருக்கு என்று வெளியில் வந்தவுடன் ஆவலாய் கேட்டாள். சின்னபாண்டி வழி காட்ட வங்கிக்குள் நுழைந்தாள்.

அவள் வருகைக்கு நடராஜன் பரபரத்தான். மிகப் பெரிய தொகையை அவள் அந்த வங்கிக்கு மாற்றப் போகிறாள் என்கிற பரபரப்பு தெரிந்தது. நடராஜனுக்கு அவள் வருகையால் அங்கு அவனுக்கு மதிப்புக் கூடியது தெரிந்தது. அந்த மதிப்புக்கு அவள் அழகு காரணமா, பணம் காரணமா இல்லை இரண்டுமா என்கிற சந்தேகம் வந்தது.

ரொம்ப ரகஸியமாய் அவள் நெருங்கி குனிந்து நடராஜனுடன் பேசுவதை வங்கியில் உள்ளவர்கள் பொறாமையுடன் பார்த்தார்கள்.

சின்னபாண்டிக்கும் பொறாமை இருந்தது. அந்த பொறாமையால் அந்த ஆத்திரம் நடராஜன் மீது எந்த காரணமுமின்றி ஒரு துவேஷத்தைக் கொடுத்தது.

அதே சமயம் நடராஜனைப் போல் விநோதினியிடம் நெருக்கமாக பழக தன்னால் முடியாது என்று தோன்றியது பைகளை தூக்கிக் கொண்டு பின்னால் ஓடும் ஒரு வேலைக்காரனாக இருக்க முடியுமே தவிர, வங்கியின் வராண்டாவில் காத்திருக்க முடியுமே தவிர ஒரு முதிர்ந்த பெண்ணோடு பேச அவனுக்குத் தெரியாது. வங்கியைப் பற்றியோ வாழ்க்கையைப் பற்றியோ அபிப்பிராயம் சொல்ல முடியாது படிப்பைத் தவிர வேறு எதுவும் தெரியாமலேயே வளர்ந்து விட்டோம். தெரிந்து கொள்ள

வேண்டும். பெண்களிடம் பேசி சிரித்தாவது நிறைய விஷயங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

பெரிய படிப்பு படித்து பெரியமீசை வளர்த்து எது பற்றிக் கேட்டாலும் ஆழ யோசித்து பதில் சொல்ல வேண்டும்.

வீட்டிற்கு போனதும் உள்ளே களைப்பாய் உட்கார்ந்திருந்த கணக்கு வாத்தியாரிடம் நடராஜனை பற்றி விநோதினி மிகுவாய் புகழ்ந்தாள், கணக்கு வாத்தியாரும் சின்னபாண்டியும் மேல் மாடிக்கு போனார்கள்.

மெட்ராஸில் இருந்து வந்த ஒரு மாடல் பேப்பரை எடுத்து சில கணக்குகளை வாத்தியார் போடச் சொன்னார். அவன் போடுவதை அருகிலிருந்து பார்த்தார்.

''ரொம்ப டைம் வேஸ்ட் பண்றே சின்னபாண்டி. கணக்கு சரியா போட்டா போதாது. வேகமாக போடணும்.''

ஒரு கணக்கை அவரே வேகமாக போட்டுக் காட்டினார்.

''காலையில குளிச்சியா பாண்டி'' திடீரென்று கேட்டார்.

''குளிச்சேன் சார்''

''சாயந்திரம் குளி''

''ஏன் சார்''

''பாடி ஸ்மெல் வருது இதுவரக்கூடாது. சாயந்திரம் பச்ச தண்ணீர்ல குளி. கனவு இல்லாம தூங்கலாம்.''

''சில சமயம் மோசமான கனவு வருது சார்.''

''மூஞ்சியிலே தெரியுது தூக்கம் கண்ண சுத்தற வரைக்கும் படுக்கைக்குப் போகாத. படுத்த ரெண்டு



நிமிஷத்துல தூங்கணும். அதுவரைக்கும் படி. இல்லை நட.''

''சரி சார் ''

''சின்னப்பாண்டி சக்திவிரயம் உடல் சோர்வைக் கொடுக்கும். உடல் சோர்வு புத்தியின் தீவிரத்தைப் பாதிக்கும். புத்தி தீவிரமாக இல்லாது போனால் விழித்து கொண்டே கனவு காணும் சுகத்தில் நாட்டம் ஏற்படும். அப்படி கனவு காண்பவனுக்கு பார்ப்பதை, கேட்பதை முழுவதுமாக கிரகித்துக் கொள்ள முடியாது. கிரகிப்புத் தன்மை குறைந்தால் எங்கும் எதிலும் தோல்வி நிச்சயம். தோல்வி மறுபடியும் கனவுதான் கொடுக்கும் தொடர்ந்து பகல் கனவு காண உணவு செரிமானத்தைப் பாதிக்கும். உணவு குறைய உடல் பலவீனமாகும் உடல் பலவீனத்தால் மனசு கிலேசமடையும். மனமும் உடம்பும் ஒன்றோடு ஒன்று பின்னியவை.''

''மனசும் உடம்பும் ஒரே தாள கதியில் இருக்க சில பயிற்சிகள் உண்டு.''

''மனசு கண்டபடி எண்ணுவதால் தானே கனவு வருகிறது. கனவு உச்சத்தில் சக்தி விரயம் ஏற்படுகிறது. சின்னபாண்டி வெட்கப்படாமல் நான் பேசுவதைக் கேள். இது ஒருவகை விஞ்ஞானம் என்பதை புரிந்து கொள். எண்ணம் அலையாமல் இருப்பது எப்படி என்று யோசனைச் செய்.''

''மந்திரம் ஜபித்தால் என்றொரு முறை உண்டு சின்னபாண்டி. சில சொற்களை மறுபடி சொல்லுதல் நல்ல பயன்தரும். அந்த சொற்களில் ஒருவீரியம் இருப்பது உண்மையாயின் சொல்லப்படும் முறையே முக்கியம். இடைவிடாது ஒரு சொல்லையே அதனோடு ஒட்டி மனம் சொல்லிக் கொண்டிருக்க, எண்ணங்கள் அலைவது தானாய் நின்று போகும்.''

''அந்த மந்திரச் சொல்லில் மனம் ஒட்டுவதைப் போல, முழுதாய் ஈடுபடுதலை போல நம் எண்ணங்களில் முழு மனது வைக்க முடியும். இந்த கணக்கு போடும் போது கணக்கில் மட்டுமே மனம் நிற்கும். பாட்டுக் கேட்கும்போது பாட்டை முழுமையாய் அனுபவிக்க முடியும்.''

''பாட்டு பாதி, கணக்கு பாதி இவை இரண்டுக்கும் அப்பால் ஏதோ ஒரு கற்பனை மீதி மூன்றாய், நாலாய் பிரியாமல் ஒரே இடத்தில் மனம் நிற்கும்.''

''இப்படி நிற்பதற்கு ஏகாக்கிரஹம் என்று பெயர். ஏகம் என்றால் ஒன்று. ஒருமையுடன் இருத்தல் என்று இதற்கு அர்த்தம். ஒரு விஷயத்தில் மட்டுமே மனம் செலுத்துதல் என்பது ஒரு நல்ல காரியம்.

'க்லீம்' என்கிற வார்த்தை நான் சொல்வதைப் போல் சொல். மறுபடி மறுபடி சொல். க்லீம்...க்லீம்...க்லீம் என்று சொல். இந்த வார்த்தைக்கு அர்த்தமேதுமில்லை இந்த வார்த்தை சொல்ல மனதில் எந்த பயமும் வராது எந்த உருவமும் தோன்றாது. இதை இடைவிடாதுசொல்.

''உதடு அசைக்காமல் நாக்கு நகர்த்தாமல் கண்களை மூடி மனசுக்குள்ளேயே சொல். சொல்லும்போதே எங்கிருந்து இந்த வார்த்தை வருகிறது என்று பார் அந்த வார்த்தையோட இரு. அந்த வார்த்தை உற்பத்தியாகும் இடத்தை தேடு. இது சொல்வது புத்தியல்ல, தொண்டை. வேறு எங்கேயோ இந்த வார்த்தை ஆரம்பிக்கும்.''

''மார்பின் இடதுபுறம் ஹிருதயத்துக்கு அருகே எங்கோ வெகு ஆழத்தில் இது தோன்றும். தோன்றுகின்ற இடத்திலேயே இரு. முடிந்தபோதெல்லாம் இதைப் பழகு, காலை இருபது நிமிடம். மாலை இருபது நிமிடம் என்று



வரையறை வைத்துக் கொள். மற்ற நேரமும் வசதியிருப்பின் செய்.''

''எங்கே எண்ணம் உற்பத்தியாகிறதோ அந்த இடம் புரிபட்டுவிடும். தொடர்ந்த இந்த பயிற்சியினால் தெளிவாகும். எண்ணம் தோன்றுகிற இடம் புலப்பட்டு விடும் எண்ணங்கள் தோன்றுமிடம் தெரிய எண்ணத்தை பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.''

''இது நல்ல எண்ணமா கெட்ட எண்ணமா என்று பிரிக்காதே. தோன்றுகின்ற எண்ணத்தை உற்றுப் பார். உன் மனதை நீயே உற்றுப் பார்க்கிறபோது உன்மனம் வெட்கப்பட்டு சுருங்கும். மனம் செயல்படாது போகும். எதிரே நடப்பதற்கும் உனக்கும் உள்ள தொடர்பின்மை புரியும் 'எந்த வன்முறையுமின்றி மனம் எதிர்ப்பட்ட விஷயத்தோடு விலகி நிற்கும்.' விருப்பு வெறுப்பு இல்லாமல் விலகி நிற்கிற மனத்தில் வரும் எண்ணம் புனிதமானது. அப்போது ஆசையிராது. எதிர்பார்புகள் இருக்காது.

''எதிலும் ஈடுபடாதே என்று உன்னை நான்சொல்லவில்லை சின்னபாண்டி. உலகத்தில் எல்லாக் காரியங்களிலும் ஈடுபடு. ஈடுபடுகிற போதே விலகி இரு.''

''ஈடுபடுகிற போதே ஈடுபடுகிற மனதை உற்றுப்பார். இப்படி உற்றுப் பார்க்கத்தான் 'க்லீம்' என்று திரும்ப திரும்ப சொல்கிற பயிற்சி.''

''கற்பனைக்கு மனம்போகிற போதே இது என்ன என்று அதை உற்றுப் பார்க்க கற்பனை சட்டென்று அறுந்துவிடும். எதிரே இருப்பது மட்டும் தெரியும்.''

''இதைப் பற்றி வார்த்தைகளால் இவ்வளவுதான் சொல்ல முடியும் சின்னபாண்டி. இது வார்த்தைகளை தாண்டியுள்ள விஷயம்.''

''புத்தகத்தை படித்து நீச்சல் கற்றுக் கொள்ள முடியுமா? வாயால் சொல்லக் கேட்டால் இந்த வித்தை வந்து விடுமா.''

''குதி நீரில் குதி, கையும், காலையும் வீசிப்போடு. முதலில் மூச்சு திணறும். குறக்களி வாங்கும். செத்து போய் விடுவோமே என்கிற பயம் வரும். பயிற்சியின்மையாலும், பயத்தாலும், அதிகம் குளிரும்.''

''ஏதோ ஒரு நேரம், ஒரு வினாடி நீச்சல் புரிந்து விடும். எந்த வினாடியில் நீச்சல் கற்றுக் கொண்டாய் அது உனக்கே புரியாது. எப்படி அது நிகழ்ந்தது. உன்னால் அறிய முடியாது. நீரில் தவிக்க தவிக்கத்தான் நீச்சல் புரிந்து விடும்.''

''ரொம்ப குளிர்கிறது என்று கரையேறாதே. பயமாக இருக்கிறது என்று நிறுத்தி விடாதே. எப்படியும் நீச்சல் தெரிந்தாக வேண்டுமென்று ஒரே குறிக்கோளுடன் நீச்சல் அடிக்க விரும்புவாய் அல்லவா. அதேபோல் தியானத்தையும் விரும்பு. இடைவிடாது நடுவே சில நாட்கள் பழகாது. போகாதே. கற்றுக் கொள்ளும் முன் நீண்ட நாட்கள் இடைவெளி விட்டால் மறுபடியும் ஸீரோவிலிருந்து துவங்க வேண்டும். இது வீண்வேலை'

''எல்லா பயிற்சியும் கடினம்தான்...மனதை அடக்கும் பயிற்சி மற்ற எல்லாவற்றையும் விட மிகக் கடினமானது நீச்சல் ஒரு உதாரணத்துக்கு சொல்லப்பட்டது. நீச்சலை விட கடினமான பயிற்சி இது.''

''எப்போதுமே எதாவது எண்ணிக் கொண்டிருக்கும் மனதை பதினெட்டு வயது வரை அப்படியே பழக்கப்பட்ட மனதை அடக்குவது எளிதில்லை. முனைப்பு அதிகம் தேவை. இது வேஸ்ட் என்கிற எண்ணம் நிச்சயம் வரும். தேவையில்லை என்கிற அலட்சியம் வரும்.''



''ஒருமுகப்பட கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்கிற ஒரே கிறிக்கோளுடன் இரு.''

''சம்மணம் கட்டி நேராக உட்கார். கழுத்து, தலை, முதுகு, இடுப்பு நேர்க்கோட்டில் இருக்கட்டும் ''

''தலை நேராக இருந்தால், எண்ணங்கள் தெளிவாக இருக்கும். குனிந்த தலையுடன் யோசிப்பவனுக்கு குறுக்கு வழிகள் தோன்றும்.''

''கன்னத்தில் கை வைக்காதே, சின்னபாண்டி முகவாயை உள்ளங்கையில் தாங்கி உட்காராதே.''

''கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கையை வைக்காதே என்று சொல்கிற பழமொழி உண்டு. தன்னைப் பற்றி தாழ்வு மனப்பான்மை இருப்பவன்தான் கன்னத்தில் கையை வைப்பான். முகவாய் நாடியை தாங்கி யோசிப்பான் தன்னை யாராவது தாங்க மாட்டார்களா தன்னை யாராவது தூக்கி நிறுத்த மாட்டார்களா, தன்னால் தனியாக நிற்க முடியுமா? என்கிற குழப்பவாதி தான் அப்படி போஸ் குடுப்பான்.''

''உணர்வுகளில் பிறரைச் சார்ந்து இருப்பவனுக்கு உருப்படியாய் காரியம் செய்ய முடியாது. கண்ணா பின்னாவென்று காம்பர்மைஸ் செய்து கொள்வான் அப்படி ஒத்து போகிறோமே என்று உள்ளுக்குள் வருத்தப் படுவான். அவனுடைய எண்ணங்கள் பிறருடைய எண்ணத்தைச் சார்ந்தே இருக்கும். ஆமோதிப்பதும், மறுப்பதும் பிறரை வைத்தே நடைபெறும். உண்மை எது? உயர்வு எது? என்று கடைசிவரை தெரியாது போகும்.

''துணை நின்றவர்கள் விலகிவிட்டால் வாழ்க்கை குழப்பமாகிவிடும். துணையோடுதான் காரியம் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏற்பட்டால் தன் வெற்றி தனக்கு ருசிக்காது போகும். தன் தோல்விக்கு பிறரைக் காரணம் சொல்லும் பதட்டம் வரும்.''

''மனதை உற்றுப் பார்ப்பவனுக்கு உடம்பும் அமைதியாக இருக்கும். நிற்றல் பார்த்தல், கேட்டல் ருசித்தல் எல்லாவற்றிலும் நிதானம்வரும் கண்ணில் ஒளி மிகுதியாகும். முகத்தில் கனிவு ஏற்படும் கண் ஓரத்தில் அழகிய சுருக்கங்கள் தோன்றும். கன்னமேடு பளபளப்பாகும். சுவாசத்தை உணர்ந்து கொண்டே இருப்பதால் மூக்கு விரைப்பாகும் ஆழ்ந்த மனத்தோட இருப்பதால் நெற்றியில் விபூதி கீற்றுப்போல் நீண்ட கோடுகள் தோன்றும் புத்திக்கூர்மையுடன் இருப்பதால் முடிகொட்டாது நடையில் விரைவு இருக்கும். நெடுநேரம் நிற்க முடியும். படுத்தவுடன் தூங்க முடியும். விருட்டென்று எழுந்திருக்க முடியும். தோல் மென்மையாகும். உள்ளங்கை மிருதுவாகும். சிவப்பு தோன்றும் குரலில் கார்வை கூடும். பிசிறு தட்டாது தாழ்குரலில் பேசமாட்டான் குரல் உயர்த்தியும் கத்த மாட்டான்.''

மனசும் உடம்பும் பின்னிப் பிணைந்தது சின்ன பாண்டி. ஆனால இதற்கு உடம்பு உறுதியானால் மனசு தெளிவாகும் என்று அர்த்தம் இல்லை. உடம்பை பேணிக் காத்தால் மனசு சுத்தமாகும் என்று சொல்வதற்கில்லை. இது வண்டிக்குப் பின்னால் குதிரையை பூட்டும் காரியம்.

''இழுத்துப் போகும் குதிரையை முன்னே நிறுத்தி குதிரைக்கு பின்னால்தான் வண்டியை பூட்ட வேண்டும். மனசு குதிரையில் உடம்பு என்கிற வண்டியை மாட்டு பயணம் சுகமாக இருக்கும்.''

சின்னபாண்டி, நான் சொன்னதை திரும்ப திரும்ப யோசித்து பார். நான் சொன்ன வழியில் பாடுபட துவங்கு. தடைகளை தாண்டிப் போ. இதற்கு மேல் சொல்லித்தர எதுவும் இல்லை சின்னபாண்டி.''

''இதுதான் விஷயம். இவ்வளவுதான் பேச்சு. இனி செய்யத் துவங்கு. இந்த வேலையில் வேறு யாரும் உனக்கு உதவமுடியாது. உன் மனசு பற்றி உன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.''



''நீயே போட்ட முடிச்சுக்களை நீயேதான் அவிழ்க்க வேண்டும்.''

''உன் காமம் எத்தகையது? உன் குரோதம் எதைப் பற்றி? உன் ஆசையின் அளவென்ன? உன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. நீ சொன்னாலும் புரியாது.''

''உன்மீது உன்னைப்போல் அக்கறை உள்ளவர்கள் எவருமில்லை, சின்னபாண்டி.''

''உன் துக்கத்தை எவரிடமும் சொல்லாதே. பாதி பேருக்கு அது சந்தோஷம். மீதி பேருக்கு உன் துக்கம் பற்றி அக்கறை இல்லை.''

''நீ உன்னை அறிய முயற்சி செய். உன் காரியம் தானாய் நடக்கும்.''

ஓீத்தழலை வெறித்துப் பார்ப்பது போல் சின்ன பாண்டி கணக்கு வாத்தியாரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த வியப்பில் அவனுக்கு மனம் நெகிழ்ந்தது. அந்த வியப்பில் கண்ணீல் நீர் துளித்தது. கன்னம் வழிந்தது. 'ஐயா' என்று விம்மி சின்னபாண்டி கை கூப்பினான். கணக்கு வாத்தியார் சின்ன ணான். தன் வலதுகை எடுத்து கணக்கு வாத்தியார் சின்ன பாண்டியின் உச்சந்தலையில் வைத்தார். மகிழ்ச்சியோடும், அன்போடும் அவனைப் பார்த்து சிரித்தார்.

அந்த கணக்கு வாத்தியார் சின்னபாண்டிக்கு ஒரு யோகி போல் தோற்றம் அளித்தார்.

பிசுபிசுத்தக் கண்கள் நீரால் சுத்தமாக்கப்பட்டது
போல் ஒரு தெளிவை சின்னபாண்டி மனதில் உணர்ந்
தான்.

அன்று மாலையை குளித்துவிட்டு கண்மூடி உட்
கார்ந்தான். தலை, கழுத்து, முதுகு இடுப்பு நேராக வைத்து
அமர்ந்தான். க்லீம்...க்லீம்...க்லீம்...என்று உதடு அசை
யாமல் மெல்ல சொல்ல ஆரம்பித்தான்.

முதுகு வலித்தது. கழுத்து கனத்தது பழக்கமின்மை
யால் கால்கள் மரத்துப் போயின. போதும் என்கிற
அயர்ச்சி வந்தது. மனசு முன்னைவிட அதிகமாக கற்பனை
யில் ஈடுபட்டது குதிரை வசப்படாமல் நாலா புறமும்
ஓடிற்று. ஓடட்டும் என்று ஓடும் குதிரையையே பார்த்துக்
கொண்டிருந்தான். ஓடி ஓடி களைத்த குதிரை தானே
நின்றது அவன் வசப்பட்டது.

தூக்கம் குறைந்தது. தூங்கினது எப்போது. விழித்
தது எப்போது என்று தெரியாமல் போயிற்று கணக்கு
போடும் போது காது கேட்காது போயிற்று காது
கொடுத்து கேட்கும்போது கண்கள் மூடிக்கொண்டன,
உற்று எவரை பார்த்தாலும் ஒட்டாமல் பார்க்க
முடிந்தது.

உலகம் முழுவதையும் உவப்புடன் வேடிக்கை பார்க்க
முடிந்தது.

விநோதினியும், நடராஜனும் பேசிக் கொண்டே
இருந்தார்கள். சேல்ஸ் மார்க்கெட் பிளாஸ்டிக் இன்
டஸ்ட்ரீ பித்தளைத்தகடு வியாபாரம் எனறெல்லாம் திட்
டம் போட்டுக் கொண்டு இருந்தார்கள். வியாபாரம்
மட்டுமே பேசுவதாக நடிக்கிறார்கள் என்று தெரிந்தது.

''யாரு சின்ன பாண்டியா? காலிங்பெல் சத்தம் கேட்
டப்பவே நினைச்சேன் நீதான்னு. நடராஜன் பெல்
அழுத்தினா வேறமாதிரி சத்தம். நீ அழுத்தினா வேற



மாதிரி சத்தம்.'' விநோதினி நிறைய பேசினாள்.
எல்லோரிடமும் அன்பு இருப்பதைப்போல் நடித்தாள்.

கணக்கு வாத்தியாரின் மோர் பாட்டில் உடைந்து
விட்டது. அவர் சைக்கிளை வாங்கி வேறு மோர் எடுத்து
வர அவர் வீட்டிற்கு சின்னபாண்டி போனான். கதவில்
கையை வைத்தான் திறந்து கொண்டது. சமையல் அறை
யில் யாருமில்லை. மாடிக்குப் போனான். நடராஜனும்
விநோதினியும் அருகருகே படுத்து தூங்கிக் கொண்டிருந்
தார்கள். நடராஜனும் வாத்தியார் லுங்கியை உடுத்திக்
கொண்டிருந்தான். விநோதினி மிக மோசமாக கலைந்
திருந்தாள். குழந்தை தூளியில் இருந்து மூத்திரம் வழிந்து
வட்டமாய் தங்கிக் கிடந்தது.

சின்னபாண்டி கவலையுடன் கீழிறங்கிப் போனான்.
கதவு சாத்திக் கொண்டு தன் வீட்டுக்கு மோர் எடுத்து
வரலாம் என்று சைக்கிளில் ஏறினான். வாத்தியாரின்
இரண்டாவது பெண் சரஸ்வதி எதிர்ப்பட்டாள்.

என்ன வேண்டுமென்று கேட்டாள்.

மோர் என்று பதில் சொன்னான். கதவு திறந்து
சமையல் அறைக்குப் போனாள்.

''மோர் பாத்திரம் காலியா இருக்கே, மூடி வேற
போடலே பூனை குடிச்சிருக்குமோ'' என்றாள். 'விநோ
தினி' என்று குரல் கொடுத்துக் கொண்டு மாடிக்கு
ஏறினாள்.

சின்னபாண்டி வாசலிலே காத்திருந்தான்.

''யூ பிளடி பாஸ்டர்ட்'' சரஸ்வதி கூச்சலிடுவது
தெரு முழுவதும் கேட்டது.

சின்னபாண்டி சைக்கிளில் ஏறி வீட்டிற்குப் போய்
டிபன்பாக்ஸ் நிறைய மோர் எடுத்து வந்தான். வாத்தி
யார் பிசைந்து சாப்பிடும்வரை காத்திருந்தான்.

'உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும் சார்.''

வாத்தியாரிடம் சரஸ்வதி நடராஜன் பற்றி, நடராஜன் வினோதினி பற்றி சகலமும் சொன்னான்.

வாத்தியார் தோட்டத்துப் பக்கம் போனார். மோர் சாதத்தை வநேந்தி எடுத்தார். சுவர் பிடித்து அசையாது நின்றார். வாத்தியாரின் முதுகை சின்னபாண்டி நீவிக் கொடுத்தான். கொப்பளிக்க தண்ணீர் கொடுத்தான்.

''வீட்டுக்கு போலாமா சார்'' என்று கேட்டான்.

''இன்னும் மூணு பீரியட் இருக்கே. எப்படி போக முடியும். நீ இதுல சம்மந்தப்படாதே. பாத்ததை, கேட்டதை மறந்துடு, மறக்கறதுக்கு இன்னும ஆழமா தியானம் பண்ணு. இல்லைன்னா பூப்பூத்த செடியில பூச்சி விழுந்த மாதிரி ஆயிடும் வாழ்க்கையில சிலரை பூச்சின்னு தள்ளிடணும். அடிச்சி துரத்திடணும்.''

வாத்தியார் கோபமற்று கோபப்படுகிறார் என்பது புரிந்து கொண்டான், விலகினான்.

மறுநாள் காலை வாத்தியாரின் இரண்டாவது பெண் சரஸ்வதி மாத்திரை சாப்பிட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்ந்திருப்பதாக சொன்னார்கள். வயிற்றுவலி தாங்காமல் தற்கொலை முயற்சி என்றார்கள்.

நிறைய பேர் வாத்தியாருக்கு உதவி செய்ய ஆஸ்பத்திரிக்கு ஓடினாாகள். வேடிக்கை பார்ப்பதற்கும் சில பேர் போனார்கள்.

சின்னபாண்டி அத்தையிடம் போய் விவரம் சொன்னான்.

''இதுதான் பெண் விடுதலையா. ஒரு பெண்ணை குழிபறிக்க இன்னொரு பெண்ணை ஜெயிக்கறதுதான்



போராட்டமா? விடுதலை உணர்வு சம்பந்தப்பட்டதா? புத்தி சம்பந்தப்பட்டதா? ஆளுமை இல்லாமல் ஆதிக்கம் செலுத்தாமல் இந்த உலகம் எப்போதாவது இயங்கி இருக்கிறதா?''

''அரசனை ஒழித்து விட்டால்ஆளுமை இல்லாது போய் விடுமா. மந்திரி என்று யாராவது வருவார்கள். அரசனை போல் நடந்து கொள்வார்கள், அரசனை விடவும் மோசமாக நடந்து கொள்வார்கள். அன்பாக குடித்தனம் நடத்திய ஆணும் பொண்ணும் அடித்துக் கொண்டு சிதறிய ஆணும், பெண்ணும் எப்போதும் உண்டு. நான் தோசை வார்க்கவா பிறந்து இருக்கிறேன் என்று அந்த விநோதினி கட்டுரையில் கேட்கிறது. வேண்டாம் தோசை வார்க்காதே ஆபீஸுக்கும் போ. ஆயுசு முழுக்க ஒரே வேலையை செய் தோசை. வார்ப்பதும் ஆபீஸ் வேலையும் ஒரே இழவுதான் என்று புரியும் வரை செய்.''

''ஆணுக்கும் சோதனை உண்டு. நாகரீகம் பிறந்தது முதல், யுத்தம் என்கிற விஷயத்திற்கு ஆண் போய்க் கொண்டிருக்கிறான். அவன் ஒல்லியோ குண்டோ, இளைஞனோ வயசாளியோ மரணம் நோக்கி வலிய அவன் போவது இங்கு இயல்பாய் இருக்கிறது. குத்துப் பட்டு செத்துப் போவது ஏகமாய் நிகழ்ந்திருக்கிறது. அம்மா என்கிற உயர்வை அப்பாவுக்கு உலகம் கொடுத்ததே இல்லை ''

''என்ன சொல்றீங்க அத்தை. இதனால பொம்பளைய ஆம்பளை வதைக்கலாமா? அடிச்சு உதைக்கலாமா?''

''தப்பு. பெண்ணைப் பற்றி ஆணுக்கு மிகுந்த பயமிருக்கிறது. அவள் இளக்காரம் அவள் கேலி அவனை அதிகம் பாதிக்கிறது சிகப்பெறும்பு கடித்ததுபோல் வலி அதிகமாகி மனசு வீங்கிப் போகிறது இந்த பயத்தின்

காரணமாகவே ஆளுமை செய்தலை அதிகபடுத்துகிறான். சின்னபாண்டி ஆளுமை செய்ய ஆசைப்படுபவன் ஆட்படவும் தெரிந்திருக்க வேண்டும்.

"உன்னோடு பேசுவது எனக்கு வெட்கமே இல்லை, சின்னபாண்டி. என் குடித்தன வாழ்க்கையைப் பத்தி உன்கிட்ட சொல்றேன் கேள். சந்தானலக்ஷ்மி அப்பா என் மேல சோத்து தட்டை தூக்கி வீசியிருக்காரு. பளார்னு அறைஞ்சிருக்காரு. அதுக்கு காரணம் ஏதோ ஒரு வலி ஏதோ ஒரு கோபம். அதே நேரம் என் கோபத்தையும் நான் காட்டியிருக்கேன். கூசு தூக்கி மூஞ்சியில அடிச்சிருக்கேன். தள்ளிப் போடான்னு மல்லாக்கத் தள்ளியிருக்கேன். என் கோபத்தை வெளிப்படுத்த அனுமதியுண்டு எனக்கும் கோபம் வரும்னு ஏத்திக்கிட்டது உண்டு இதை பண்ணாத ஆம்பளை தோத்துப் போறான். ஏன் செய்றான். உடம்பு கர்வம். தனக்கு வலுவு அதிகம் என்கிற திமிர் உடம்பு வலு எப்பவேணாலும் அழியும். கோபப்பட, கோபப்பட நரம்பு தளரும்."

"உலகத்துல மனுஷனுக்கு உண்மையான உதவ யார். அப்படின்னு ஒரு கேள்வி."

அதுக்கு பதில் என்ன தெரியுமா. பத்தினி பொண்டாட்டிய உதவின்னு நினைச்சுட்டா கோபம் வராது.

"எது உதவின்னு கேளு. இதுக்கு பதில் என்ன தெரியுமா. பிரியத்துடன் வழி நடத்தல், எந்த வழியில் நடக்கணும்னு பத்தினி உதவி செய்யணும். வழி நடத்தறவ வேற வழிக்கு போலாமா?"

"நீ சொல்றது புரியுது அத்தை வழி நடத்த வாணாம்னு விலகிட்டான். அவள் வேற வழி நடக்கறா. இது தப்பா?"

"வேற வழி நடந்துட்ட இல்லே. இனி உனக்கு வேற ஆளை வழி நடத்த உரிமையே இல்லை. யாருக்கும் உதவி செய்ய முடியாது. நீ உதவி செய்தா சந்தேகம் வரும்."



"அப்போ பொம்பளைய விலக்கி வச்சுட்டாலும் அவன் வேற வழிப் போகக் கூடாதா?"

"போ. போய் பாரு. அந்த கூத்தை அனுபவி. எதையோ வெறுத்து எதையோ செய். நீ எதை வெறுக்கிறாயோ அதுதான் உன்னைக் கெட்டியா புடிச்சிக்கும். கடவுளை வெறுக்கிறவன் எப்பவும் கடவுள் சிந்தனையாகவே இருப்பான் காமத்தை வெறுக்கிறவன் எப்போதும் காமியாகவே இருப்பான். மனைவியை வெறுக்கிறவன் எப்போதும் மனைவி நினைப்பாகவே இருப்பான் கணவனை வெறுக்கிறவர் கணவனின் நினைவிலிருந்து தப்பிக்க முடியாது. வேறு கணவன் கிடைத்தாலும் வெறுத்த கணவனே மனசில் நிற்பான். மனசில் நிற்பது சொல்லில் வெளிப்படும். சொல்லிங் வெறுப்பைக் கண்ட புதிய புருஷன் அந்த பெண்ணைக் கண்டு கலவரப் படுவான். அவன் கலவரம் அவன் செய்கையாக வரும்.

அந்தச் செய்கை அவளுக்கு வெறுப்பைத் தரும். வெறுப்பு மட்டுமே மிஞ்சும். இது மிகப் பெரிய விஷவட்டம் சின்னபாண்டி.',

"இத்தியும் சொன்னம்பிறகு அந்த விநோதினி பாவம் தான் அத்தை."

"பாவம் தான். அறியாத தாவம் பொறுமைய தொலைச்சுட்ட பாவம். எல்லாரைவிட பாவம் அந்த கணக்கு வாத்தியார். அவரு என்ன ஆவபோவார்னு தான் எனக்குத் தெரியல."

சரஸ்வதியை டாக்டர்கள் காப்பாற்றி விட்டார்கள். அவள் மயக்கம் தெளிந்து மறுபடியும் கத்தினாள். அக்காவை நிந்தித்தாள். நடராஜனை அடித்துக் கொல்

வேன் என்றாள். வாய்விட்டு அழுதாள், ஊர் சிரித்தது. மரணத்தை தவிர மற்ற எதற்கு அழுதாலும் ஊர் சிரிக்கும்.

''யாரை நீ அழவச்சிருக்கியோ, இப்ப நீ அழுவற'' என்று விமர்சனம் செய்தது.

ஆனால் காலம் எல்லாவற்றையும் மாற்றும் சக்தி வாய்ந்தது. சரஸ்வதியின் கோபம் மெல்ல தணிந்து போனது. தங்கையை நேசித்தவனே தன்னையும் நேசித்தான் என்பது விநோதினிக்கு அதிர்ச்சியாயிருந்தது.

சரஸ்வதியைவிட விநோனியின் நிலை பரிதாபமானது விநோதினியின் ஸ்நேகிதமே தனக்குப் பிடித்தனவாக இருக்கிறது என்று நடராஜன் சொன்னான். தங்கைக்கு திருமணமாவது கடினமிலலை என்றான்.

''ஊர் சிரித்துப் போயிற்று இனி எவர் என்னை திருமணம் செய்துக் கொள்வார்'' என்று சரஸ்வதி கத்தினாள்.

''ஊர் சிரிப்பாய் சிரித்தற்கு நீதான் காரணம். உன் தற்கொலை முயற்சியே சகலருக்கும் வேதனை தந்த விஷயம்'' என்று நடராஜன் பதில் சொன்னான்.

''மணந்தால் விநோதினி இல்லையேல் மரணதேவி'' என்று சபதம் செய்தான்.

விநோதினி அவனை மறுத்தாள். சரஸ்வதி சுருண்டு சுருண்டு படுத்துக்கொண்டாள். கணக்கு வாத்தியாரின் வீடு இருளோவென்றாயிற்று.

ப்ளஸ்டூ பரிட்சைகள் நெருங்கின. முதல் தேர்வுக்கு மூன்று நாள் முன்பு கணக்கு வாத்தியார் படுக்கையிலேயே காலமானார். படுக்கப் போகும் முன் மரணதாகமா இருக்கு ஒரு டம்ளர் பால் கொடு என்று மனைவியை கேட்டிருக்கிறார்.



அக்காளும் தங்கையும் வாக்குவாதம் செய்ததில் வாத்தியாரின் மனைவி பால்தர மறுத்து விட்டாள். வாத்தியார் எப்போது மரணமடைந்தார் என்று யாருக்கும் தெரியவில்லை.

மாஸிவ் ஹார்ட் அட்டாக் என்று சொல்லப்பட்டது காட்டில் பையன்கள் சூழ்ந்திருக்க வாத்தியார் எரியூட்டப் பட்டார் வாய்க்கரிசி போட்டுவிட்டு சின்னபாண்டி 'சொல்லிக்காம போயிட்டிங்களேய்யா' என்று அழுதான் மிகவும் துவண்டுப் போனான்.

பள்ளியில் மூன்றாவதாக வந்தான். எலக்ட்ரானிக் இஞ்சினியரிங்கிற்கு இடம் கிடைத்தது. சென்னையில் இட ஒதுக்கீடாயிற்று, அத்தை காசு கட்டினாள். தலைமை ஆசிரியர் கைப்பணத்திலிருந்து தானம் கொடுத்தார். உபகாரச் சம்பளம் கிடைத்தது. வாத்தியார் மறைந்த துக்கம் அவனை அமைதியாக்கிற்று ஞானிகளுக்கும் சோதனை வருவது தெரிந்தது.

''எது மிகக் கடினமானது?''

''குடித்தனம் செய்வது?''

''சம்சாரத்திலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும்.''

''இந்த கேள்வியை இடைவிடாது கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

''ஏன் சம்சாரம் துக்கம்?''

''சுற்றியுள்ளோர் தவறுக்கும் குடும்பத் தலைவன் பொறுப்பேற்க வேண்டி இருப்பதாலே அது துக்கம்.''

லைப்ரரியில் படித்த புத்தகம் மனப்பாடம் ஆயிற்று.

''அப்போது சம்சாரம் ஏற்பது தவறா?''

விடுபடுவதற்காகவே மாற்றிக் கொள். அடைப்பட்டு கிட. கூட்டுபுழுவைப் போல் உள்ளே இரு. மாறுதல் வரும் மாறியதும் கூடு உடைத்துப் பற. கூட்டில் அடையாத புழு. புழுவாகவே இருக்கக்கூடும். பறந்துபறந்து செத்துப்போ அதுவே உத்தமம். கர்ம வாழ்க்கைக்குப் பிறகு ஞான வாழ்க்கை, உலகத்தில் கர்மத்தை செய். அதாவது உன் கடமையை செய் பலனை எதிர்பாராதே. புத்தகம் இன்னும் தெளிவூட்டிற்று.

ஆனால் வாழ்க்கை கடினமானது தெளிவு பெற்றவர்கள் தெளிவு பெறாதவர்களோடு அருகருகே வாழ்ந்துதான் ஆகவேண்டும். தெளிவு பெற்றவனுக்கு இந்த சூழ்நிலை கடினம் சகித்துக் கொண்டு தான் போக வேண்டும்.

சின்னபாண்டி எலக்ட்ரானிக் இஞ்சினியரிங் முடித்தவுடன், சந்தானலக்ஷ்மி ப்ளஸ் டூவிற்கு வந்தாள். அக்கறை இன்றி படித்தாள் சுமாரான மார்க்குதான் வாங்கினாள்.

''படிக்கறதுக்கு வசதியிருக்குடி படிச்சிடுடி'' என்று அம்மா கெஞ்சியதை அலட்சியப்படுத்தினாள்.

''எதுக்கு மாமா படிக்கணும்?'' சின்னபாண்டியை கேள்வி கேட்டாள்.

''நான் நல்லா சமைக்கிறேன் பார்க்கறதுக்கு அழகாத் தான் இருக்கேன். என்னை விட்டுக் கொடுத்துடுவியா. என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லுவியா. நீ போது மாமா எதுக்கு படிப்பு.''

அவளுக்கு தெளிவூட்ட வேண்டியது தனக்கு கடமையென்று சின்னபாண்டி நினைத்தான்.

''உன்னைச்சுத்திபார். சந்தானலக்ஷ்மி. நம்ம குடும்பங்கள்ல படிச்சவங்க கம்மியா இருக்காங்க பார். குறிப்பா பெண்கள் படிக்காம இருக்கறத பார். உங்க அம்மா



கெட்டிக்கார தனத்துக்கு அவங்க படிச்சிருந்தா பேராசிரியை ஆயிருப்பாங்க, அவங்களுக்கு படிக்க வசதி இல்லை. அவங்க படிக்க யாரும் உதவி செய்யலை.''

''தான் படிக்கலேன்கிற ஆசையால தான் அம்மா உன்னை படிக்க வைக்கறாங்க, சமையல் போதும்னு சொல்லாதே, சந்தானலஷ்மி, படிச்சிட்டு சமையல் செய் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டம்தான் குறைந்த பட்சம் பி. ஏ. படி. அது அடுத்த தலை முறைக்கு நல்லது அவங்க கேள்விக்கு நீ பதில் சொல்ல முடியும். அவங்களை இன்னும் பெரியாளாக்க முடியும். ஏன் என் வேலைக்கு உதவி செய்ய முடியும். தான் தனியா தொழில் ஆரம்பிச்சா நீ அங்க மேனேஜரா இருக்க முடியும். அப்பஇசமைக்கறதுக்கு ஆள் போட்டுக்க முடியும். சமைக்கறதுக்குத்தான் பொண்டாட்டின்னு நான் நினைக்கலை. நீயும் நினைக்க வேண்டாம்.''

''விருப்பமிருந்தா எதுவும் கஷ்டமில்லை.''

''எனக்கு விருப்பமில்லையே.''

''என்னையேன் விரும்பற சொல்லு?''

''உன்னைத் தெரியும் அதனாலத்தான்.''

''எப்படி தெரியும்?''

''பழகியிருக்கேன்.''

''படிப்போடவும் பழகு. பழகினா விருப்பம் வரும். விருப்பம் வந்தால் பழக்கம் வரும். இப்பவும் மேல படிக்கறதுக்கு அதுவும் செய்.

''நீ கத்துக்கொடு மாமா படிக்கறேன்.''

''செய்யலாம் என் புத்திய மாத்துடுவியோன்னு ஒரு பயம்.''

''எனக்குப்போயி பயப்படறேயே மாமா'' சந்தான லக்ஷ்மி சிரித்தாள்

அவளை ஆங்கிலம் சத்தம் போட்டு படிக்கச் சொன்னான், மற்ற பாடங்களை மனப்பாடம் செய்யச் சொன்னான். பக்கத்தில் உட்கார்ந்து அவளை அங்குலம் அங்குலமாக முன்னேற்றினான். 'பிரமாதம் போ' என்று பாராட்டினான்.

''நான் படிக்கலேன்னா உனக்கு புடிக்காதுன்னுதான் இத்தனை பாடுபடறேன்'' அவள் சிணுங்க கைப்பிடித்துக் கொண்டான்.

''நான் என்ன அவ்வளோ முக்கியம் லக்ஷ்மி?''

''நம்ம குடும்பத்துல உன்னை விட்டா யாரு இன்சினியரிங் படிக்கறாங்க. இஞ்சினியர் புருஷன் சந்தோஷமில்லையா. கர்வமில்லையா?''

''அப்ப எண்பது பர்ஸண்ட் எடு. அப்பதான் கல்யாணம் அதான் சீர்வரிசை. அதான் வரதட்சணை,''

''அம்மா, சின்ன பாண்டிக்கு நான் எண்பது பர்ஸண்ட் எடுத்தா போதுமாம். அண்டாவோட குண்டானோ, பீரோவோ, கட்டிலோ வேண்டாமாம்.''

சந்தானலக்ஷ்மி அத்தையிடம் சொன்னாள்.

''சரி நான் வாங்கலை. நீ வாங்கு.''

''வாங்கிட்டா கல்யாணம் தானா?''

''மார்க் வந்த மறுநாளே தாலி கட்டிடறேன் போதுமா?,'

''ஐயோ திருட்டுத்தாலியா?''

''ஊர் கூடி ஒரு லட்சம் செலவு பண்ணி கல்யாணம் செய்வேன் .''



''ஊட்டிக்கு ஹனிமுன் போவணும். வாரத்துக்கொரு சினிமா போவணும்.''

''நீ மார்க் வாங்க போறதே இல்லை லக்ஷ்மி.''

''வாங்கிக் காட்றேன் பார்.''

''இந்த கனவுவந்த பொம்பளைக்கு படிப்பு கஷ்டம்.''

''பொம்பளை பத்தி உனக்கு என்ன தெரியும்? அவள் மனசு வச்சுட்டா ஜெயிச்சு காட்டுவாள்.''

''பேசாத செய். ஆனா ஒண்ணு எழுவத்தொன் பது வாங்கினே உன்னை சிஸ்டர்ன்னு கூப்பிடுவேன்.''

''ச்சீ... அசிங்கமா பேசாத.'' சந்தானலக்ஷ்மி ஆத்தி ரத்தோடு கத்தினாள்.

''இந்த கோபத்த படிப்புலே காட்டு.''

''அம்மா சின்னபாண்டி இனிமே படிப்புச் சொல்லித் தர வர வேண்டாம். நான் டியூஷனுக்குப் போறேன்.''

''ஏண்டி?'' அம்மா வியந்தாள்.

''மாமா இருந்தா மனசு கரையுது. மனசு கரைஞ்சா படிப்பு வராது. மார்க் எடுக்க முடியாது. மார்க் வர லேன்னா மாமா எனக்கு கிடைக்கமாட்டார். சிஸ் டர்ன்னு கூப்புடுவாராம், திமிர பார்த்தியா. தான்படிச் சுட்டோங்கிற கர்வம்தானே தான் மாதிரி யாரும் வரமுடி யாதுங்கிற எண்ணம்தானே நான் வந்துக்காட்டறேன் பார்''

''இதுக்கேண்டீ அழுவற'' அம்மா வியந்தாள்.

''புருஷன் எங்கியாவது பொண்டாட்டிய சிஸ் டர்ன்னு சொல்லுவானா. ஒரு பொம்பள மனச அலட் சியப்படுத்தலாமா?''

''ரொம்ப ஒட்டாதடி''

''ஏன் ஒட்டக் கூடாது?''

'யாருக்கு யார்ன்னு தாலி கட்டற வரைக்கும் தெரியாது. தங்கச்சி தனக்கு புருஷன்னு ஒருத்தர நெனைச்சுட்டு இருந்தா... அவன அக்காகாரி வாரிட்டு போயிடலையா? விட்டுக் கொடுக்கவும் முடியாம அக்காளுக்கு ஒரு ஆள் தேவையென்று மறுக்காம அது அவதிப்படலையா. தான் செத்துபோனா எல்லா சரியாயிரும்னு ஆத்திரம் வந்ததில்லையா. மூணுபேரும் மூணு திக்கா போயிட்டாங்க. முடிவே இல்லாது போயிடுச்சு...பிரிவு தான் முடிவா போயிடிச்சு.

''மாமாவ லவ் பண்ண வாணான்றியா?''

''உள்ள வச்சுக்க. வெளிய இறைக்காதே.''

இறைச்சா என்ன ஆகும்?

''அள்ள முடியாத போய்விடும். எத்தினி பெருக்கினாலும் நடக்கறச்சே கடுகு கால்ல ஒட்டிக்கும். கால்ல ஒட்டின கடுகு அஞ்சு நாள் ஆறுநாள் பொறுக்கி, ஓரமா போடணும். கடுகும் இறையக் கூடாது. வார்த்தையும் சிதறக் கூடாது.''

''இப்பதான் புரியுது.''

''என்னடி புரியுது?''

''நீ பேராசிரியையா போயிருக்க வேண்டியவ படிக்காத போய்ட்டே''

''நீ படி போதும்''

அத்தை அழகாக சிரித்தாள்.

''ஒரு கேள்வி?''



''கேளுடி. நெஞ்ச பொங்க வளர்ந்துட்டே நீ எது கேட்டாலும் பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்.''

''உன் கெட்டிக்காரத்தனம் எங்க அப்பனுக்குத் தெரியுமா?''

அம்மாவும் பெண்ணும் பேசிக் கொள்வதை சின்னபாண்டி வியப்போடு பார்த்தான்.

''ஏன் உன்னைக் கூப்பிட்டு உங்க அப்பன் சொல்லலேன்னு என்னை கேட்கறியா?''

''யார்கிட்டேயும் சொன்னதா தெரியலையே.''

''அது இறைக்காது. ஒரு குண்டு மணியக்கூட வெளிய காட்டாது. உள்ளுக்குள்ள மூட்டை மூட்டையா வச்சிருக்கும்''

உள்ள ஒளிச்சு வச்சுக்குவானேன் லவ்வுன்னா மனச விட்டு பாராட்ட வேண்டாமா?''

''வார்த்தையிலே சொல்லி மாளுமா? சின்னபாண்டி உனக்கு உதவி பணம் மூவாயிரத்துல முன்னூறு ருபாய்க்கு கவரிங் வளையல் வாங்கி வந்தானே அதான் லவ்வுயாரோ சொல்ல இந்த புள்ளைக்கு இடிச்சுதுபார் சபையில் காட்டி அலட்டாத சாயந்திரமா மேஜையில் வச்சுட்டு போனாம் பாரு அதான் பெரிசு.''

''சின்னபாண்டி டக்குன்னு எப்படி கெட்டிக்காரனாச்சு?''

''அது உங்க அம்மா கொடுத்த பிச்சை. எங்க அத்தை சொல்லிக் கொடுத்த பாடம்.''

''அப்போ உனக்கு பொண்டாட்டில விட மாமியா தான் முக்கியம். அவங்க மேலதான் லவ்வு அப்படித் தானே?''

''மதிக்கறதுக்கு பேருதாள் லவ்வுன்னா ஐலவ் மை அத்தை.''

''என்னை நீ மதிக்கும்படியா நான் நடந்துக்கணும்னு கிறியா.''

'கரெக்ட்டு' அத்தை கைதட்டிப் பேசினாள்.

''மதிப்பு கேட்காதே வளர்த்துக்கோ. புத்தி பூவா பூத்தா வண்டு தானா வரும்.''

''இப்ப செருப்பால அடிச்ச மாதிரி பேசு. இதை எனக்கு முன்னே சொல்லித் தரதுக்கு என்னா?''

தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப் படும்'' சின்னபாண்டி குரல் கொடுத்தான.

''கேட்காதவனுக்கு எது கொடுத்தாலும் ஏன் கொடுக் கறாங்கன்னு சந்தேகப்படுவான். இது நிஜமா பொய் யான்னு ஆராய்ச்சி பண்ணுவான். எனக்கு வாணாம் போன்னு தரையில போட்டுட்டு போனாலும் போவான்.'

''எல்லாவற்றிற்கும் ஒரு நேரம் வரவேண்டும். புத்தி விழித்துக்கொள்ள காலத்தின் கனவு அவசியம்.''

''எண்பது பர்ஸண்ட் நான் வாங்கிக் காட்றேன் பார்.'' புத்தகமூட்டையை தூக்கிக் கொண்டு நன்றாக படிக்கிற சினேகிதி வீட்டிற்கு சந்தானலக்ஷ்மி போனாள்

''என்னா அத்தை தடால்ன்னு பொண்ணு புரண்டு டுச்சு,'' சின்னபாண்டியன் வியப்போடு கேட்டான்.

''நல்லது கெட்டது ரெண்டுமே தடால்தான். தற்கொலை பண்ணிக்கிறது தடால்ன்ற மாதிரி நல்லா படிக்கிற மாணவி தடால்தான். ஆத்துல பொண்ணு இறங்கிடுச்சு. இனி எதிர் நீச்சல் போடணும் அதான் கவலை.''



''நான் என்னா உதவி செய்யணும் அத்தை?''

''அவளுக்கா? நீயா? வராத இரு போதும். வந்தா கலையலாம். கரையில இருக்கறவங்க உற்று பார்க் கிறாங்களேன்னு தண்ணீல நீந்துறவ திரும்பி பார்க்க லாமா? திரும்பினா தடம் மாறும். ஒரே குறியாய் போகட்டும். அவளை விட்டுடு...''

''இன்னிக்கு உன் பொண்ணுமேல ரொம்ப லவ் வந்துடுச்சி அத்தே. கட்டிப் புடுச்சி உன் எதிர்க்கயே முத்தம் கொடுக்கணும்னு தோணிச்சு.''

''எப்பா...எப்பா கடவுளே செய்யாத நின்னியே அது சந்தோஷம்''

''ஏன் அத்தை?''

''கட்டிப்புடிச்சதோடு நின்னுடும். படிப்பு மும்முரம் பாழாயிடும்.''

''சந்தோஷமாயிடுச்சு அத்தை''

சந்தோஷத்த சாதாரணமா சொல். சந்தனத்த விரலால தொட்டு கழுத்துல தடவிக்கறதுதான் நல்லது அள்ளி சேறு மாதிரி அப்பிக்கிட்டம்னா அனாவசியமான இடத்துலெல்லாம் தடவிக்கிட்டம்னா அனாவசிய சந்தனத்துக்கு மதிப்பில்லாம போவும்.''

''துக்கத்தை வெளியே சொல்லாதேன்னு வாத்தியார் சொன்னாரு. சந்தோஷத்தையும் சொல்லக்கூடாதுங் கிறியா?''

''செய்கை சொல்லைவிடவலுவானது சின்னபாண்டி. உண்மையான அன்பு சொல்லாது செய்யும். அன்பு சொல் இல்லை. செய்கை. இப்போ உன் செய்கை என்ன?''

சின்னபாண்டி சிரித்தான். ''ஒரு டம்ளர் மோர் கொடு'' என்றான். குடித்துவிட்டு 'வரேன்' என்று சொல்லி போனான்.

தஞ்சாவூர் மாவட்டத்துக்கு ஒரு பணக்காரரோடு சேர்ந்து எலக்ட்ரானிக் பொருட்களுக்கு ஏஜென்ஸி எடுத்தான். ஊர் ஊராய் விற்பனைக்கு அலைந்தான்.

ப்ளஸ் டூ பரிட்சையின்போது சந்தானலக்ஷ்மி நினைவாகவே புரண்டு புரண்டு படுத்தான்.

பரிட்சை முடிந்ததும் கடைக்கு வருவாள் என்று நினைத்தான். இரண்டு நாள் காத்திருந்து அவள் வராது போகவே அத்தை வீட்டிற்கு அவளை தேடிப் போனான்.

''தொன்னூறு பர்ஸண்ட் வரும்'' என்று அவள் சொன்னாள்.

''மேற்கொண்டு என்ன பண்ணப் போற?''

''எங்க கிளாஸ்ல எல்லாரும் மெடிக்கல் எண்ட்ரன்ஸ் எழுதப்போகிறோம். ப்ளஸ் டூவ் விட அது கஷ்டமாம் கணக்கு புரிஞ்சு போட்டாதான் பாஸ் பண்ண முடியுமாம் அங்கேயும். தொன்னூறு எடுத்தா நிச்சயம் மெடிக்கல் சீட் கிடைக்குமாம்.''

''அப்ப கல்யாணம்?''

''படிச்சுட்டு பண்ணிக்கலாம் மாமா.''

''என்ன படிப்பு?''

''கெடைச்சா டாக்டருக்கு படிக்கறது. இல்லையா பி.எஸ்.சி. கணக்கு கெமிஸ்ட்ரி எதுனா படிக்கறது.''

''மார்க் வந்த மறுநாள் தாலிகட்ட வேண்டாமா?''

''ஒரு லட்சம் செலவு பண்ணி ஓஹோன்னு கட்டணும் படிப்புக்கும் செலவாகும். அம்மா படிப்புக்கு செலவழிக்குமா, கல்யாணத்துக்கு செலவழிக்குமா எனக்கு புரியலை.''



''மேல படி, லக்ஷ்மி.''

''எனக்கும் ஆசை வந்துடிச்சு மாமா.''

''என் மேல ஆசைவிட்டு போயிடிச்சோ''

''ச்சே...என்ன பேச்சு இது? கண்ணைக்கீறி தொறந்துட்டாமாதிரி என்னை படிப்புல திருப்பி விட்டியே உன்னை மறப்பேனா. தூண்டிவிட்டு உபயோகபடுத்தாத போனியே உன்னை நினைக்காத இருக்க முடியுமா'' சந்தானலக்ஷ்மி நெருங்கி வந்து அவன் உதட்டில் முத்தமிட்டாள். அவன் கையை கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

''அம்மா பட்டு புடவை வாங்கிக்கடின்னு ஆயிர ரூபா கொடுத்துச்சு. ஏழு நூறு ரூபாய்க்கு ரெண்டு புடவை வாங்கிட்டு முன்னூறு ரூபாய்க்கு உனக்கொரு ப்ரிஃப்கேஸ் வாங்கினேன். உள்ளுக்குள்ள சந்தானலக்ஷமின்னு எம் பேரை ஸ்டிக்கரா ஒட்டியிருக்கேன்.''

''எனக்கேன் அது?'' அவன் நெகிழ்ந்த குரலில் பேசினான்.

''என் அன்பு'' அவள் பதில் சொன்னாள்.

''அப்போ டாக்டருக்கு படிக்கபோறே.''

''கிடைச்சா படிப்பேன். என்ட்ரன்ஸ் எக்ஸாம் நினைச்சா பயமா இருக்கு'' அவள் கவலையோடு பேசினாள்.

அந்த கவலை அவனுக்கு பிடித்துப் போனது.

''மாமா''

''என்ன?''

''டாக்டருக்கு படிக்கனும்னா புத்தகம் வாங்க நிறைய செலவாகும். அப்பப்போ காசு கேட்டா தருவியா?

அம்மாவைத் தொந்தரவு பண்ணவாணாம்னு பார்க்கறேன்.''

''அடிப்பாவி இப்படியொரு கேள்வியா? உங்க அம்மா எனக்கு செய்த உதவிக்கு உன் படிப்பு செலவுக்கு மொத்தமும் நானே எடுத்துக்கறேன்.''

''வாணாம்.''

''ஏன்.''

''கடன் பட்ட மாதிரி ஆயிடும்.''

''கடன்பட்டா என்னா?''

''கொடுக்க முடியாம போயிடும்.''

''கொடுக்க முடியாட்டி என்னா?''

''எனக்கு குறையா இருக்காதா. ஆனா நான் தீர்க்காத விடமாட்டேன். எங்கிட்ட கைநீட்டின ஆளுக்கே இலவசமா வைத்தியம் செய்வேன்.''

''என்னைக் கட்டிக்கிட்டா கடன் தீராதா?''

''கட்டிக்கறது பத்தி இப்ப யோசனை பண்ணாதேடின்னு அம்மா சொல்லுதே. அது நல்லது இல்லையா.''

''கட்டிக்க வாணாம்னு முடிவுக்கு வந்துட்டியா?''

''கட்டிக்கிட்டா கஷ்டப்படுவோம்னு கவலையாவும் இருக்கு.''

''என்ன கஷ்டம் வரும்?''

''நான் டாக்டரு. நீ இன்சினியர். ரெண்டு பேரும் ரெண்டு மூலைக்குப் பறப்போம். என்னத்த குடித்தனம் பண்ணமுடியும். இழுத்து பறிச்சுக்கினு இருக்கும்.''

''ஏய்...திமிராயிடிச்சு உனக்கு''

''நீதான் காரணம் அதுக்கு.''

சின்னபாண்டி மௌனமாய் விட்டம் பார்த்து உட்கார்ந்தான்.



''நான் பாட்டுக்கு பூண்டு ஊறுகா போட்டுக்கின்னு இருந்தேன் என்னை உசுப்பேத்தி ஓடவச்சுட்டே. இப்ப எங்க ஓடறேன்னு எனக்கு தெரியலை. எது முக்கியம்னு புரியலை.''

''நான் முக்கியமில்லை லக்ஷ்மி நீ படி.''

''உன்னைமாதிரி நல்லவன் கிடைக்கணுமே. அதுவும் கவலையாதான் இருக்கு. விநோதினி கட்டுரை எழுதியிருக்கே தலைமயிரை புடிச்சு புருஷனை அடிக்கலை நல்லா இருந்த பொண்ணை தள்ளி வச்சி தங்கச்சியை தலிக்க வச்சி வாத்தியாரை சாகடிக்கலே படிச்சிருந்தும் பாழாவலே''

சந்தானலக்ஷ்மி அவன் அருகினில் அமர்ந்து அவன் கையை கோர்த்துக் கொண்டு பேசினாள்.

''படிக்கணும் போலவும் இருக்கு. படிப்பு வாணாம் போலவும் இருக்கு.''

'அப்படி இல்லை லக்ஷ்மி. எதிர்காலம் பற்றி என்ன சொல்ல முடியும்? இதுக்காக எதுவும் நடக்காதயா போயிடும்: நம்ம குடும்பத்தோட பொண்ணு டாக்டருக்கு படிக்கிறது லேசா...? எல்லோரும்தான் கல்யாணம் பண்ணிக்கறாங்க. டாக்டருக்கு யாரோ ஒருத்தர்தானே படிக்க முடியும். நான் மேல வந்து உன்னை தூக்கி விடலையா? நீ மேலவந்து நம்ம குடும்பத்துல நாலு பேரை தூக்கிவிடமாட்டியா?''

சின்னபாண்டி அவள் தலையை வருடினான்.

''வாத்தியம் தூக்கிட்டுப் போனா அஞ்சு ரூபா கூலி. நாலு முழம் வேஷ்டி. இதுல இருந்து நம்ம குடும்பம் மாற வேண்டாமா. இப்போ உனக்கு நான் முக்கியமில்லை லக்ஷ்மி. படிப்பு, படிச்சு முடிச்சுடு.''

''தீர்மானமா சொல்றீயே. வேற எவளையாவது

பார்த்திருக்கியா? கூட வேலை செய்யற பொம்பளையை, டைப் அடிக்கிற பொண்ணை கணக்கு பண்றியா?''

''இதையே நான் கேட்டா நல்லா இருக்காது.'' சின்ன பாண்டி சற்று விலகிக் கொண்டான்.

''நீ கேட்காதே. நானே சொல்றேனே படிபடின்னு நீ உயிரை எடுத்தே நான் சினேகிதி வீட்டுக்கு புக்கு தூக்கிக்கினு போனேன். அவன் அண்ணன் டாக்டரு கடைசி வருஷம். அனாடமி சொல்லிக் கொடுத்தான் பாரு...அடேயப்பா...படிக்கறதுக்கு எவ்வளவோ இருக்கு சின்னபாண்டி. டாக்டருக்கு படிக்கறது ஒரு ஆரம்பம் தான், அப்புறம் எல்லையில்லாத படிப்புதான்.''

''இத்தினி ஆசை வச்சுட்டு அப்புறம் எதுக்கு நம்ம கல்யாணத்தப்பத்தி பேச்சு?''

''ஆசையாவும் இருக்கு பயமாவும் இருக்கு பாண்டி.''

''படிப்பு பத்தி ஆசை. வாழ்க்கைபத்தி பயம் அப்படி தானா?''

''ஆமாம். ராத்திரி ஆஸ்பத்திரியில என்னாடி பண்ண? என்கூட படுக்காம உனக்குஎன்ன ஆஸ்பத்திரிலே வேலைன்னு என் தலைமுடி பிடிச்சு என் புருஷன் என்னை அடிச்சான்னா?''

''வெட்டி எறிஞ்டுவேன்'' சின்னபாண்டி ஆவேசப் பட்டான்.

''கணக்கு வாத்தியார் ஊட்டு கதையாவா?''

இரண்டு பேரும் மௌனமாக இருந்தார்கள். அத்தை எதிரே வந்து உட்கார்ந்தாள்.

''என்ன ஆம்படையான், பொண்டாட்டிக்குள்ள அப்படிப் பேச்சு'' என்று சிரித்தாள்.



''நாங்க ஆம்படையாம் பொண்டாட்டியான்னு சின்ன சந்தேகம். அதான் யோசிக்கறோம்'' சின்ன பாண்டி பதில் சொன்னான்.

''ஏண்டா?''

''அவள் டாக்டருக்கு படிக்கணும்றா.''

''படிக்கட்டும். சீட்டு கிடைக்கட்டும். அப்புறம் பார்த்துக்கலாம்.''

''எதிர்காலம் பத்தி ஒரு குழப்பம்''

''ஒரு குழப்பமும் இல்லை. நாளை பத்தி யோசனை பண்ணோம்னா முடிவே கிடையாது. இன்னிய பத்தி யோசனை பண்ணுவோம். கீரை மடிபடியும் வளர்ந் திருக்கு. அறுத்து விதை உருவணும் வாங்க.''

அவர்கள் பேசாமல் கீரை அறுத்தார்கள். கட்டுகட்டி, தெருவில் உள்ளோருக்கெல்லாம் கொடுத்தார்கள். பாண்டி மண் கிளற லக்ஷ்மி சேறாக்க அத்தை மறுபடியும் விதை தெளித்தாள்.

அன்று தடதடவென்று பத்து நிமிடம் மழைபெய்தது.

# 4

ஆனால் வெகு சிலருக்கே வாழ்க்கை பற்றிய தெளிவு இளம்வயதிலேயே கிடைக்கிறது.

தாயோ தந்தையோ தெளிவாக இருந்தால் போதும். இவர்களில் யாரோ ஒருவர் துணை நின்றாலும் போதும். அல்லது இரண்டு பேருமே உபத்திரவம் செய்யாமல் இருந்தால்போதும். உனக்கு என்ன தெரியும் என்று மட்டம் தட்டாமல் இருந்தால் போதும், உருப்பட்டுவிட முடியும்.

மனைவியைக் கூட தேர்ந்தெடுத்து விடலாம். ஆனால் தாயும் தந்தையையும் யாரால் தேர்ந்தெடுக்க முடியும். நல்ல தாயும் தந்தையும் பூர்வபுண்ணியம். குடி பிறப்பு முக்கியமே இல்லா தவிஷயம் உயர்குடி என்று சொல்பவனுக்கு உதவாக்கரை தந்தை அமைந்தால் உள்ளிருப்பது வெளியே வராமல்போகும், மொட்டாய் கருகும்.

ஆனால் யார் நல்லவர்? யார் கெட்டவர்? அது கீரை விதை போலத்தான் முற்றி அறுத்து மறுபடியும் விதைத்து இடையறாது தொடரும் விஷச்செடிகளும் தொடர்கிறது தான். நல்லவரால் நல்லவர் தூண்டபட்டதை போல கெட்டவரால் கெட்டவர் தூண்டப்படுவர்.

சந்தான லக்ஷ்மிக்கு நல்ல பெற்றோர் வாய்த்தனர். தெளிவான மாமன் தூண்டினான். மருத்துவப் படிப்பு நுழைவுத் தேர்வில் தெளிவாய் இறங்கினாள். திடமாய் செய்தாள். ப்ளஸ் டூ வில் எண்பத்தி ஒன்பது சதவீதமும் நுழைவுத் தேர்வில் தொண்ணூறு சதவீதமும் வாங்கினாள்.

பனிரெண்டு மணிக்கு தபால் வந்ததும் மாமன் கடைக்கு ஓடினாள்.

அப்ளிக்கேஷனுக்கு பஸ் ஏறி சென்னை போனார்கள். மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு உச்சமார்க் என்ன வென்று கேட்டார்கள். அப்ளிகேஷனை பூர்த்தி செய் வதைப்பற்றி சின்னபாண்டி நண்பர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். இசை வேளாளர் எண்பத் தொன்போதரை பர்ஸண்ட் உனக்கு சீட்டு கிடைக்காத வேற யாருக்கு சீட் கிடைக்கும்? சென்னை நண்பர்கள் உற்சாகப்படுத்தினார்கள்.

வகுப்புச் சான்றிதழ் வாங்க கும்பகோணம் திரும் பினார்கள். புருஷன் மனைவியைப் போல் கையைப் பின்னிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். எல்லாமும் பூர்த்தி செய்து இரண்டு மூன்று பேரிடம் கொடுத்து சரி



பார்த்துக் கொண்டு விண்ணப்பப்படிவம் கொடுக்க மறு படி சென்னைக்குப் போனார்கள். கொடுத்துவிட்டு பீச்சில் நடந்தார்கள். சினிமா பார்த்தார்கள். பிளான் டோரியத்தை வியந்தார்கள்.

உரசி உரசி நடக்க மனசு தடுமாறியது. தொட்டு தொட்டுப் பேச உடம்பு சூடாயிற்று.

''பேசாத எங்கனா ராத்தங்கி ஊருக்கு போலாமா.'' சந்தானலக்ஷ்மி தாங்கமுடியாமல் வெட்கம்விட்டு கேட்டாள்.

பெண்ணுக்கு பிரியத்தைக் கொட்டினால் போதும். இறுக்கி ரப்பர் பேண்ட் போட்ட பின்னலை விரித்து உதறுகிற வேகத்தில் வெட்கம் விடுவாள்.

''அத்தைக்கிட்ட ஒரு வார்த்தை கேட்கணும்'' சின்னபாண்டி பதில் சொன்னான்.

''அட ச்சீ வெவஸ்தைக் கெட்டவனே'' சந்தானலக்ஷ்மி சின்ன அவமானத்துடன் சீறினாள்.

''விவஸ்தை கெடமாட்டேன்னு தானே அத்தை உன்னை என்கூட அனுப்பிருக்கு. அத்தை சரின்னுட்டா கும்பகோணத்துல ராவென்னா, பகலென்னா.''

''ஆமாம். உங்க அத்தை பாலும் பழம் கொடுத்து ரூம்ல வெச்சு பூட்டிடும் நம்மளை.''

''வேணாம்பா பாண்டியன்னு அத்தை சொல்லிடிச் சின்னா விலகிடுவேன்.''

''அன்பை செய்கைலதானே சொல்லுவாங்க''

''ஆமாம்.''

''இது அன்பா ஆத்திரமா அதை முதல்ல புரிஞ்சுக் கணும்.''

''எப்பா...என்னை சாவடிக்கிற நீ. நான் பூண்டு ஊறுகா பொம்பளையாவே இருந்திருக்கலாம். இந்நேரம் வயித்துல புள்ளை வளர்ந்திருக்கும்.''

''இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடல. ரிசல்ட் வந்தா நான் டாக்டர் படிப்புக்கு வரலடான்னு எழுதி போட்டுடு.''

''ஐயோ.''

''அப்போ பொத்திக்கிட்டு சும்மா வா.''

''பெரிய ஒழுங்கு மயிரு நீ.'' சந்தானலக்ஷ்மி சீறினாள்.

பெண்ணுக்கு கோபம் வந்தாலும் வெட்கம் விடுவது வழக்கம். அதுவும் புருஷன் இல்லாத கோபம் பெரிய ஆத்திரம் கொடுக்கும்.

''ஒழுங்குங்கிறது ஒரு கட்டுப்பாடு அல்ல ஒரு அமைதி. ஆடிட்டோம்னு வச்சுக்க அமைதிக்கு ரொம்ப அவஸ்தைப் படணும்.''

''எப்படி இத்தினி தெடமா இருக்கே?''

''இது யாரோ போட்ட பிச்சை. அத்தையும் கணக்கு வாத்தியாரும்தான் காரணம்.''

இருபது நாளில் ரிசல்ட் வந்தது. அவள் நம்பர் இருந்தது. மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் என்று கடிதம் வந்தது. தெரு முழுக்க சந்தோஷப்பட்டது. பள்ளி முழுக்க வியந்தது. உறவுகள் மொத்தமும் மகிழ்ந்தன. வெவ்வேறு ஊரில் உள்ள உறவினர்களுக்கு சேதி போயிற்று.

அவளை வாழ்த்த வந்தவர்கள் சின்னபாண்டியை பற்றியும் விசாரித்தார்கள்.

''முறைப்பெண் இருக்கச்சொல்ல வேற பொண்ணை கட்டுவாங்களா?''



''முறைதான். கட்டணும்னு கட்டாயமில்லை.'' அத்தை விளக்கம் சொன்னாள்.

''அப்ப எங்க வூட்டுல பொண்ணு இருக்கு. வந்து பார்த்துட்டு போறது. பி.ஏ. தமிழ் படிச்ச பொண்ணு தான்.''

ஆறேழு குடும்பத்தினர் அவனுக்கு பெண் கொடுக்க வந்தார்கள். அதில் பிரபலமான சங்கீதக்காரர்களும் இருந்தார்கள்.

''இன்னும் அஞ்சு வருஷம் காத்துன்னு இருக்கணும் மில்லே, முறைப் பெண்ணை கட்றதா இருந்தா. அதுக்கு அப்புறமும் படிக்கணுமில்லே. நம்ம பொண்ணு நல்லா சமைக்கும். பரபரன்னு வீட்டு வேலை செய்யும் ஒரு பூண்டு கொழம்பு வைக்கும் பாருங்க...அப்படியொரு கைவாகு அதுக்கு. ஒத்த பொண்ணு நல்ல மாப்பிள் ளையா கிடைக்கனுமோன்னு கவலையா இருக்கு'' அத் தையிடம் அவர்கள் பேசப்பேச வாசலில் உள்ள சின்ன பாண்டிக்கு அறையில் சுருண்டு கிடந்த சந்தானலக்ஷ்மிக் கும் துக்கம் பொங்கியது மனது இருண்டது எல்லோரும் போன பிறகு சந்தானலக்ஷ்மி அம்மாவை போய் உலுக்கி னாள்.

''என்னை ஏன்டி படிக்கவச்சே? என்னை எதுக்கு உசுப்பேத்திவிட்டே? நான் டாக்டர் ஆவலேன்னா உனக்கு என்னா? எனக்கு மணக்க மணக்க பூண்டு கொழம்பு வைக்கத் தெரியாதா? என்னென்னமோ சொல்லி என்னை ஏமாத்திட்டடி, உனக்கு நல்ல ஆம் படையான் கிடைச்ச திமிர்லே என்னை சகாரா பாலை வனத்துக்கு அனுப்பறேடி.'' வாய்விட்டு அழுதாள்.

சின்னபாண்டி உள்ளே வேகமாய் போனான். அத்தையிடமிருந்து விலக்கி அவளை அணைத்துக் கொண் டான். முதுகு தடவினான். பிடரி வருடினான். இரண்டு கன்னங்களையும் கைளில் ஏந்தி நெற்றியில் முத்தமிட்டான்.

'வெண்ணை திரண்ட நேரத்துல தாழி உடைப்பாங்
களா? எந்த டாக்டருக்கும் நல்ல ஆம்படையான் கிடைக்க
மாட்டான்னு சட்டம் போட்டிருக்கா? எதிர்த்து நீச்சல்
போடற நேரத்துல இறங்கின கரைய திரும்பிபார்க்காதே.
ஏறவேண்டிய கரையைப் பாரு. இடுப்பு தண்ணில
இறங்கிட்ட. எதிர்த்து நீந்து. நீந்த நீந்த பயம்தானாப்
போகும். எம் மேல உனக்கு அன்பு. எதனாசெய்யணும்னு
பார்க்றே, டாக்டர் படிப்பு தள்ளிட்டா நான் சந்தோஷ
மாயிருவேனா? இல்லை உதறிட்டு நாளைக்கு பூண்டுக்
கொழம்பு வைக்கிற போது மனசு ஒப்பி வைக்க முடியுமா?
டாக்டர் படிப்பும் போயி, பூண்டுக்கொழம்பும் கருகி
குழப்பம் மிஞ்சாதா? நான் இங்கே வரச் சொல்ல தானே
உனக்கு வேர்க்குது, என்னை பார்க்கிற போது தானே
ஐயோ உட்டுட்டோமேன்னு தோணுது. இனி நான்
வரலை, எனக்கு அத்தையும் இல்லை. அத்தைக்கு
பொண்ணுமில்லை. ரெண்டு தடவ ஒரசிஒரசி மெட்ராஸ்
போனதுல ஏக்கம் வந்துடிச்சி, இந்த வாட்டி நீயா போ.
உன் பெட்டிய தூக்கிட்டு தனியா போ. நீ கொடுத்த என்
பெட்டிய தூக்கிட்டு நான் வேற எங்கனா போறேன்.''

''லக்ஷ்மி, உலகம் ரொம்ப பெரிசு. அதுல நிறைய
மனுஷாள் உண்டு. அங்கு நல்லவங்களுக்குப் பஞ்ச
மில்லை. எங்கோகெட்டத பார்த்துவிட்டு எல்லாம் கெட்ட
துன்னு நினைக்கிறது தப்பு. ஆம்பளைய மொத்தமும்
சந்தேகப்பட்டு அந்த அம்மா கட்டுரை எழுதினாங்க.
புருஷன் சந்தேகப்பட்டா அது தப்புன்னாங்க. சந்தேகப்
படாதே. நம்பிக்கையோட இரு, வெறுத்தா வெறுத்ததே
உன்னைத் தொடரும். விரும்பினா எதிர்பார்ப்பு அதிக
மாகும். விருப்பம் வேணாம் வெறுப்பும் வேணாம்
சாதாரணமா இரு. நான் வரேன்.''

அவளை விட்டு மெல்ல நகர்ந்தான். அவனை அவள்
இழுத்துப் பிடித்தாள்.

''சரி எனக்குப் புரியுது.''



''அப்ப ஏன் அழுகை?''

''நான் அழுவலே.''

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சந்தோஷமா
சண்டை போட்டு பிரிய வேணாம்
கொஞ்ச நேரம் பேசிட்டு போங்க. அம்மா எதிரிலேயே
அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். அவன் அவள்
இடுப்பைச் சுற்றிக் கொண்டான்.

அத்தை காபி கலந்து இரண்டு டம்ளர்கள் எடுத்து
வந்தாள். மேஜையில் வைத்தாள் ''நான் கடைத் தெருவுக்
குப் போய் ரெண்டு உள்பாவாடை வாங்கினு வரேண்டி.
எல்லாம் பழசா கிடக்கு புதுசா போடு''

வாசல் கதவை தாழ்ப் போட்டு பூட்டினாள்.

''கடைசியா பேசறப்போ யாரும் தொந்தரவு
பண்ணப் போறாங்க... அதான் பூட்டிட்டு போறேன்''
என்றாள்.

சந்தானலக்ஷ்மிக்கு சிரிப்பு வந்தது.

''எங்க ஆத்தா ரொம்ப திமிர் பிடிச்சது இல்லே''
காபி டம்ளரை அவனிடம் நீட்டினாள்.

''கெட்டிக்காரங்களுக்கு திமிர் இருக்கத்தான் செய்
யும்.'' சின்னபாண்டி பதில் சொன்னான்

''அன்போட அறிவு இருந்தா இன்னும் திமிர்
அதிகமாயிடுமில்லே? எதைப் பத்தியும் அச்சப்பட
மாட்டாங்கல்லே.''

''ஆமாம். உனக்கு இப்ப அச்சமா இருக்கா?''

''எதுக்கு அச்சம்?''

''நானும் திமிர்பிடிச்சவ எங்க ஆத்தாளைப் போல.''

''என்னைப் பார்த்தா எப்படி தெரியுது?'' சின்ன
பாண்டி வியப்போடு கேட்டான்.

''திமிரின் மொத்த உருவம்.''

''தானா?''

''வேறு யார்? திமிசுகட்ட மாதிரி பொட்டச்சி படுக்க கூப்பிட்டப்பக் கூட தள்ளி ஓடறியே நானுங்கிற திமிர் தானே அது''

''அது தெளிவு அந்தத் தெளிவு திமிராதான் படும். ஏங்கறவளுக்கு வேதனை கொடுக்கும் இன்னமும் ஏக்கம் இருக்கா உனக்கு.''

''கொன்னூட்டிங்களே ரெண்டு பேரும். அம்மாளும் அம்மானுமா சேர்ந்து அழிச்சுட்டீங்களே அதை.''

''எதைச் சொல்றே?''

''கடைத்தெருவுக்கு பூட்டிட்டு போனாளே, உன்னையும் என்னையும் வுட்டுட்டுத்தானே போனா, நெருப்பையும் பஞ்சையும் பக்கத்துல பக்கத்துல வச்சுட்டு ரெண்டு பேர் தலையிலையும் நல்ல புத்திங்கிற தண்ணி ஊத்திட்டு போறாளே. போறபோது புதுசா பாவாடை கொண்டு வரேன்னுட்டு போறாளே.''

''கோவமா இருக்கியா என்மேல.''

''ஆமாம். கோபத்துல சாபம் கொடுக்கப் போறேன்.''

''என்ன சாபம்...லக்ஷ்மி?''

''உனக்கு பூண்டுக் கொழம்பு பொண்டாட்டியா கிடைக்கணும். அவளோட நீ சந்தோஷமா இருக்கணும். உன் புள்ளைய நீ எங்கிட்ட வைத்தியத்துக்கு எடுத்தாரணும். அந்த பூண்டுக் கொழம்பு பொம்பளை என் கையை புடிச்சிக்கிட்டு 'டாக்டரம்மா என் குழந்தையை காப்பாத்தின தெய்வம் நீங்க'ன்னு நன்றி சொல்லணும். அப்போ நான் உன்னை பார்த்து எதுக்கு இந்த ட்ராமா அப்படின்னு அதட்டணும்.''

''அடியே நான் உனக்காகவும் பண்ணலே. உன் புள்ளைக்காகவும் பண்ணலே. உன் புருஷனை மனசுள்ள நினைச்சுட்டு உன் புள்ளைக்கு வைத்தியம் பண்ணினேன்டின்னு மனசுக்குள்ள சொல்லிக்கணும். நான் சொன்னது உனக்குப் புரியும் நீ நூறு ரூபாய் டேபிள்லே வச்சுட்டு வாய் பேசாத போய்டு நான் அந்த நூறு ரூபாய் செலவு பண்ணமாட்டேன். நெஞ்சுல வச்சுட்டு அழுவேன்.'' சந்தானலக்ஷ்மி அழுதாள்



''நானும் அழுவேன் லக்ஷ்மி. கண்ணுல தண்ணி விடாம மனசுக்குள்ள அழுவேன்.'

''என் புள்ளைக்கு நீ வைத்தியம் பண்றப்போ உன்னையே பார்த்துட்டு இருப்பேன். இது நான் முத்தம் கொடுத்த உதடு கட்டியணைச்ச முதுகு. தொட்டுத் தழுவுன இடுப்புன்னு பார்த்துட்டு இருப்பேன். ராத்திரி பொண்டாட்டி பக்கத்துல படுத்துட்டு சந்தானலஷ்மி மாதிரி ஒரு டாக்டர் கெடைச்சது ரொம்ப பாக்கியம்னு நான் சொல்லுவேன்.''

''ஆமாங்க நம்ம புள்ளையும் நாம டாக்டராக்கணும்'' அப்படின்னு என் பொண்டாட்டி சொல்லணும்.

''அந்த டாக்டரம்மாளுக்கு பூண்டுக் கொழம்புன்னா ரொம்ப உசிறா. பூண்டு ஊறுகாய்ன்னா ரொம்ப புடிக்குமா எனக்கு தெரியாது எங்க அத்தை சொல்லும் இதெல்லாம் நீ நல்லா பண்ணுவியே பதமா செய்து எடுத்துன்னு போய் கொடேன் அப்படின்னு சொல்வேன். என் பொண்டாட்டி ராத்திரியே எழுந்து உட்கார்ந்து பூண்டு ஊறுகாய் கிளற ஆரம்பிச்சிடுவா''

''நல்லவங்களா இருக்கிறது. வேதனையில்லே?'' சந்தானலக்ஷ்மி அவன் மடியில் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

சின்னபாண்டி பதில் சொல்லாது இருந்தான்.

''நாம நல்லவங்களா, கெட்டவங்களா?''

''ரெண்டுந்தான்'' பதில் சொன்னான்.

''எப்படி சொல்றே?'' அவள் சந்தேகம் கேட்டாள்.

''நெல்லு விதைச்சாலும் நிறைய புல்லு வளரத்தான் செய்யும். அப்பப்போ களைய எடுத்தாலும் ரெண்டு ஒண்ணு இருக்கத்தான் செய்யும்.''

அவன் அவளை தடவிக் கொடுத்தான்.

''நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கு அங்கே பொசியுமாம்...'' கவிதை சொன்னான்.

''எது வாய்க்கால் நீர்?'' அவள் அவன் கழுத்தை கட்டிக் கொண்டு கேட்டாள்.

''காதல், அன்பு, பிரேமை'' அவன் பதில் சொன்னான்.

''அன்பால தப்பு நடக்குமா?''

''வாத்தியார் வீட்டுல நடக்கல்லே. இப்போ இங்கே நாம தேவையில்லாத கட்டிப்புடிச்சிகிட்டு கிடக்கல்லே. படிக்கட்டுமா படிக்க வாணாமான்னு ஊசலாடல்ல. இதுக்கும் அன்புதானே காரணம்.''

''ஐயோ மழை'' அவள் துள்ளி எழுந்தாள்.

சடசடத்து மழைத் துளிகளுக்கு நடுவே போய் இரண்டு பேரும் முற்றத்து உலர் துணிகளை உருவிக் கொண்டு வந்தார்கள்.

மழை பலமாய் பெய்தது. ஓட்டின் ஜலம் துதிக்கை போல நீண்டு முற்றத்தில் விழுந்தது. அவர்களால் பேசக் கூட முடியவில்லை மழையையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வாசல் திறக்கும் சத்தம் கேட்டது.

''இன்னா பேசி முடிச்சாச்சா?'' சொட்டச் சொட்ட நனைந்தபடி அத்தை உள்ளே வந்தாள்.

''என்னா இப்படி திடீர்ன்னு மழை'' உதறிக் கொண்டு கேட்டாள்.

''உனக்காக பெய்யுது அத்தை'' சின்னபாண்டி பதில் சொன்னான்.

சிரித்தபடியே பிளாஸ்டிக் பையில் ஜாக்கிரதையாய் வைத்திருந்த புது உள்பாடையை அந்த நல்ல மனுஷி தன் மகளிடம் நீட்டினாள்.

பூமி குளிர்ந்த நேரத்தில் சந்தானலக்ஷ்மி டாக்டருக்கு படிக்க சென்னைக்கு ரயில் ஏறினாள்.

மறுநாள் சேறு மிகுந்த வயல் தாண்டி சின்னபாண்டி பெண் பார்க்கப் போனான்.

அப்போதும் மழை பெய்தது.

முற்றும்.